# தமிழரசு

செய்தி - மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மே – ஜூன் 2013

விலை ரூ.40/–



## சாதனை புரிந்த ஈராண்டு
## சரித்திரம் பேசும் பல்லாண்டு

# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**
**செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு 2044
விஜய வருடம் சித்திரை – வைகாசி
மே 2013

மலர் : 44 விலை : ரூ.20 இதழ் : 11


> “மக்கள் தங்களது அத்தியாவசியத் தேவைக்கு அரசை எப்போதும் சார்ந்து இராமல் தங்கள் சொந்தக் கால்களிலேயே நின்று, தங்களுக்குத் தேவையானதை தாங்களே வாங்கிக் கொள்ளும் அளவிற்கு அவர்களது பொருளாதார நிலை உயர வேண்டும் என்பது தான் எனது தலைமையிலான அரசின் எண்ணம்.”
>
> –மாண்புமிகு முதலமைச்சர்
> செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்


**ஆசிரியர் - வெளியிடுபவர்:**

ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

**நிருவாக ஆசிரியர் :**
டி.ஆர். ஜெயஸ்ரீ
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

**முதன்மைப் பொறுப்பாசிரியர் :**
க. சண்முகசுந்தரம்
உதவி இயக்குநர்

**பொறுப்பாசிரியர்கள்/**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் :**
ச. ஜெயலலிதா
இரா. சுரேஷ்
அ. மகேஸ்வரி

**உதவி ஆசிரியர் :**
சு. கமலா

**நிருபர் :**
தி. பெரியார் சாக்ரடீசு

**இதழ் உதவியாளர் / கணினி வடிவமைப்பு :**
அ. மதன்

**கணினி வடிவமைப்பு :**
இரா. பாலாஜி



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110, அண்ணாசாலை, சென்னை–600 002.

தொலைபேசி : 28520407/ 28520408

நிகரி : 28520407

மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com

இணையதளம் : www.tndipr.gov.in


## இந்த இதழில்....


- **கண்ணயராப் பணி புரியும் காவல்துறை**
  உள்துறை – பொதுத்துறை ..... 1
- **ஜனநாயகம் தழைக்கும் சட்டமன்றம்**
  சட்டமன்றப் பேரவைச் செயலகம் ..... 9
- **ரூ.1 இலட்சம் கோடியைத் தாண்டிய வரவு–செலவுத் திட்டம்!**
  நிதித்துறை ..... 11
- **மின்சக்தியை உருவாக்க வலுவான அடித்தளம்**
  எரிசக்தித்துறை ..... 15
- **நல்லாட்சிக்கு சாட்சியமாகும் நகராட்சி நிருவாகம்**
  நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் (ம) சிறைச்சாலைகள் துறை ..... 18
- **நலிந்தோருக்கு வீடுகள் நல்லமைப்புடன் நகர்ப்புரங்கள்**
  வீட்டுவசதி (ம) நகர்ப்புர வளர்ச்சித்துறை ..... 37
- **சிறுதொழில் வளர்த்திடும் சிறப்பான முயற்சிகள்**
  குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை ..... 42
- **சரித்திரம் படைக்கும் சமூக நலத்துறைப் பணிகள்**
  சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ..... 44
- **சிகரம் தொடும் உயர்கல்வி**
  உயர்கல்வித்துறை ..... 54
- **விவசாயிகளை உயர்த்தும் வேளாண்மைத்துறை**
  வேளாண்மைத்துறை ..... 60
- **நாட்டுயர்வுக்கு வழிகோலும் கூட்டுறவு**
  கூட்டுறவுத்துறை ..... 73
- **சிறப்பான திட்டங்களால் பெருகிடும் வனவளம்**
  வனத்துறை ..... 80
- **சாதனைப் படைக்கும் சாலைப் பணிகள்**
  நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ..... 84
- **உயர் அளவில் உணவு மானியம்!**
  உணவுத்துறை ..... 91
- **புதிய திட்டங்களால் வளம் கொழிக்கும் பால் வளம்**
  பால்வளத்துறை ..... 94
- **சீர்மிகும் திட்டங்களால் சிறப்பாகும் சுற்றுச்சூழல்**
  சுற்றுச்சூழல்துறை ..... 96

## இந்த இதழில்....


- **புதுமைகள் படைக்கும் பொதுப்பணித்துறைப் பணிகள்**
  பொதுப்பணித்துறை ........ 99
- **கால்நடை மேம்பாட்டில் கணக்கற்ற சாதனைகள்**
  கால்நடைப் பராமரிப்புத்துறை ........ 104
- **புதுயுகம் படைக்கும் தொழில்துறை**
  தொழில்துறை ........ 109
- **நெசவாளர் நலன்காக்க நிறைவானத் திட்டங்கள்**
  கைத்தறி மற்றும் துணிநூல் துறை ........ 112
- **பன்னாட்டுப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலாத்துறை**
  சுற்றுலாத் துறை ........ 115
- **முத்திரைப் பதிக்கும் வணிகவரி – பத்திரப்பதிவு**
  வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை ........ 119
- **அகிலம் போற்றும் ஆதி திராவிடர் நலத்துறைப் பணிகள்**
  ஆதிதிராவிடர் நலத்துறை ........ 121
- **பயன்மிகு திட்டங்களால் பயணங்கள் இனிதாகும்**
  போக்குவரத்துத்துறை ........ 125
- **மீனவர் துயர் துடைக்கும் மீன்வளத்துறை**
  மீன்வளத்துறை ........ 128
- **மதிநுட்பம்மிகு திட்டங்களால் மதிப்புறு தகவல் தொழில்நுட்பம்**
  தகவல் தொழில்நுட்பவியல்துறை ........ 133
- **மக்கள் திட்டங்களை மக்களிடம் சேர்க்கும் சீர்மிகு பணிகள்**
  செய்தி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத் துறை ........ 135
- **தொழிலாளர்கள் நலனில் தொய்வடையாப் பணிகள்**
  தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை ........ 143
- **நலிவுற்ற மக்களைப் பொலிவூட்டும் அக்கறை**
  பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ........ 146
- **ஆலயங்கள் தோறும் அறம் வளர்க்கும் அரும்பணிகள்**
  இந்துசமயம் மற்றும் அறநிலையங்கள் துறை ........ 154
- **வளம் சேர்க்கும் வருவாய்த்துறை**
  வருவாய்த்துறை ........ 157
- **கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு,**
  **கிராமிய சிறுதொழிலுக்கு ஊக்கம்**
  கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்துறை ........ 162
- **இணையில்லாத் திட்டங்களால் கல்வி மேம்பாடு!**
  **இளைஞர் முன்னேற்றம்!**
  பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை ........ 164
- **மக்கள் நல்வாழ்வில் மாறாத அக்கறை**
  மக்கள்நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ........ 182






# கண்ணயராப் பணி புரியும் காவல்துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



**காவல்துறை**

- ✶ தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் ஒரே ஆண்டில் மிக அதிக அளவாக 12,152 காவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

- ✶ தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகம், காவலர் பயிற்சி கல்லூரி, காவலர் தேர்வு பள்ளிகள் மற்றும் 13 பணியிடை பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் ரூ.163 கோடி ஒப்பளிப்பில் உள்பயிற்சி கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

- ✶ காவலர் பணிகளை மேம்படுத்திட 1202 வாகனங்கள்.
- ✶ ஐந்தாண்டுகளில் காவலர்களுக்கான குடியிருப்பு தேவைகளை 100 சதவீதம் நிறைவு செய்ய முடிவு; 6078 குடியிருப்புகள் கட்டுமானப் பணி.
- ✶ காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் “உங்கள் சொந்த இல்லம்” திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மேலக்கோட்டையூரில் ரூ.456 கோடி செலவில் 2,673 வீடுகள் கட்டும் பணி 26.10.2012இல் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், மகளிருக்கான பாதுகாப்பை உறுதி செய்திட அவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களை தடுத்திட 13 அம்ச செயல் திட்டம் அறிவிப்பு.
- ✶ காவல் துறையில் பெண்களை தேர்வுசெய்ய முன்னுரிமை வழங்கப்பட்டு 2012ஆம் ஆண்டில் 1,835 பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
- ✶ ரூ.72 இலட்சம் செலவில் காவல்துறை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்காக 36 புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள்.
- ✶ ரூ.82 கோடி செலவில் 164 காவல் நிலையங்களுக்கு புதிய சொந்தக் கட்டடங்கள்.
- ✶ ரூ.26 கோடி செலவில் 24 புறக்காவல் நிலையங்கள் நிலை உயர்வு.
- ✶ ரூ. 114 கோடி செலவில் காவல் நிலையங்கள், உயர் அலுவலகங்களுடன் கணினி மூலம் இணைக்கப்பட குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் திட்டம் (CCTNS). இதற்கென ரூ.5 கோடி ஒப்பளிப்பில் 1,000 புதிய கணினிகள்.
- ✶ ரூ.1.32 கோடி செலவில் சேலம் மற்றும் திருநெல்வேலியில் டெட்ரா தொழில்நுட்ப நவீன கட்டுப்பாட்டு அறைகள் (Tetra Based Modern Control Room) நிறுவப்பட்டுள்ளன. ரூ.4 கோடி செலவில் கோவை மற்றும் மதுரையில் நவீன கட்டுப்பாட்டு அறைகள் நிறுவும் பணி. ரூ.31 கோடி செலவில் சென்னை மற்றும் திருச்சியில் உள்ள காவல் ஆணையரகங்களுக்கு இலக்கு அடிப்படையில் (Digital Based) இயங்கும் காவல் வானொலி தொடர்புத் திட்டம் ஒப்பளிப்பு.
- ✶ காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் நிலை வரையுள்ள காவல் பணியாளர்களுக்கான காப்பீட்டுத் தொகை ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
- ✶ நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை பணியாளர்கள் ஆகியோருக்கு காவல்துறை சிறப்பு அங்காடிகள் ஆவடி, மதுரை மற்றும் திருச்சியில் தொடக்கம். இதன்மூலம் 1 இலட்சத்திற்கு மேற்பட்ட காவல் குடும்பங்கள் பயன்.



- ✶ காவலர் முதல் காவல் ஆய்வாளர் நிலை வரை இடர்படித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 270லிருந்து ரூ.300ஆக உயர்வு. இது 2013–2014ஆம் ஆண்டில் ரூ.400 ஆக உயர்த்தப்பட்டது. காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு இடர்படி மாதம் ஒன்றுக்கு ரூ.315லிருந்து ரூ.350ஆக உயர்வு. இது 2013–2014ஆம் ஆண்டில் ரூ.450ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் குடும்பத்தினருக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி உச்சவரம்பை விட மருத்துவ செலவு அதிகமாகும் போது அதனை ஈடுசெய்ய ரூ. 2 கோடி காவல் துறை கருணைக் கொடை நிதியத்திற்கு வழங்கல்.

- ✶ ரூ.14 கோடி ஆண்டு செலவினத்தில், காவலர் நிலையிலிருந்து காவல் ஆய்வாளர்கள் வரையிலான காவல்துறை பணியாளர்களுக்கு நியாய விலைக் கடைகளில் விலையில்லா அரிசி, 50 சதவிகித மானியத்தில் கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும் பருப்பு வகைகள் வழங்கப்படுகின்றன.

- ✶ மோப்ப நாய்களுக்கு நாள் ஒன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ. 54 என்பது ரூ. 85 ஆகவும், பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.250 என்பது ரூ. 300 ஆகவும் உயர்வு.

* ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை 11,622 முதல் 16,000 ஆக உயர்த்த சிறப்பு நடவடிக்கை. அவர்களுக்கான தினப்படி ரூ.65லிருந்து ரூ.150 ஆக உயர்வு. மேலும் சென்னைப் பெருநகர ஆணையகரத்தில் இரவுப் பணிக்கான படி ரூ. 200 ஆக உயர்வு.
* 117 சிறுவர் மற்றும் சிறுமிகள் குழு அமைப்பு. 2013 – 2014ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 3 கோடி செலவில் 400க்கும் மேற்பட்ட குழுக்கள் அமைத்திட ஒப்பளிப்பு. இக்குழுக்களுக்கான ஆண்டு மானியம் ரூ.66,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்வு.
* தமிழ்நாடு காவலர் சிறப்பு இளைஞர் படையை உருவாக்குவதற்கான சட்டம் 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சட்டமன்றத்தில் நிறைவேற்றம். 2013–2014ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 10,500 இளைஞர்கள் இப்படைக்கு சேர்க்கப்படுவர்.
* சென்னையில் உள்ள காவலர்களுக்கான படைக்குடியிருப்பு ரூ. 3 கோடி செலவில் புதுப்பிப்பு.

**தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை**

* வீர, தீர செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்), 2012ஆம் ஆண்டில் 5 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பதக்கம் பெறுவோருக்கு மாதம் ரூ.500 பணப்பயன்.
* பல மாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்தின்போது விரைந்து மீட்புப் பணியை மேற்கொள்ள ஏதுவாக சென்னை நகரின் பயன்பாட்டிற்காக ரூ.6 கோடி செலவில் 54 மீட்டர் உயரமுள்ள வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி.
* சின்ன சேலம், டி.கல்லுப்பட்டி மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் ரூ.2.75 கோடி செலவில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் தொடக்கம்.
* இராமநாதபுரம்–சிவகங்கை கோட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு சிவகங்கை தலைமையிடமாகக் கொண்டு ரூ. 42 இலட்சம் செலவில் புதிய கோட்டம் 17.2.2012 அன்று உருவாக்கம்.
* தீயணைப்புப் பணித்திறனை மேம்படுத்த ரூ. 4.16 கோடி செலவில் 4 நுரை தகர்வு ஊர்திகள், 9 தரம் உயர்த்தப்பட்ட நவீன ரக நீர்த்தாங்கி வண்டிகள், 8 சிறிய ரக நீர்த்தாங்கி வண்டிகள் மற்றும் 22 கோம்பி கருவிகள்.
* தீயணைப்புப் பணியாளர்களுக்கு ரூ. 28 கோடி செலவில் தீ பாதுகாப்புக்காக 1,980 ஜோடி தற்காப்பு உடைகள்.
* பணியின்போது உயிரிழக்கும் பணியாளர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் குழு காப்பீட்டுத் தொகை ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்வு.

- மாத இடர்படி, உதவி கோட்ட அலுவலர் நிலை வரை ரூ.180லிருந்து ரூ.400 ஆகவும், கோட்ட அலுவலர்களுக்கு ரூ.210லிருந்து ரூ.450 ஆகவும் உயர்வு.

**புதிய அறிவிப்புகள் 2013–2014**

- 2012–2013ஆம் ஆண்டில் 4,096.70 கோடி ரூபாயாக இருந்த காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு, 2013–2014ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 4,706 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- காவல் துறை நிர்வாகத்தை வலுப்படுத்த 30 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் நியமனம்.
- வாகன விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டு 100 புதிய நவீன உயிர் காக்கும் ஊர்திகள் காவல் துறைக்கு வழங்கப்படும்.
- உள்சுற்று இணைப்பு தொலைக்காட்சி (CCTV) வசதியை 251 காவல் நிலையங்களில் ரூ.1.75 கோடி செலவில் அமைக்கப்படும்.
- சென்னை மாநகரத்தில் கூட்ட நெரிசல், மக்கள் புழக்கம் அதிகமுள்ள பகுதிகளை கண்காணிக்க 2,700 இடங்களில் உள் சுற்று இணைப்புத் தொலைக்காட்சி வசதிகள் (CCTV) பொருத்தப்படும்.
- 200 சென்னை மாநகர ரோந்து காவல் வாகனங்களில் கண்காணிப்பு காமிராக்கள் 2 கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படும்.
- உள்வட்ட உபயோகிப்பாளர் குழு (CUG) திட்டத்தை அனைத்து காவல் துறையினருக்கும் கட்டணம் ஏதுமில்லாமல் நீட்டிப்பதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கு சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படும்.
- 200 ஊரக காவல் நிலையங்களில் உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கப்படும்.
- வீர தீர செயல்களுக்கான பதக்கம் பெறும் சாதனையாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.
- 500 காவல் நிலையங்களில் தடையில்லா மின்சாரம் வழங்க சூரிய சக்தியால் இயங்கும் அமைப்புகள் 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.
- கடலோர காவல் படையை வலுப்படுத்த 30 கடல் சார் காவல் நிலையங்கள் ரூ. 22 கோடி செலவில் அமைக்கப்படும்.
- உங்கள் சொந்த இல்ல திட்ட பயனாளிகள் மற்றும் பிற காவல் பணியாளர்களின் நலனுக்காக மேலக்கோட்டையூரில் உறைவிடப்பள்ளி அமைக்கப்படும்.

- ✶ குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கண்காணிக்க சென்னை காவல் ஆணையரகத்திற்கு 100 மூச்சு பகுப்பாய்விகள் ரூ. 50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.
- ✶ சமூக விழாக்கள் மற்றும் பயிற்சிகள் நடத்துவதற்காக சென்னை மாநகர காவலர் குடியிருப்புப் பகுதிகளில் சமூக நலக் கூடங்கள் ரூ.6 கோடி செலவில் அமைக்கப்படும்.
- ✶ காவலர் மருத்துவ உதவி சிறப்பு நிதியத்திற்கான அரசு மானிய உதவித் தொகை ரூ. 2 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.
- ✶ மகளிர் காவல் நிலையங்களில் உள்ள நடமாடும் ஆலோசனை வழங்கும் மையங்களை மேம்படுத்த ரூ. 5.70 கோடி வழங்கப்படும்.
- ✶ காவல் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உயர்மட்ட கல்விக்கான ஒரு பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்படும்.
- ✶ ரோந்து பணிகளை திறம்பட மேற்கொள்ளும் வகையில் சென்னை மாநகர காவல் ஆணையரகத்திற்கு 1,000 இரு சக்கர மோட்டார் வாகனங்கள் ரூ.4.50 கோடி செலவில் வழங்கப்படும்.
- ✶ சென்னை காவலர்களுக்கு உணவுப்படி ரூ.100இல் இருந்து ரூ.200 ஆகவும், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு ரூ.75லிருந்து ரூ.150 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.
- ✶ குழந்தைகளை கடத்துபவர்கள் மற்றும் பாலியல் குற்றவாளிகள் குண்டர் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்படுவர்.
- ✶ பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றிட ஏதுவாக, நீலகிரி மாவட்டத்தில் ஊட்டியை தலைமை இடமாக கொண்டு புதிய தீயணைப்புக் கோட்ட அலுவலகம் 2013–2014ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்படும்.
- ✶ விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியில் 5 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் துரைப்பாக்கம், வேளச்சேரி, விருகம்பாக்கம், மதுரவாயல் மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் மொத்தம் 3.70 கோடி ரூபாய் செலவினத்தில் 2013–2014ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

❖ ❖ ❖



பொதுத்துறை

# விடுதலைப் போராட்ட வீரர் வாழ்வுயர வழிவகைகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



**மனித உரிமைகள் துறை**

★ தேசிய மனித உரிமை ஆணைய வழக்குகளை மின் ஆளுமை மூலம் கண்காணிக்கும் முறை அறிமுகம்.



★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக 03.10.2011 அன்று ரூ.3.48 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணைய புதிய கூடுதல் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

**விடுதலைப் போராட்ட வீரர்கள் நலன்**

★ விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவப்படி ரூ.15/–லிருந்து ரூ.100/–ஆக உயர்வு. அரசு மருத்துவமனைகளில் ‘அ’ வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சை, புதிய மருத்துவமனைகளில் உயர்தர சிகிச்சை.

★ விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் ரூ.5,000/– லிருந்து ரூ.7,000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.2,500/– லிருந்து ரூ. 3,500/– ஆகவும் உயர்வு.

★ விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவப்படி ரூ.100/–லிருந்து ரூ.500/– ஆக உயர்வு.

★ வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருதுபாண்டியர் சகோதர்களின் வழித்தோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நேரடி வாரிசுப் பேரன் திரு. ஆ. உலகநாதன் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஓய்வூதியம் ரூ. 1,000/– லிருந்து ரூ. 2,000/– ஆக உயர்வு.

❖ ❖ ❖



# ஜனநாயகம் தழைக்கும் சட்டமன்றம்

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத்தலைவர்
திரு. **ப.தனபால்** அவர்கள்





- ✶ பாரம்பரியம் மிக்க புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 23.5.2011 முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மீண்டும் கூடத் தொடங்கியது.
- ✶ சட்டமன்றப் பேரவை வளாகத்தில் ஆண் மற்றும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென தனித்தனியே குளிர்சாதன வசதி கொண்ட நவீன ஓய்வறைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8.8.2011 அன்று திறப்பு.

- ✶ சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற பெண் உறுப்பினர்களுக்கென தனியே நவீன உடற்பயிற்சிக் கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1.2.2012 அன்று துவக்கம்.

- ✶ சட்டமன்ற வைர விழாவையொட்டி, சட்டமன்ற வரலாற்றுப் பதிவுகள் அடங்கிய கவின்மிகு புகைப்படக் கண்காட்சி 23.11.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டு ஒரு வார காலம் நடைபெற்றது.

- ✶ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 30.11.2012 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது முன்னிலையில் நடைபெற்ற வைர விழா நிகழ்ச்சியில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றியதோடு சென்னை அரசினர் தோட்டத்தில் கட்டப்படவுள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் விடுதிக்கு அடிக்கல் நாட்டினார்.

- ✶ தொகுதி சீரமைப்பின் காரணமாக ரூ.3.81 கோடி செலவில், மாவட்டங்களில் 28 புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள்.

- ✶ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பேரவை நிகழ்ச்சி நிரல், வினாக்கள் பட்டியல், கொள்கை விளக்கக் குறிப்புகள், பேரவைச் செய்தித்தாள் உள்ளிட்ட ஆவணங்கள் தபால் மூலமும் 2011ஆம் ஆண்டு முதல் மின்னஞ்சல் மூலமும் அனுப்பும் முறை தொடக்கம்.

- ✶ பேரவைக் கூட்டத்தின்போது உறுப்பினர்களும் பத்திரிகையாளர்களும் தங்களது கைப்பேசிகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள பெட்டக வசதி உருவாக்கம்.

- ✶ சட்டமன்றப் பேரவை வளாகத்தில் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் ஸ்மார்ட் பே ஃபோன் வசதிகள்.

- ✶ ரூ.11,81,822 செலவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு C.C.T.V. கேமிராக்கள்.

- ✶ ரூ.19,04,100 செலவில் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச்சுவர்.

- ✶ ரூ.73,34,000 மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள சாலைகள் மின் விளக்கு வசதியுடன் சீரமைப்பு.

- ✶ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மடிக்கணினி / மேசைக்கணினி, அச்சு இயந்திரம் மற்றும் இணைய டேட்டா கார்டு வழங்கும் திட்டத்தை 17.10.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

- ✶ பேரவை விதி 110–ன்கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் அடங்கிய 98 அறிக்கைகளை (10.5.2013 வரை)மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பேரவையில் அளித்தார்.

✶ ✶ ✶



நிதித்துறை

# ரூ.1 இலட்சம் கோடியைத் தாண்டிய வரவு-செலவுத் திட்டம்!

மாண்புமிகு நிதியமைச்சர்

திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்கள்



- ✶ தமிழ்நாடு வரலாற்றில் முதல்முறையாக தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ரூ.1 இலட்சம் கோடிகளைத் தாண்டிய வரவு–செலவுத் திட்டம்.
- ✶ 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் உபரி ரூ.664.06 கோடி.
- ✶ மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் சதவீதம் 2.84 க்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ 13ஆவது நிதிக்குழுவின் நிர்ணயித்துள்ள வரம்பிற்குள்ளாக மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விழுக்காடு பராமரிப்பு.
- ✶ புதிய வரிவிதிப்பு ஏதும் இல்லாத 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் .
- ✶ தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டம் 2003இல் கூறப்பட்டுள்ள விதிகளின்படி நிதிநிலையின் போக்கு தொடர்பான விவரம் சட்டமன்றப் பேரவையில் தாக்கல்.
- ✶ ஓய்வூதியதாரர்களின் வாரிசுகளான திருமணமாகாத / விவாகரத்தான / விதவை மகள்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் குடும்ப ஓய்வூதியம்.
- ✶ அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை ரூபாய் நான்கு இலட்சமாக உயர்வு.
- ✶ ஓய்வூதியதாரர் இறக்கும்பொழுது வழங்கப்படும் நிதியுதவி ரூ.35,000/– ஆக உயர்வு.
- ✶ தமிழ்நாடு ஓய்வூதியதாரர் குடும்பப் பாதுகாப்பு நிதியானது தமிழக அரசுப் பணியில் பணிபுரிந்து, மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் / மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் ஈர்க்கப்பட்டுப் பணிபுரிந்து, ஓய்வுப் பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ✶ ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ.2,000/–ஆக உயர்வு.
- ✶ ரூ.15,00,000 கோடி முதலீட்டில் மாநிலத்தில் முக்கியக் கட்டமைப்புத் திட்டங்களை மேம்பாடு செய்யும் வகையில் “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023” இதழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியீடு.

- தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் தொடக்கம். 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 20 சதவீதத்தைப் பொது தனியார் கூட்டமைப்பின் கீழ் உள்கட்டமைப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்து நிலவக்கூடிய இடைவெளியினைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தலாம்.

- 14 வருவாய் வட்டங்களில் வங்கி சார்ந்த சார்கருவூலங்களைப் புதியதாக அமைத்தல்.

- "குடும்ப பாதுகாப்பு நலநிதி" ரூ.25,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்வு.

- ரூ.9.07 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்ட கருவூலம் மற்றும் 14 சார் கருவூலங்களுக்கு புதிய கட்டடங்கள்.

**திட்டம், வளர்ச்சி**

- 2011–2012ஆம் ஆண்டு மற்றும் 2012–2013ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.53,535 கோடி.

- மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்தியத் திட்டக்குழு, 2011–2012ஆம் ஆண்டில் ரூ.22.77 கோடி மற்றும் 2012–2013ஆம் ஆண்டில் ரூ.22.84 கோடியும் ஒதுக்கீடு.

- நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்தியத் திட்டக்குழு 2011–2012ஆம் ஆண்டிற்கு ரூ.47.19 கோடியும் மற்றும் 2012–2013ஆம் ஆண்டிற்கு ரூ.47.34 கோடியும் ஒதுக்கீடு.

- மாநில மற்றும் மாவட்ட அளவில் திட்டமிடுதலுக்குத் தேவைப்படும் புள்ளி விவரங்களைத் துல்லியமாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் அளிப்பதற்கு ஏதுவாக, 13வது நிதிக்குழு ஒரு மாவட்டத்திற்கு ரூ.1 கோடி வீதம் மொத்தம் ரூ.31 கோடி நிதி ஒதுக்கீடு.

- விரைவுப்படுத்தப்பட்ட, புதுமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தி மாநிலப் பொருளதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டு, 12ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.2,11,250 கோடி ஒதுக்கீடு.

- ரூ.100 கோடி மதிப்பீட்டில் மிகவும் பின்தங்கிய 100 வட்டாரங்கள், நகர உள்ளாட்சி மற்றும் மாநகராட்சிகளில் பின்தங்கிய பகுதிகளின் அமைப்புகள் ஏற்றத்தாழ்வுகளை சரி செய்ய 'மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம்'.

## பொது (சட்டமன்றம்) துறை

★ மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு அவைத் தலைவர், மாண்புமிகு அவைத் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா மற்றும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தொகுதிப்படி திங்களொன்றுக்கு ரூ.5,000/–த்திலிருந்து ரூ.10,000/– ஆக உயர்வு.

★ சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.10,000/–த்திலிருந்து ரூ.12,000/–ஆக உயர்வு.

★ சட்டமன்ற உறுப்பினரின் அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் திங்களொன்றுக்கு ரூ.5,000/–த்திலிருந்து ரூ.6000/–ஆக உயர்வு.

## பொது (தேர்தல்கள்) துறை

★ இரண்டாவது தேசிய வாக்காளர் தினவிழா 25.1.2012 அன்றும், மூன்றாவது தேசிய வாக்காளர் தின விழா 25.1.2013 அன்றும் கொண்டாடப்பட்டது.

★ வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தத்தின்போது, 22.07 இலட்சம் மனுக்கள் ஏற்கப்பட்டு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்பட்டன. இறுதிப் பட்டியல்களின்படி தமிழ்நாட்டின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 515.69 இலட்சமாகும்.

★ ★ ★

**எனது இலட்சியம்**

ஒரு காலகட்டத்தில் தமிழக மக்களுக்கு யாரும் எந்த உதவியும் இலவசமாகத் தர வேண்டிய ஒரு அவசியம் இருக்கக்கூடாது. தமிழக மக்கள் யாரிடத்திலேயும் கையை நீட்டிப் பெறுகின்ற நிலை இருக்கக்கூடாது. அந்த நிலையை எனது வாழ்நாளில் நான் காணவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. அதுதான் என்னுடைய இலட்சியம்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



# மின்சக்தியை உருவாக்க வலுவான அடித்தளம்

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. **நத்தம் ஆர்.விஸ்வநாதன்** அவர்கள்



- ✶ எரிசக்தி சேமிப்பு குறித்த விழிப்புணர்வைப் பொது மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் எரிசக்தி குறித்த கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள்.
- ✶ அரசு அலுவலகங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலைகள் உள்ள கட்டடங்களில் குறைந்த பட்சம் மூன்று நட்சத்திரக் குறியீடு உள்ள மின் சாதனங்கள் மட்டுமே கொள்முதல் செய்து நிறுவ ஆணை.
- ✶ எரிசக்தியைத் திறம்பட உபயோகித்து மிச்சப்படுத்தும் வகையில், எரிசக்தியை அதிகமாக உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு இலக்கை நோக்கி அடையும் வர்த்தகத் திட்டம் (PAT).
- ✶ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டங்களின் பங்கு மற்றும் கூட்டு முயற்சி மின் திட்டங்கள் மூலம் 595.5 மெகாவாட் மின்சார நிறுவுதிறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைப்பு.
- ✶ 600 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் நிலை III–இல் சோதனை ஓட்டம்.
- ✶ வடசென்னை அனல் மின் திட்டம் நிலை II–இன் 600 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட இரண்டாவது அலகு சோதனை ஓட்டம்.
- ✶ தமிழ்நாடு மின்சார வாரியம் – தேசிய அனல் மின் கழகத்தின் கூட்டு முயற்சித் திட்டத்தின் (வல்லூர்) 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாவது அலகு சோதனை ஓட்டம்.

- ஜுன் 2011 முதல் 1,135 மெகாவாட் அளவிற்குப் புதிய காற்றாலைகள்.
- உப்பூர் (2X800 மெகாவாட்) அனல் மின் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
- உடன்குடி விரிவாக்கம் (1X800 மெகாவாட்) அனல் மின் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
- 660 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் திட்டம் நிறுவ ஆணை.
- தற்போதுள்ள எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு மாற்றாக 660 மெகாவாட் திறன் கொண்ட புதிய மாற்று மின் உற்பத்தி திட்டம் நிறுவ ஆணை.
- உடன்குடி மிக உய்ய மின் திட்டத்தை (2X660 மெகாவாட்) அரசுத் திட்டமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாயிலாகச் செயல்படுத்துதல்.
- தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை – 2012 வெளியீடு. 2015 ஆண்டுக்குள் சூரிய மின் சக்தி மூலம் 3,000 மெகாவாட் மின் உற்பத்தி.
- தமிழக அரசு தொலை நோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில் எரிசக்தித் துறைக்கென 4,50,000 கோடி ரூபாய் முதலீடு.
- 59 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1847.882 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதை இயக்கி வைக்கப்பட்டுள்ளன.
- நிதிச் சீரமைப்புத் திட்டத்திற்கு ரூ.18,493.45 கோடி தமிழக அரசின் கடன் உத்தரவாதம்.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கடந்த ஆண்டுகளில் ரூ.19,155.35 கோடி நிதியுதவி.
- 31,000 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய மின் உற்பத்தி திட்டங்கள்.
- ரூ.262.50 கோடி மதிப்பீட்டில் கிராம ஊராட்சிகளில் 1 இலட்சம் சூரிய சக்தி தெருவிளக்குகள்.
- 372.73 கோடி ரூபாய் செலவில் நீலகிரி, திருநெல்வேலி, தருமபுரி மாவட்டங்களில் கிராமப்புற மின்மயமாக்கல்.
- பவானி கட்டளை தடுப்பணை –II–ல் 30 மெகாவாட் மின் உற்பத்தி.

- ✶ இணை மின் உற்பத்தி திட்டங்களுக்கு குறுகிய கால கடனாக 352 கோடி ரூபாய்.
- ✶ 14.62 கோடி ரூபாய் செலவில், 14.62 இலட்சம் குடிசை மின் பயனீட்டாளர்களுக்கு விலையில்லா சிறு குழல் விளக்குகள்.
- ✶ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மறு சீரமைப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 12,211 கோடி அளவிலான கடன் பொறுப்புகளில் 50 சதவிகிதத்தை அரசு வழங்கும்.

**110 அறிவிப்பு**

- ✶ ரூ.16,350 கோடி மதிப்பில் மின் திட்டங்கள்.
- ✶ ரூ.7,000 கோடி செலவில் நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெ.வா. மின்திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல்மின் திட்டம்.
- ✶ ரூ.8,000 கோடி மதிப்பீட்டில் 56 துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள்.
- ✶ ரூ.500 கோடி மதிப்பீட்டில் 20,000 புதிய மின் மாற்றிகள்.
- ✶ ரூ.850 கோடி மதிப்பீட்டில் 15,000 கி.மீ. நீளத்திற்கு புதிய உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித்தடங்கள்.

✶ ✶ ✶

**இணையில்லா மக்கள் சக்தி**

"உங்கள் அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடி தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன. சக்தி என்பது மக்கள் சக்தி தானே ? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், சக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம்தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# நல்லாட்சிக்கு சாட்சியகமாகும் நகராட்சி நிருவாகம்

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சித் துறை,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்
திரு. **கே.பி.முனுசாமி** அவர்கள்






✶ “சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்” மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு “ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்” என இரண்டு மாபெரும் புதிய நிதி திட்டங்கள் 2011 ஆம் ஆண்டில் அறிவிப்பு.

**நகராட்சி நிருவாக ஆணையரகம்**

✶ ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–12 ஆம் ஆண்டில் மாநகராட்சிகள் (சென்னை தவிர) மற்றும் நகராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு

வசதி மேம்பாட்டுக்கு 2446 பணிகள் ரூ.506.48 கோடியில் மேற்கொள்ளப்பட்டு 2,335 பணிகள் நிறைவேற்றம். 2012–13ஆம் ஆண்டில் ரூ.500 கோடி செலவில் 2,448 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 958 பணிகள் நிறைவேற்றம்.

✶ தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 2011–12ஆம் ஆண்டில் ரூ.200 கோடி மதிப்பில் 1,037 பணிகளும் 584 கி.மீ நீளமுள்ள சாலைகளைச் சீரமைக்கும் பணி 6 மாநகராட்சிகள் மற்றும் 29 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. 2012–2013ஆம் ஆண்டில் சேதமடைந்த 486 கி.மீ நீளமுள்ள சாலைகளை சீரமைக்கும் பணி 4 மாநகராட்சிகள் மற்றும் 21 நகராட்சிகளில் ரூ.175 கோடி செலவில் நிறைவேற்றம்.

✶ ரூ.466 கோடி செலவில் 1,455 கி.மீ. பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ 2011–2012இல் மாற்றுத்திறனாளிகளுக்கான 81 கழிப்பறைகள் ரூ.1.37 கோடியில் 9 மாநகராட்சிகளில் கட்டப்பட்டுள்ளன. 38 தூர் வாரும் இயந்திரங்கள் மற்றும் 21 ஜெட்ராடிங் இயந்திரங்கள் ரூ.8.68 கோடி செலவில் 20 நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**சென்னை மாநகராட்சி**

✶ கூலித்தொழிலாளிகள் மற்றும் அடித்தட்டு மக்களுக்காக 200 ‘அம்மா உணவகங்கள்’ திறக்கப்பட்டு, இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், சாம்பார் சாதம் ரூபாய் ஐந்திற்கும், தயிர் சாதம் ரூபாய் மூன்றிற்கும் மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

✶ 2011–2012ஆம் ஆண்டில் ரூ.333.27 கோடி மதிப்பீட்டிலும், 2012 – 2013 ஆம் ஆண்டில் 427.01 கோடி மதிப்பீட்டிலும், ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாடு மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தொடக்கம்.

✶ சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட மண்டலங்களில், ரூ.333.27 கோடி மதிப்பீட்டில், 175.36 கி.மீ. நீளத்திற்கான 360 சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் 2012–2013ஆம் ஆண்டில் ரூ.366.23 கோடி மதிப்பீட்டில், 280.83 கி.மீ. நீளத்திலான 1,189 சாலை மேம்பாட்டுப் பணிகளும் தொடக்கம்.

✶ சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ரூ.22.07 கோடி செலவில் 32 பூங்காக்கள் உருவாக்கப்பட்டன.



* ரூ.1.20 கோடி அரசு மானியத்தில் பிளாஸ்டிக் கழிவுகள் துகளாக்கப்பட்டு சாலை அமைக்கும் பணி தொடக்கம்.

**பேரூராட்சிகள் நிருவாகம்**

* ரூ.500 கோடி செலவில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ்பேரூராட்சிகளில் சாலை, வடிகால், குடிநீர் வழங்கல் மேம்பாடு, பாதாள சாக்கடைத் திட்டம், சிறுபாலம், தெருவிளக்கு மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் என மொத்தம் 5,458 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* 2012–2013ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின் கீழ் 143 பேரூராட்சிகளிலுள்ள 234 ஊருணிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.54.32 கோடி மதிப்பீட்டிலும், 292 பேரூராட்சிகளிலுள்ள 366 சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.101.00 கோடி மதிப்பீட்டிலும், 244 பேரூராட்சிகளில் 376 நவீன சுகாதார வளாகங்கள் ரூ. 45.20 கோடி மதிப்பீட்டிலும் நிறைவேற்றம்.

* தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு மேம்பாடுத் திட்டத்தின் கீழ் 468.75 கி.மீ நீளச்சாலைகள் அமைக்கும் பணி பேரூராட்சிகளில் ரூ.102.12 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

* துணை நகரத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் ரூ. 101.37 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி, பாதாளச்சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய பணிகள் தொடக்கம்.

* சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்க தக்க எரிசக்தி வளர்ச்சி நிதியின் கீழ் ரூ. 38 கோடி மதிப்பீட்டில் 163 பிளாஸ்டிக் சாலைகளும், ரூ.1.20 கோடி மதிப்பீட்டில்

15 பிளாஸ்டிக் கழிவுகளைத் தூளாக்கும் இயந்திரக் கூடமும், பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

- ✶ 212 புதிய சுகாதார வளாகங்களும், 296 பழைய சுகாதார வளாகங்களின் புனரமைப்பும், ரூ.28.13 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றம்.
- ✶ மாற்றுத்திறனாளிகளுக்கான 532 பிரத்யேக கழிப்பிடங்கள் ரூ. 9.93 கோடி மதிப்பீட்டில் 503 பேரூராட்சிகளில் நிறைவேற்றம்.
- ✶ அங்கன்வாடிகளைப் புனரமைப்பு செய்தல் மற்றும் அங்கன்வாடியில் குழந்தைகள் கழிப்பிடம் கட்டுதல் உள்ளிட்ட 1,504 பணிகள் ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு 1,441 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

- ✶ மத்திய அரசின் உதவியுடன் ரூ. 785.75 கோடி திட்ட மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை நெம்மேலியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.02.2013 அன்று துவக்கி வைத்தார்.
- ✶ சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.642 கோடி ஒதுக்கீட்டில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளை மேம்படுத்தும் பணிகள்.
- ✶ சென்னையுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு 9 ஒருங்கிணைந்த குடிநீர் திட்டப் பணிகளுக்காகவும், புதிதாக இணைக்கப்பட்ட 4 பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி திட்டப் பணிகளுக்காகவும் மற்றும் கழிவுநீர் அமைப்பினை பராமரிப்பதற்காக சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.452.77 கோடி ஒதுக்கீட்டில் பணிகள் தொடக்கம்.
- ✶ சென்னையின் நீர்வழித் தடங்கள் மற்றும் நீர் ஆதாரங்களில் 337 இடங்களில் கழிவுநீர் கலந்து மாசுபடுவதை தடுத்திட, உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வசதி நிதியின் கீழ் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
- ✶ தாம்பரம், பல்லாவரம், பம்மல் ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதியினை மேம்படுத்திட, பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பிலிருந்து தாம்பரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு பிரதான குடிநீர் குழாய் பதித்திடும் பணி ரூ.93.48 கோடி செலவில் நிறைவேற்றம்.
- ✶ பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.61.19 கோடி செலவில் நிறைவேற்றம்.

- மாதவரம் பகுதியில் குடிநீர் வசதியினை மேம்படுத்திட ரூ.55 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ரூ.41.35 கோடி செலவில் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை வரை இரண்டாவது பிரதான குழாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- போரூர் பகுதியில் சுமார் 1.30 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.12.94 கோடி செலவில் குடிநீர் வழங்கும் பணிகள் நிறைவேற்றம்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

- ஊரகக் குடிநீர்த் திட்டங்களின் கீழ் 13,000 குடியிருப்புகளுக்கும், 6,374 அரசுப் பள்ளிகளுக்கும், 6,601 அங்கன்வாடி மையங்களுக்கும் மற்றும் 254 அரசு விடுதிகளுக்கும் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன், ரூ.1,632 கோடி செலவில் 1,628 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளான தடுப்பணைகள் மற்றும் செறிவூட்டுக் குழாய்கள் அமைக்கும் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம் ரூ.1,928.80 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6755 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 29.80 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். தற்போது 93 விழுக்காடு பணிகள் நிறைவேற்றம்.

- 2 நகராட்சிகள் மற்றும் 18 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டங்கள் ரூ.55.10கோடி மதிப்பீட்டில் 3.89 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றம்.

- 1.39 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் சின்னமனூர், மறைமலைநகர் மற்றும் நாமக்கல் நகராட்சிகளில் ரூ.40.50 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றம்.

- ரூ.217.54 கோடி செலவில் சென்னை மாநகர விரிவாக்கப் பகுதியில் 127.38 கி.மீ. நீளத்திற்கு மழைநீர்க் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ரூ.111.64 கோடி செலவில் 131 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் LED விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

✶ ரூ.12.84 கோடி செலவில் 6 மாநகராட்சிகள், 20 நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கும் பணிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ ரூ.94 கோடி செலவில் திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிப்பதற்காக நகர்ப்புற பகுதிகளில் கழிவறை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**2013 – 2014 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்டங்கள்.**

✶ சென்னைப் பெருநகர் மேம்பாட்டிற்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு.

✶ ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சிக்கு ரூ.750 கோடி ஒதுக்கீடு.

✶ நிதித்திறன் வலுவாக இல்லாத நகராட்சிகளுக்கு சிறப்பு திடக்கழிவு மேலாண்மைக்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு.

✶ திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிப்பதற்காக நகர்ப்புற பகுதிகளில் கழிவறை மேம்பாட்டுப் பணிக்காக ரூ.72.60 கோடி ஒதுக்கீடு.

✶ பேரூராட்சி சாலைகள் மேம்பாடு பணிகளுக்காக ரூ.103 கோடி ஒதுக்கீடு.

✶ ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிக்காக ரூ.1,190.72 கோடி ஒதுக்கீடு.

**110 அறிவிப்புகள்**

✶ ரூ.1,000 கோடி செலவில் சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்கு நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம்.

✶ ரூ.303.78 கோடி செலவில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 14 பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள்.

✶ ரூ.121 கோடி செலவில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை நகருடன் இணைக்கப்பட்ட 4 பகுதிகளில் கழிவு நீரகற்றும் கட்டமைப்புத் திட்டங்கள்.

✶ ரூ.300 கோடி செலவில் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மின்சேமிப்பு தெருவிளக்குகள்.

✶ ரூ.290 கோடி செலவில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் 900 ஒருங்கிணைந்த சாலைகள்.

* இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் தலா 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள்.

* திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்த அறிவிப்பு.

* ரூ.797.69 கோடி செலவில் திண்டுக்கல், தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்.

* ரூ.227.26 கோடி செலவில் திருநெல்வேலி மாநகராட்சி, ஆரணி, திருவத்திபுரம், பெரியகுளம் ஆகிய நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள்.

* ரூ.27 கோடி செலவில் 5 மாநகராட்சிகள் மற்றும் 24 நகராட்சிகள் திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நவீன உயிரி எரிவாயுக் கூடங்கள்.

* நகராட்சிகளின் கணக்குகளை பராமரித்து நிதி மேலாண்மையை திறம்படுத்த தமிழ்நாடு நகராட்சி கணக்கு பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும்.

* காரைக்குடி மற்றும் சிவகாசி நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்த அறிவிப்பு.

**சட்டத்துறை**

* ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தேர்வான டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியினை சார்ந்த 12 மாணவர்களுக்கு ரூ.9 இலட்சம் உதவித் தொகை.

* அமெரிக்க ஐக்கிய நாட்டின் வாஷிங்டன்னில் நடைபெற்ற பிலிப் சி. ஜெசப் மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தேர்வான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியினை சார்ந்த 5 மாணவர்களுக்கு ஒரு சிறப்பு நேர்வாக தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.5 இலட்சம் உதவித் தொகை.

* சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணத்தைத் திருப்பி வழங்கிட அரசால் ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு.




- ✶ திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் தேசிய சட்டப்பள்ளி நிறுவுவதற்கு, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/2012) இயற்றப்பட்டு, கட்டட பணிக்காக ரூ. 75 கோடி ஒதுக்கீடு.

- ✶ தமிழகத்தில், தனியார் சுயநிதி சட்டக் கல்லூரிகள் துவங்குவதற்கான தடையில்லா சான்றிதழ் பெறுதலுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு ஆணை.

- ✶ அரசு சட்டக் கல்லூரிகளுக்கு புத்தகங்கள் வாங்க ரூ.7 இலட்சமும், திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள், பேராசிரியர் அறைகள் மற்றும் கருத்தரங்கக்கூடம் கட்டுவதற்கு ரூ.85.58 இலட்சம் ஒப்பளிப்பு.

- ✶ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்றுவரும் 7 மாணவர்களுக்கு 2012 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற பன்னாட்டு நீதிமன்றம் போட்டிகளில் கலந்து கொண்டதற்கு தலா ரூ.75,000/–வீதம் மொத்தம் ரூ.5.25 இலட்சங்கள் ஒப்பளிப்பு.

- ✶ அரசு சட்டக் கல்லூரிகளில் 13 பேர் விரிவுரையாளர்களாக நியமனம்.

- ✶ சட்டத்துறையின் அலுவலகம் மற்றும் பிரிவுகளுக்கு 25 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கும் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு.

- ✶ சட்டத்துறையின் பிரிவுகளுக்கு சிற்றறைகள் அமைப்பதற்கு ரூ.9 இலட்சங்கள் ஒப்பளிப்பு.
- ✶ திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதியில் இரண்டாம் தளம் கட்டுதல், மாதிரி நீதிமன்றம் மற்றும் கூடுதல் இரு சக்கர வாகன நிறுத்த கட்டடம் கட்டுவதற்கு ரூ.56.20 இலட்சங்கள் ஒப்பளிப்பு.
- ✶ அரசு சட்டக் கல்லூரியிலுள்ள நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கிட ரூ.14 இலட்சங்கள் ஒப்பளிப்பு.
- ✶ சட்டக் கல்வி இயக்குநரகத்திற்கு கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கிட ரூ.9.50 இலட்சங்கள் ஒப்பளிப்பு.
- ✶ செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு குளிர்மையான குடிநீர் வழங்க குளிரூட்டும் உபகரணங்கள் வாங்கிட ரூ.1.30 இலட்சங்கள் ஒப்பளிப்பு.
- ✶ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கணினிகள், மடிக் கணினிகள், அச்சுப் பொறிகள், நகல் பெருக்கிகள் மற்றும் தொலை நகலிகள் வாங்கிட ரூ.20 இலட்சங்கள் ஒப்பளிப்பு.
- ✶ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக மாற்றி ஆணையிடப்பட்டு, அக்கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்ட அப்பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 1.72 கோடியை அப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கிட ஆணையிடப்பட்டது.
- ✶ அரசு சட்டக் கல்லூரிகளில் 2012–2013ஆம் கல்வியாண்டில் மணிநேர அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வரும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தினை ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.

**சிறைச்சாலைகள்**

- ✶ ஆண்டொன்றுக்கு ரூ.2 கோடி கூடுதல் செலவில் புதிதாக 672 முதல்நிலை காவலர் பணியிடங்கள், 349 முதல் தலைமைக் காவலர் பணியிடங்கள் மற்றும் 95 உதவி சிறை அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, 1,116 பேருக்கு பதவி உயர்வு.
- ✶ புழல் மத்திய சிறை–1இல் ரூ. 45 இலட்சம் செலவில் நவீன அடுமனைத் திட்டம் (Bakery Unit) அமைக்கும் பணிகள் செயலாக்கம்.




## நீதித்துறை

- ✶ இறந்த வழக்குரைஞர்களின் சட்ட முறையிலான வாரிசுதாரர்களுக்கும் நியமனதாரர்களுக்கு வழக்குரைஞர்கள் நலநிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5.25 இலட்சமாக உயர்வு.
- ✶ தமிழ்நாடு வழக்குரைஞர் நலநிதிக்கு ஆண்டுதோறும் ரூ.4 கோடி அரசின் மானியமாக வழங்க ஆணை.
- ✶ தமிழ்நாடு மாநில நீதிப்பணியில் உரிமையியல் நீதிபதிகளாக 172 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம்.
- ✶ நிலுவையில் உள்ள வழக்குகளை தரமான, வெளிப்படையான முறையில் அணுகிடும் அரசின் தீர்மானத்திற்கேற்ப தமிழ்நாடு மாநிலத்திற்கென தனி வழக்காடும் கொள்கை உருவாக்கம்.
- ✶ ரூ.163 கோடி நிதி ஒப்பளிப்பில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித்துறையின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

## பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை

- ✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.10.2012 அன்று, சென்னை, பசுமை வழிச் சாலையில் ரூ.10.14 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட இந்தியக் குடிமைப்பணித் தேர்வு மையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
- ✶ ரூ. 36.24 கோடி செலவில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையம் நவீனமயமாக்கிட ஆணை.



**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

- ✶ அனைத்துத் தேர்வுகளுக்கும் இணையதளம் வழி விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
- ✶ முறைகேடுகளைத் தடுக்க அனைத்துத் தேர்வுக் கூடங்களிலும் ஒளிப்பதிவுக் கருவிகள் வழியாகக் கண்காணிப்பு.
- ✶ தேர்வாணையத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்யும் முறை அறிமுகம்.
- ✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.09.2012 அன்று சென்னை, பூங்காநகர் பகுதியில் ரூ.19.86 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.
- ✶ தேர்வாணையத்தால் 2012இல் 27,541 நபர்கள் அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம்.
- ✶ 2013–2014ஆம் ஆண்டிற்கு 10,105 காலிப் பணியிடங்களுக்கான நேரடி தேர்வுக்கான அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.
- ✶ கணினி வழி தேர்வுமுறை அறிமுகம்.

- ரூ. 85 இலட்சம் செலவில் 11 மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகங்களுக்கு 11 ஈப்புகள் வழங்கப்பட்டது.
- ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் யு.பி.எஸ். வழங்கப்பட்டது.
- திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

## ஊரக வளர்ச்சிக்கு உன்னத முயற்சிகள்

### முதலமைச்சரின் சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

- ரூ. 2,160 கோடியில் 1.20 இலட்சம் சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்.
- பசுமை வீடுகள் கட்ட ஒவ்வொன்றுக்கும் ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக உயர்வு.

### தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

- தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (தாய்) கீழ், ரூ.1,430 கோடி மதிப்பீட்டில் 4,270 கிராம ஊராட்சிகளில் உள்ள 43,916 குக்கிராமங்களில் 96,508 பணிகள்.

### ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்

- 2011–2012ஆம் ஆண்டில், ரூ.170 கோடி மதிப்பீட்டில் 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைப்பு. ரூ.175 கோடி மதிப்பீட்டில் 41,165 உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி புனரமைப்பு.

### ஒருங்கிணைந்த பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

- ரூ.200 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்துத்தர 19,655 பணிகளுக்கு அனுமதி.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி, ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ரூ.1.75 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்வு.
- ரூ.940 கோடி மதிப்பீட்டில் 30,274 பணிகள் மேற்கொள்ள அனுமதி.
- அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் நல மையங்களுக்கு ரூ.6,050 வீதம், அனைத்து மையங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு.

**தன்னிறைவுத் திட்டம்**

- இத்திட்டத்தில் ரூ.200 கோடி அரசு மான்யமாக ஒதுக்கீடு.
- பொது மக்கள் பங்களிப்பு ரூ.100 கோடியுடன் மொத்தம் ரூ.300 கோடி மதிப்பீட்டில் 4,150 பணிகள்.

**சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல்**

- மின்சாரக் கட்டணம் மற்றும் பராமரிப்புச் செலவினைக் குறைத்திடவும், ஊரகப் பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை ஊக்குவித்திடவும், 40,000 தெரு விளக்குகளை சூரிய சக்தி விளக்குகளாக மாற்றியமைக்க ரூ.105 கோடி ஒதுக்கீடு.

**தூய்மையான கிராம இயக்கம்**

- தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, 2003ஆம் ஆண்டு துவக்கப்பட்ட "தூய்மை கிராம இயக்கம்" மீண்டும் 2011–2012–ல் அறிமுகம். ஆண்டுதோறும், மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்ந்தெடுக்கப்படும் 31 கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ஊக்கத் தொகை. இரு ஆண்டுகளில் இதற்காக ரூ.3.10 கோடி ஒதுக்கீடு.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

- இத்திட்டத்தின்கீழ், ஒரு வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட அலகுத் தொகை ரூ.1,20,000/–ல் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக வழங்கப்படும் தொகை ரூ.30,000/– லிருந்து ரூ.55,000/– ஆக உயர்வு. மாநில அரசின் பங்குத் தொகை ரூ.67,500/– ஆகும்.
- ரூ. 2,119.63 கோடி மதிப்பீட்டில் 2,11,963 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

- இத்திட்டத்தின்கீழ், ரூ.7,100 கோடி செலவிடப்பட்டு, 72.26 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், 59% ஆதி திராவிட இனத்தவர். 83% பெண்கள்.
- இத்திட்டத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு, ஒரு குடும்பத்திற்கென ஆண்டு உச்சவரம்பு 150 நாட்களாக உயர்வு. தினக்கூலி ரூ.132 லிருந்து ரூ.148 ஆக உயர்வு.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர் நிதி ஒதுக்கீடு ரூ.8,708 கோடி.
- காவேரிப் பாசனம் பாயும் டெல்டா மாவட்டங்களில் வறட்சியைப் போக்குவதற்கென ரூ.1,336 கோடி மதிப்பீட்டில் கூடுதல் பணிகள்.

- ஒரு ஊராட்சி ஒரு பணி என்ற வரைமுறை தளர்வு.
- ஆதிதிராவிட, பழங்குடியின, சிறு / குறு விவசாயிகளின் நிலங்களில் பணிகள் மேற்கொள்ள ஆணை. இதன்மூலம் 1.40 கோடி விவசாயிகள் பயன்பெறுவர்.

**நபார்டு–ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

- இத்திட்டத்தின்கீழ், ரூ.344 கோடி மதிப்பீட்டில் 1910.23 கிலோ மீட்டர் நீளமுள்ள 717 சாலைப் பணிகள்.
- சிறந்த செயல்பாட்டிற்காக, இத்துறைக்கு மட்டும் கூடுதலாக 1,729.28 கிலோ மீட்டர் நீளமுள்ள 637 சாலைகளை மேம்படுத்த ரூ.315 கோடி நபார்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு.

**பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலை அமைத்தல்**

- இத்திட்டத்தின்கீழ், ரூ.29 கோடி மதிப்பீட்டில், 345.26 கிலோ மீட்டர் நீளமுள்ள 164 சாலைப் பணிகள்.
- பிளாஸ்டிக் கழிவுகளைத் தரம் பிரித்து சிறு துணுக்குகளாக மாற்றும் இருபது நிலையங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் அமைத்திட ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி**

- ரூ.154 கோடி மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி 1,254.50 கிமீ நீளமுள்ள சாலைகள் அமைத்தல்.

**பதிமூன்றாம் நிதிக்குழு மானிய சாலைப் பணிகள்**

- 3,437.98 கி.மீ. நீளமுள்ள 1,733 சாலைப் பணிகள், ரூ.294 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு.

**ஊரக உள்கட்டமைப்புத் திட்டம் (சாலைகள்)**

- 2,612.44 கி.மீ. நீளமுள்ள 2,728 சாலைப் பணிகள், ரூ.317 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு.

**மாநில நிதிக்குழு மானியம் (தார்ச்சாலை அல்லாத சாலைகளை மேம்படுத்துதல்)**

- 1,255.64 கி.மீ. நீளமுள்ள 1,046 சாலைப் பணிகள், ரூ. 202 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு.

**ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம்**

- ரூ.230.54 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள், பாலங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஊராட்சி மன்றக் கட்டடங்கள் போன்ற 903 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**உள்ளாட்சித் தேர்தல்கள் 2011**

- ✶ மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல் 2011 அக்டோபர் மாதம் இந்த அரசால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டு, புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,19,399 மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர்.

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**

- ✶ தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் 5,56,311 சுய உதவிக் குழுக்கள் அமைப்பு. இக்குழுக்களில் மொத்தம் 85.59 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களது மொத்தச் சேமிப்பு ரூபாய் 3,700 கோடி. இதுவரை 5.06 இலட்சம் மகளிருக்குக் கடன் இணைப்பாக ரூபாய் 19,658.27 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ✶ ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 15,000 வீதம் 22,214 சுய உதவிக் குழுக்களும் மற்றும் நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 10,000 வீதம் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கும் ஆக மொத்தம் 42,214 குழுக்களுக்கு சுழல் நிதி மானியம்.
- ✶ 2012–2013ஆம் ஆண்டில் 6,666 நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.10,000 வீதம் சுழல் நிதி மானியம்.
- ✶ மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்காக வங்கிகள் மூலம் கடன் இணைப்பாக ரூ. 8,062 கோடி.
- ✶ தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர அண்டைவீட்டுக் கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் வகையில் இக்கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வீதம் தேர்ச்சி பெற்ற 8,000 கூட்டமைப்புகளுக்கு ரூ. 80 கோடி.
- ✶ 25,534 இளைஞர்களுக்கு சிறந்த நிறுவனங்கள் மூலம் தொழிற் திறன் பயிற்சிகள். அதில் 7,000 இளைஞர்களுக்கு "திறன் ரசீதுத் திட்டம்" மூலம் பல்வேறு பயிற்சி.
- ✶ சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழிற்திறனை மேம்படுத்துவதற்காக 8,081 பெண்களுக்குத் தொழிற்திறன் பயிற்சி.
- ✶ ரூ. 160 இலட்சம் செலவில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே கலாச்சாரப் போட்டிகள்.
- ✶ சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை மாணவர்களிடையே பிரபலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் 32 மாவட்டங்களில் 119 "கல்லூரிச் சந்தைகள்" நடத்தப்பட்டு ரூ.151.18 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களைச் சார்ந்த 60 வட்டாரங்களில் உள்ள 9,66,303 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை.
- மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட கண்காட்சிகள் நடத்தப்பட்டு ரூ. 183.78 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை.
- மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தை உருவாக்கி தற்போது செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை.
- சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக அரசு, “மதி” வர்த்தக பெயர் மற்றும் வணிகச் சின்னத்திற்கு ஒப்புதல். தமிழ்நாடு சிறிய மற்றும் சிறு கைத் தொழில் சங்கத்துடன் (TANSTIA) புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இணையம் மூலம் சந்தைப்படுத்தும் வகையில், “மதி பஜார்” (Mathi Bazaar) எனும் பெயரில் புதிய இணைய தளம்.
- பெண்களுக்கு எதிராக நடைபெறும் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக ஒன்று கூடி போராடும் மகளிர் சுய உதவிக்குழு பெண்களை ஊக்குவித்திட 5 பரிசுகள் அறிவிக்கப்பட்டு தலா ரூ. 1 இலட்சம் வீதம் 5 பரிசுகள்.
- அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் 100% கற்றவர்களாக உருவாக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. 50,000/– வீதம் 30 விருதுகள்.
- ஊரகப் பகுதி மற்றும் நகர்ப்புறங்களில் 65,000 புதிய சுய உதவிக் குழுக்கள்
- ரூ.1 இலட்சம் வீதம் 150 அண்டை வீட்டு கூட்டமைப்புகளுக்கு ரூ.1.50 கோடி ஊக்க நிதி
- “ஒருகிராமம் – ஒரு உற்பத்தி பொருள்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பரிசோதனை முறையில் 151 தொழில் தொகுப்புகள் கண்டறியப்பட்டுள்ளது
- சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட “ மகளிர் மேளா – 2012” நடத்தப்பட்டது.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

- திறன் மற்றும் பணியமர்த்துதல் சேர்த்து, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டங்களுக்காக ரூ. 246.72 கோடி அளவில் வருடாந்திர செயல் திட்டக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல், முதல் கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார

இயக்கம் செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் 15.08.2012 அன்று நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தவதற்கு ஒப்புதல்.

- ரூ.181 கோடி மதிப்பீட்டில் வறுமை ஒழிப்பிற்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

**ஊராட்சிகள் நலன்**

- 1,19,399 ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அடிப்படை பயிற்சி மற்றும் 1,116 ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு கணினி பயிற்சி.
- ரூ.75.86 கோடி மதிப்பீட்டில் 45 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- ரூ. 33.41 கோடி மதிப்பீட்டில் 416 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**புது வாழ்வு திட்டம்**

- ரூ.950 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 10 மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய 50 வட்டாரங்களில் 1,661 ஊராட்சிகளில் புது வாழ்வு திட்டம் விரிவாக்கம்.
- கூடுதலாக எடுத்துக்கொள்ளப்பட்ட 10 மாவட்டங்களில் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் ரூ.8.36 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 1,568 கிராம ஊராட்சிகளில் மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிந்து கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- 1,721 கிராம ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைக்கப்பட்டு முதல் திட்ட கையேடு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.
- 4,634 மகளிர் சுய உதவிக்குழுக்கள், 3,394 மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக்குழுக்கள் மற்றும் 32 பழங்குடியினர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 6,273 சமூக சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் மற்றும் சமூக மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 2,443 கிராம ஊராட்சிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டு, 12,215 சமூக கணக்காளர்களுக்குக் கணக்குப் பதிவியல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 1,702 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல் தவணையாக ரூ.95.06 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

**சுனாமி மறுவாழ்வு திட்டங்களின் சாதனைகள்**

- ரூ.468.31 கோடி மதிப்பீட்டில் 12,053 வீடுகள் கட்டி முடிப்பு.
- ரூ.25 கோடி மதிப்பீட்டில் அவசரகாலத்தில் கடலோரப் பகுதிகளில் எளிதாக வெளியேறி பாதுகாப்பான பகுதிக்கு தப்பிச்செல்ல வழிகாட்டும் பலகையுடன் கூடிய 45 கி.மீ. தூரத்திற்கு சாலைகள்.
- 11 கடலோர மாவட்டங்களில் 14,349 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீண்டும் கட்டுமானம்.

**பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய**
**சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**

- ரூ.20.83 கோடி மதிப்பீட்டில் 490 சமுதாய உட்கட்டமைப்பு பணிகள்.
- மீன் வளத்தை பெருக்க ஆறு மாவட்டங்களில் செயற்கை பவளப் பாறைகள்.
- 6,449 பயனாளிகள் சமுதாயப் பரிமாற்றப் பயணம்.

**ஊரக நிதி மற்றும் இடர்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்**

- பல்வேறு காப்பீடு திட்டங்களில் 1.02 இலட்சம் பயனாளிகள்.
- 4,976 பயனாளிகளுக்கு ரூ.2.10 கோடி குறைந்த வட்டியில் கடன்.
- 2,951 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.55.13 கோடி வங்கிக் கடன்.

**வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள்**

- ரூ.4.80 கோடி திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்புடன் 199 நுண் தொழில்கள்.
- கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 1,750 பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மாம்பழ விவசாயிகளுக்கு ரூ.77.53 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் திட்டம்.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு படகு கட்டும் தளமும் ஒரு படகு இயந்திரம் பழுது நீக்கும் நிலையமும் நிறுவுதல்.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

- அனைத்து கிராமங்களிலும் மறு சுழற்சி முறை, கழிவுகளை அகற்றும் வசதிகளோடு கூடிய திடக்கழிவு மேலாண்மை முறை ஏற்படுத்தப்படும்.

- திடக்கழிவு மேலாண்மை திட்டங்களைச் செயல்படுத்தும் நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராமங்கள், அத்திட்டத்தில் பங்கு கொண்டு, திடக்கழிவு மேலாண்மை முறையை செயல்படுத்தும்.

- கழிவுகளை சேகரித்து கையாளும் செலவுகள் உட்பட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த ரூ.150 கோடி ஒதுக்கீடு.

- திடக்கழிவு மேலாண்மைக்காக கூடுதலாக 16,726 சுகாதாரப் பணியாளர்கள் ஊராட்சிகளில் நியமிக்கப்படுவார்கள்.

- சிறைவாசிகளை பயனுள்ள செயல்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களது திறனை வளர்க்க வழிவகை செய்ய மற்றும் அவர்களுக்கு விடுதலைக்கு பின் புனர்வாழ்வு அமைத்துக் கொடுக்கும் நோக்கத்துடன், மத்திய சிறைகளில், நிலக்கரி சாம்பல் மூலம் செங்கல் உற்பத்தி பிரிவுகள் 1.52 கோடி செலவிலும், ஒரு கைமுறை காகித தயாரிப்புக்கூடம் ரூ.90 இலட்சம் செலவிலும், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் மற்றும் பிற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்கூடம் ரூ.90 இலட்சம் செலவிலும் நிறுவப்படும் மற்றும் தச்சு தொழிற்கூடங்கள் ரூ.18 இலட்சம் செலவில் நவீனமாக்கப்படும்.

- தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் ஏழு குடும்பநல நீதிமன்றங்களை தவிர திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ரூ.8.06 கோடி செலவில் 13 குடும்ப நல நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

**110 அறிவிப்பு**

- ரூ.100 கோடி மதிப்பில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக செயல் திட்ட உருவாக்கம்.

- ரூ.41.81 கோடி செலவில் கிராம ஊராட்சிகளில் கூடுதலாக 16,726 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள்.

- ரூ.9 கோடி மதிப்பில் 50 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களில் சூரிய சக்தி கலன் மூலம் சூரிய சக்தியுடன் கூடிய மின் வசதி.

❖ ❖ ❖

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை



# நலிந்தோருக்கு வீடுகள் நல்லமைப்புடன் நகர்ப்புரங்கள்

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புர வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **ஆர். வைத்திலிங்கம்** அவர்கள்







**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

- ரூ. 275 கோடி மதிப்பீட்டில் 4,970 குடியிருப்புகள் கட்டிமுடிப்பு.
- ரூ.811.60 கோடி மதிப்பீட்டில் 6,922 குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.
- ஒதுக்கீடுதாரர்களுக்கு 25,690 விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டன.
- ரூ 91.76 கோடி மதிப்பீட்டிலான 11.37 ஏக்கர் வாரிய நிலங்கள் மீட்கப்பட்டன.
- வட்டித் தள்ளுபடித் திட்டத்தில் 4,166 ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெற்றனர்.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

- சென்னை மணலி இடையாஞ்சாவடியில் 20 ஏக்கரில் 300 வீடுகள் மற்றும் 20 பிற மனைகள் உள்ளடக்கிய திட்டம் ரூ.19.74 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* சென்னை மஞ்சம்பாக்கத்தில் 12 ஏக்கரில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 400 சரக்குந்து வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி தொடக்கம்.
* மறைமலைநகர் புதுநகர் திட்டம் சித்தமனூரில் 32.26 ஏக்கரில் 30 தொழிற்கூடங்கள் ரூ.14 கோடி மதிப்பில் கட்டும் பணி தொடக்கம்.
* கோயம்பேடு வணிக வளாகத்தில் 14.43 ஏக்கரில் 492 உணவு தானிய கடைகள் ரூ.128.41 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.
* சென்னை கோயம்பேடு ஒப்பந்த வாகன பேருந்து நிலையத்தை 15.01 ஏக்கரில் மேம்படுத்தும் பணிகள் தொடக்கம்.
* 01.11.2012 முதல், பரப்புத் திட்டப் பிரிவு கணினி வழி திட்ட அனுமதி முறை நடைமுறை.
* தனிப்பட்ட முறையில் காலி மனை ஒப்புதல் வழங்கும் கூர்ந்தாய்வு செய்முறை – பிப்ரவரி 2012 முதல் நடைமுறை.
* 452 முடிவுறு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
* 39 முறையற்ற கட்டடங்கள் மூடி முத்திரையிடப்பட்டன.
* இரயில் இணைப்பினை ஒரு முழு வளையமாகக் கொணர்தல் – பெருந்திரள் துரித இரயில் திட்டம்–II விரிவாக்கம் – வேளச்சேரி – புனித தோமையர் மலை இரயில் நிலையம் வரை 5 கி.மீ. ரூ.495.74 கோடி திட்ட மதிப்பீட்டில் நீட்டிப்பு. ரூ.106.32 கோடியில் பெருந்திரள் துரித இரயில் திட்டப்பணிகள்.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

* ரூ.303.42 கோடி செலவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு 6,815 அடுக்குமாடிக் குடியிருப்புகள் / வீடுகள்.
* இராஜீவ்காந்தி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சுனாமியால் பாதிக்கப்பட கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்கு ரூ.18.93 கோடி மதிப்பீட்டில் 523 வீடுகள்.
* சென்னை மற்றும் இதர நகரங்களில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் 6,435 அடுக்குமாடி குடியிருப்புகளில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் 1,000 குடியிருப்புகளில் பணிகள் நிறைவுற்றன.
* ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ.540 கோடி மதிப்பில் தென் சென்னையில் 12,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. 13,468 குடியிருப்பு கட்டும் பணி ரூ.920 கோடி செலவில் நடைபெறுகின்றன.
* இராஜீவ் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் ரூ.7,500 கோடி மதிப்பில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட கணக்கெடுப்பு பணிகள் 10 நகரங்களில் தொடக்கம்.

- ✶ கோவை சூலூரில் ரூ.3.16 கோடி மதிப்பில் 108 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் சேலம் எருமபாளையத்தில் ரூ.10.50 கோடி மதிப்பில் 400 அடுக்குமாடிக் குடியிருப்புகள்.
- ✶ ரூ.1,460 கோடி செலவில் சென்னையில் குடிசைப்பகுதி குடும்பங்களுக்கு 25,468 குடியிருப்புகள்.
- ✶ 2,112 குடியிருப்புகள் மற்றும் 2,292 மனைகளுக்கு 4,404 விற்பனைப் பத்திரங்கள்.
- ✶ சென்னை B.S. மூர்த்திநகரில் பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்துவிட்டு ரூ.9.02 கோடி மதிப்பில் 100 அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் வியாசர்பாடி பகுதியில் புதிதாக 150 அடுக்கு மாடி குடியிருப்புகள்.
- ✶ 8,345 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது.

**நகர் ஊரமைப்பு ஆணையரகம்**

- ✶ ஒவ்வொரு புராதன நகரத்திற்கும் வழங்கப்பட்டு வந்த தலா ரூ.50 இலட்சம் மானியம், ரூ.1 கோடியாக உயர்வு.
- ✶ 6 புராதன நகரங்களுக்கு மானியமாக ரூ.2.10 கோடி விடுவிப்பு.
- ✶ போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நிறைவேற்றும் திட்டங்களின் மானியத் தொகை மாநகராட்சிகளுக்கு ரூ.1 கோடியாகவும், நகராட்சிகளுக்கு ரூ.50 இலட்சமாகவும் உயர்வு.
- ✶ 8 நகராட்சிகளுக்கு – போக்குவரத்து அபிவிருத்தி திட்ட மானியமாக ரூ.94 இலட்சம்.
- ✶ 19 நகராட்சிகள் மற்றும் 4 மாநகராட்சிகளுக்கு ரூ.3.29 கோடி போக்குவரத்து அபிவிருத்தி திட்ட மானியம்.
- ✶ பூங்காக்களை அபிவிருத்தி செய்திட வழங்கப்பட்ட மானியம் ரூ.10 இலட்சமாக உயர்வு.
- ✶ பூங்கா அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள 11 ஊர்களின் பூங்காக்களுக்கு ரூ.26.67 இலட்சம் மானியம்.
- ✶ கோயம்பேடு மொத்த விற்பனை வளாக மேம்பாடுப் பணிக்கு ரூ.33.625 கோடி.
- ✶ காஞ்சிபுரம் மற்றும் திருப்பூர் உள்ளூர் திட்டப்பகுதிகள் மற்றும் ஓசூர் புதுநகர் வளர்ச்சிக் குழும விரிவாக்கப் பணிகள்.
- ✶ கோவில்பட்டி, ராஜபாளையம், கோபிசெட்டிபாளையம், தருமபுரி, கீழக்கரை, காயல்பட்டிணம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் – தனித்த உள்ளூர் திட்டக் குழுமங்களாக அரசு அறிவிப்பு.

* மாமல்லபுரம் – புதுநகர் வளர்ச்சி குழுமப் பகுதி – முழுமைத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல்.
* புதிய தொழில்நுட்ப உதவியுடன் நில உபயோக வரைபடம் தயாரிக்கும் பணி ரூ.41 கோடி மதிப்பில் செயல்படுத்த அரசாணை. பாரதிதாசன் பல்கலைக்கழகம் மூலம் ரூ.4.91 கோடி மதிப்பில் 8,447 சதுர கி.மீ. தற்கால நில உபயோக வரைபடம் தயாரிக்க முதல்கட்ட பணிகள் தொடக்கம்.
* நுண்ணிய அளவில் 100 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல் / மறுஆய்வு செய்தல் – பணிகள் நிறைவேற்றம்.
* 11 உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், செங்கல்பட்டு மண்டல அலுவலகங்கள் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு நெறிமுறைகள் இணைய வலை தளம் மூலம் வரைபடங்களை கூராய்வு செய்ய மின்னணு ஆளுகைத் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதி ரூ.2.20 கோடி நிதி ஒதுக்கீடு.
* அரசு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 113–சி–ற்கு வழிமுறைகள் வெளியீடு.

**கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்**

* ரூ.105.98 கோடி கடன் வசூல் செய்யப்பட்டது.
* கடன் பெற்ற குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவு உறுப்பினர்களுக்கு முறையே 75, 50 மற்றும் 25 விழுக்காடு வட்டி தள்ளுபடியும் மற்றும் 100 விழுக்காடு அபராத வட்டி தள்ளுபடித் திட்டத்தின் கீழ் ரூ.354.44 கோடி வசூல் செய்யப்பட்டு 34863 பயனாளிகள் ரூ.317.06 கோடியளவிற்குப் பயன்.
* மாற்றுத் திறனாளிகளுக்கான ஒதுக்கீடு 1 % லிருந்து 3% ஆக உயர்வு.

**2013–2014 ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

* மதுரை மாவட்டம் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டியில் 593.72 ஏக்கரில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம். இங்கு உருவாக்கப்படும் 19,500 மனைகளில் குறைந்த வருவாய் பிரிவினருக்கு 14,300 மனைகள், மத்தியவருவாய்பிரிவினருக்கு 2,500 மனைகள், உயர்வருவாய் பிரிவினருக்கு 750 மனைகள், பொருளாதாரத்தில் நலிவடைந்தோருக்கு 1,950 மனைகள். அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.120 கோடி.
* சென்னை – சோழிங்கநல்லூரில் முன்கட்டுமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரூ.612 கோடி மதிப்பில் 10 மாடிகளைக் கொண்ட 1,500 குடியிருப்புகள்.
* 9 மாவட்டங்களில் ரூ.918.45 கோடி மதிப்பில் 1,630 தனி வீடுகள் மற்றும் 2,792 அடுக்குமாடிக் குடியிருப்புகள், 32 மனைகள் மேம்பாடு.

✶ சென்னையைச் சுற்றியுள்ள 7 இடங்களில் ரூ.371.05 கோடி மதிப்பில் 13.95 ஏக்கரில் 844 அடுக்குமாடிக் குடியிருப்புகள்.

✶ காஞ்சிபுரத்தில் 2 இடங்களில் 22.975 ஏக்கரில் 1,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள், 32 மனைகள் மேம்பாடு–ரூ.303.80 கோடி.

✶ கோயம்புத்தூரில் இரண்டு இடங்களில் 3.95 ஏக்கரில் 344 அடுக்குமாடிக் குடியிருப்புகள் – ரூ.50.16 கோடி.

✶ ஈரோட்டில் 2 இடங்களில் 12.3 ஏக்கரில் 468 அடுக்குமாடிக் குடியிருப்புகள்– ரூ. 59.27 கோடி.

✶ விருதுநகரில் 3 இடங்களில் 32.87 ஏக்கரில் 722 வீடுகள் – ரூ.73.10 கோடி.

✶ திருச்சியில் 2 இடங்களில் 3.12 ஏக்கரில் 104 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 27 வீடுகள் – ரூ.25.92 கோடி.

✶ சேலம், கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் 48.275 ஏக்கரில் 413 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் – ரூ.35.15 கோடி.

✶ சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த 3,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.280 கோடியில் கட்டப்படும்.

✶ குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் 18,055 குடியிருப்புகள் 50,000 வீடுகளை வீட்டு வசதி வாரியம் / குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் கட்டும் பணிகள்.

✶ வீட்டு வசதி வாரியம் மூலம் ரூ.1,530.45 கோடியில் 5,954 வீடுகள்.

**110 அறிவிப்பு**

✶ வண்டலூர்–வாலாஜாபாத் மாநில நெடுஞ்சாலையையொட்டி வண்டலூர் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

✶ ✶ ✶

**அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள்**

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்பதே என் நோக்கமாகும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# சிறுதொழில் வளர்த்திடும் சிறப்பான முயற்சிகள்

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
திரு. **ப.மோகன்** அவர்கள்






## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

- நீலகிரி மாவட்டத்தின் 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கான ஆதார விலையாக கிலோவிற்கு ரூ.2/– வீதம் ரூ.17.20 கோடி வழங்கப்பட்டது.
- உயர்ந்தபட்ச மின்னாக்கி மானிய அளவு ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு.

- அரியலூரில் புதிய மாவட்ட தொழில் மையம் தொடங்கப்பட்டது.
- தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு சென்னை, கிண்டியில் பயிற்சி வளாகம் அமைக்க ரூ.4.88 கோடி வழங்கப்பட்டது.
- வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் மானியமாக ரூ.28.14 கோடி வழங்கப்பட்டது.
- தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க ரூ.5.46 கோடி வழங்கப்பட்டது.
- திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் அமைந்துள்ள மத்திய மின் பொருள் பரிசோதனை கூடத்தின் சோதனை வசதிகளை மேம்படுத்திட ரூ.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட தொழில் மையங்களை புனரமைக்க ரூ.50 கோடி வழங்கப்பட்டது.
- குறு, சிறு நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 18 திட்டங்களுக்கு பொது வசதி மையங்கள் அமைக்க ரூ.5.76 கோடி பங்களிப்பு.
- காக்களூர் மற்றும் பெருங்குடியில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.1 கோடி வழங்கப்பட்டது.
- படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க உதவிடும் வகையில் ஆண்டுக்கு ரூ.100 கோடி செலவில் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம். 25% மானியத்துடன் கூடிய இத்திட்டத்தில் 50 விழுக்காடு மகளிர் பயனாளிகள்.
- மூலதன மானியமாக ரூ.110 கோடி, குறைந்த மின் அழுத்த மானியமாக ரூ.12 கோடி, மின்னாக்கி மானியமாக ரூ.31.48 கோடி, மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியமாக ரூ.6 கோடி ஆகிய ஊக்குவிப்பு மானியங்கள்.
- தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 15 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கம்.
- குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சிறு தொழில் குழுமங்கள் அடையாளம் காணப்பட்டன.
- நாமக்கல் அருகே கனரக வாகனங்கள் கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கென தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் கூட்டு முயற்சி முறையில் ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் தனியாக ஒரு தொழிற்பேட்டை.

✶ ✶ ✶



# சரித்திரம் படைக்கும் சமூக நலத்துறைப் பணிகள்

மாண்புமிகு சமூகநலம் மற்றும்
சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர்
திருமதி. **பா.வளர்மதி** அவர்கள்





★ படித்த 1.79 இலட்சம் ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.447 கோடி நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் வீதம் 714.44 கிலோ தங்கம். மேலும், பழைய திட்டத்தின் கீழ் 61,766 ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்கு ரூ.25,000 வீதம் ரூ.144.65 கோடி நிதியுதவி.

* பட்டம் / பட்டயம் பெற்ற 73,240 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.366 கோடி திருமண நிதியுதவி. திருமாங்கல்யம் செய்ய தலா 4 கிராம் வீதம் 292.96 கிலோ தங்கம்.

* திருநங்கைகளுக்கான 51 சுய உதவிக் குழுக்களின் திட்டங்களுக்கு 25 விழுக்காடு மானியமாக ரூ. 55 இலட்சமும், வங்கிக் கடனாக ரூ. 2.20 கோடியும் வழங்கல்.

* 7அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசுக் குழந்தைகள் காப்பகங்களில் தங்கி +2 படித்த மாணவியர் 167 பேருக்கு ரூ.52.30 இலட்சம் உயர் கல்வி நிதி உதவி.

* "முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் 36 பெண் குழந்தைகள் உள்பட 13,457 பெண் குழந்தைகள் பயன்.

* திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில், தொட்டில் குழந்தைத் திட்டம் ரூ.34.20 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டு, 59 குழந்தைகள் மீட்பு.

* சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்ட மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.500/–லிருந்து, ரூ.1,000/–ஆக உயர்த்தப்பட்டது. ரூ.6,029 கோடி செலவில் 31 இலட்சம் பயனாளிகள் பயன்.

* பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அறிமுகம்.

* சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 4,416 பேருக்கு ரூ.1,000/– ஓய்வூதியம்.

* இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்ட வயது வரம்பு 65 லிருந்து 60 ஆகக் குறைப்பு.

* ரூ.57.98 கோடி மதிப்பீட்டில் 10,880 அங்கன்வாடி மையங்களில் பழுதுகள் நீக்கப்பட்டு புனரமைப்பு பணிகள்.

* ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் 2,549 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு கழிப்பறை வசதிகள் உருவாக்கம்.

* ரூ.1.59 கோடி செலவில் 6,114 அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு தகுதியான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, 3,023 கட்டடங்கள் கட்டி முடிப்பு .

- ரூ.2.12 கோடி செலவில் 3,232 அங்கன்வாடி மையங்களுக்கு சமையல் எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அடுகலன் வழங்கி நவீனமயம். மேலும், ரூ.1.43 கோடி செலவில் சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலம், சமையல் எரிவாயு, அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அடுகலன் ஆகியவை 2,370 அங்கன்வாடி மையங்கள் நவீனமயம்.

- 2,200 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.26.40 இலட்சம் செலவில் 13,600 உணவுப் பொருட்கள் பாதுகாப்புக் கலன்களும், 6,800 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.1.09 கோடி செலவில் உணவுப் பொருள் கொள்கலன்களும் வழங்கல்.

- ரூ.40 இலட்சம் செலவில், 2,000 அங்கன்வாடி மையங்கள் ஒரே மாதிரியான வண்ணம் தீட்டிப் புதுப்பொலிவு.

- சென்னை, வேலூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அங்கன்வாடிகளில் உள்ள 2 வயது முதல் 5 வயது வரையுள்ள 2,01,032 குழந்தைகளுக்கு ரூ.4.30 கோடி செலவில் விலையில்லா வண்ண ஆடைகள்.

- ரூ.429.15 கோடி மதிப்பீட்டில் 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையுள்ள 16.60 இலட்சம் குழந்தைகளுக்கும், 6.64 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கும், 3.86 இலட்சம் வளரிளம் பெண்களுக்கும் இணை உணவு.

- ரூ.5.79 கோடி மதிப்பீட்டில் 9,602 அங்கன்வாடி மையங்களில் புகையில்லா சமையலறைகள் அமைப்பு.

- 26 அரசுக் குழந்தைகள் இல்லங்களில் ரூ.2.60 கோடி செலவில் 2,450 குழந்தைகள் பயன்பெறும் வகையில், வசதிகள் மேம்பாடு.

- உயிர்காக்கும் மருந்துகள், உணவுப் பொருள்களை பாதுகாத்துப் பயன்படுத்திட ரூ.6.50 இலட்சம் செலவில் குளிர்ப்பதனப் பெட்டிகள்.

- 4 குழந்தைகள் இல்லங்கள் மற்றும் செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் ஆகியவற்றில் ரூ.2.10 கோடி செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு, 800 குழந்தைகள் பயன்.

- ரூ.43.11 இலட்சம் செலவில் 1,200 குழந்தைகள்/ பெண்கள் பயன்பெறும் வகையில் நவீனத் தொழிற்பயிற்சிகள்.

- அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் செங்கல்பட்டு அரசு சிறப்பு இல்லத்தில் ரூ.35.18 இலட்சம் செலவில் கண்காணிப்புக் காமிராக்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தம்.

- ✶ செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்தில் வசிக்கும் இளம்சிறார்களுக்காக ரூ.30.80 இலட்சம் செலவில் புதிய தங்குமிடம்.
- ✶ ரூ.17.50 இலட்சம் செலவில் குழந்தைகள் இல்லங்களுக்குத் துணி துவைக்கும் இயந்திரங்கள்.
- ✶ ரூ.9 இலட்சம் செலவில் 2,450 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 9 வரவேற்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு வரவேற்புப் பைகள்.
- ✶ 26 இல்லங்களுக்கு ரூ.1.30 இலட்சம் செலவில் விளையாட்டுப் பொருள்கள். இதன் மூலம் 2,450 குழந்தைகள் பயன்.
- ✶ வடசென்னை தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்ட கூடுலாக ஒரு திறந்தவெளித் தங்கும் இடத்திற்கு ரூ.6.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- ✶ 54 கோடி ரூபாய்ச் செலவில் 54,000 நவீனத் தையல் இயந்திரங்களை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கடன் மூலமாக மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வாங்கி வழங்கவும், தையல் கூட்டுறவுச் சங்கங்கள் கடனுதவி பெறத்தக்க வகையில் 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியை அரசு மானியமாக வழங்கவும் ஆணைகள்.
- ✶ 47.07 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு விலையில்லா இரண்டு இணை சீருடைகள்.
- ✶ 6,125 சத்துணவுப் பணியாளர்கள் பணி நியமனம்.
- ✶ 6,755 அங்கன்வாடி பணியாளர்கள் பணி நியமனம்.
- ✶ ரூ.932.52 கோடி செலவில் 50.15 இலட்சம் குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்.
- ✶ ரூ. 8.84 இலட்சம் செலவில் 14,734 குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்.
- ✶ 1,069 ஆதரவற்ற திருநங்கைகளுக்கு ரூ.1.20 கோடி ஓய்வூதியம்.
- ✶ மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் சீருடை தைப்பதற்கான தையற்கூலி இரு மடங்காக உயர்வு.
- ✶ ரூ. 3.92 கோடி செலவில் 1,779 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு.

✶ ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் வயது வரம்பு 45 லிருந்து 18 ஆக குறைப்பு.

✶ சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்திற்கு மின்தடையின் போது தடையற்ற மின்சாரம் அளிக்க ரூ.26.46 இலட்சம் மதிப்பீட்டில் டீசல் ஜெனரேட்டர் (100 KVA).

**110 அறிவிப்பு**

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகளுக்கும் 4 கிராம் தங்கத்துடன் திருமண உதவித் தொகை.

பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் முதிர்வுத் தொகை பெற வயது 18 ஆக தளர்வு.

திருமண நிதியுதவித் திட்டங்களில் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000 ஆக உயர்வு.

அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை.

ரூ.7.12 கோடி செலவில் இளம் பெண்கள் குழந்தைகள், பச்சிளம் குழந்தைகளுக்கான 82,760 எடை பார்க்கும் கருவிகள்.

அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் ரூ.1,000 ஆக உயர்வு.

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

✶ மாற்றுத்திறன் கொண்ட மாணவ, மாணவியர்க்கும் மடிக்கணினி வழங்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, 678 மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்க்கு விலையில்லா மடிக்கணினி.

✶ ரூ.14.31 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1,720 மாணவ, மாணவியர் மற்றும் அரசுப் பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லியில் தொழிற்பயிற்சிப் பிரிவில் பயிலும் 55 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு முதல் 4 இணை சீருடைகள்.

✶ ரூ.27.65 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவிகள் பள்ளித் தேர்வுகள் எழுத, உதவியாளரை அமர்த்திக் கொள்ளத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு ரூ.100/–லிருந்து ரூ.250/– ஆக உயர்வு.



- ✶ அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகள் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் சுமார் 1,400 பேர் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்துப் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக, 10 மற்றும் 11ஆம் வகுப்புகள் பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.1,500/–ம், 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவருக்கு ரூ.2,000/–மும் வழங்க ரூ.22.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- ✶ அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/– லிருந்து ரூ.650/– ஆக உயர்வு.

- ✶ அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில், 12ஆம் வகுப்பில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கும், காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ, மாணவியருக்கு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெறுவோருக்கு ரூ.50,000/– ஆகவும், 2ஆம் இடம் பெறுவோருக்கு ரூ.30,000/– ஆகவும், 3ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.20,000/– ஆகவும், இதேபோன்று 10ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் இடம் பெறும் மாணவருக்கு ரூ.25,000/– ஆகவும், 2ஆம் இடம் பெறும்

மாணவருக்கு ரூ.20,000/– ஆகவும், 3ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.15,000/– ஆகவும் என ரூ.3,20,000/– வழங்கப்பட்டது.

- ✶ 22 அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு சூரிய ஒளியின் மூலம் தண்ணீரைச் சூடேற்றும் கருவிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது.

- ✶ ஆரம்ப நிலையில் செவித்திறன் குறையுடையோரைக் கண்டறியும் மையம் ரூ.39 இலட்சம் மதிப்பில் திருச்சி மற்றும் கோவையில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்குவதற்காகப் பல்நோக்கு விடுதி மற்றும் நவீன சமையல் அறை புதிதாகக் கட்டுவதற்கு ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ✶ பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3% வீடுகள் ஒதுக்கீடு.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி**

- ✶ அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் மாவட்டத்திலுள்ள தனியார் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப தங்கும் வசதியுடன் கூடிய குறுகிய கால தொழிற்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 32 மாவட்டங்களிலும் ரூ.74.88 இலட்சம் செலவில் 2,400 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வண்ணம் வழங்கப்பட்டது.

- ✶ மாற்றுத்திறனாளிகளுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ், அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் வழங்குவதைக் கண்காணிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, அரசுத் தலைமைச் செயலர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவுப் பணியிடங்கள் கண்டறியப்பட்டு, 321 மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பணியாளர் தேர்வு நடத்தப்பட்டு, பணி நியமனம்.

- ✶ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், இந்தியாவில் முதன்முறையாகத் தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளை 100 நாள் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுப் பணிகள் வழங்கப்பட்டு வருகிறது. அத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு சலுகையாக 4 மணி நேரம் பணிகள் மேற்கொண்டவர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள ஒரு நாள் பணிக்கான சம்பளம் வழங்குதல்.




✶ ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 182 ஆசிரியர் பணிக்கு மாற்றுத்திறனாளிகள் தேர்வு.

**மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகை**

✶ கடுமையாகப் பாதிக்கப்பட்ட / மன வளர்ச்சி குன்றிய / தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திரப் பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தப்பட்டு ரூ.125 கோடியில் 1.05 இலட்சம் நபர்கள் பயன்.

✶ மாற்றுத்திறனாளிகள் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் பயன் அடையும் வண்ணம் அவர்களுக்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச வயது வரம்பு 45லிருந்து 18ஆகக் குறைப்பு.

✶ அதேபோன்று மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் பயன்பெற பாதிப்பு சதவீதம் 60லிருந்து 45ஆகக் குறைப்பு.

✶ தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.1,000/– வழங்குதல். இதன் மூலம் 461 நபர்கள் ரூ. 2.59 கோடி செலவில் பயன்.

**திருமண உதவித் திட்டம்**

✶ பார்வையற்ற/கை,கால்பாதிக்கப்பட்ட/செவித்திறன்குன்றியமாற்றுத்திறனாளிகளைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்பட்டுவந்த திருமண உதவித்தொகை ரூ.25,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும், திருமணம் செய்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகள் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு

படித்திருந்தால், திருமண உதவித் தொகை ரூ.50,000/– மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கமும், திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை உச்ச வரம்பினை 490 என்று இருந்ததை முற்றிலுமாக நீக்கி, தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்க வழிவகை. ரூ.3.07 கோடி செலவில் 754 பயனாளிகள் பயன்.

**உதவி உபகரணங்கள்**

- ✶ இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட 400 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2 கோடி செலவில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்கள்.
- ✶ ரூ.1 கோடி செலவில் செவித் திறன் குறையுடைய 1,000 குழந்தைகளுக்குக் காதுக்கு பின்புறம் அணியும் நவீன காதொலிக் கருவிகள்.
- ✶ ரூ.50 இலட்சத்தில் பார்வைத்திறன் குறையுடைய கல்வி பயிலும் 500 மாணவர்களுக்குப் பாடநூல்களின் எழுத்துகளைப் பெரிதாக்கிக் காட்டி, சுயமாகப் படிக்க உதவும் கருவிகள் (Magnifier).
- ✶ மூளை முடக்குவாத நோயால் பாதிக்கபட்ட 600 பேருக்கு ரூ.36 இலட்சம் செலவில் சிறப்பு சக்கர நாற்காலிகள்.
- ✶ கால் முட்டிக்குக் கீழ் மற்றும் கால் முட்டிக்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மற்றும் முன் கை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு 378 பேருக்கு ரூ.1.05 கோடி செலவில் நவீன செயற்கை அவயங்கள்.
- ✶ ரூ.10 இலட்சம் செலவில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் 5,000 நபர்களுக்கு நடப்பதற்கு உதவியாக ஒளிரும் மடக்குக் குச்சிகள் (Reflecting folding sticks).
- ✶ ரூ.72 இலட்சத்தில் 1,600 மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள்.
- ✶ ரூ.75 இலட்சம் மதிப்பில் மாற்றுத்திறனாளிகள் 5,388 நபர்களுக்கு பலவகை உதவி உபகரணங்கள்.

**ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள்**

- ✶ 1.1.2012 முதல் 18 மாவட்டங்களில் ரூ.57.02 இலட்சம் செலவில் 0–6 வயதிற்குட்பட்ட பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள்.
- ✶ ரூ.2 கோடி செலவில் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு 20 சிறப்பு இல்லங்கள்.

**மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

- ✶ ஒரு குடும்பத்தில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தாலும், அக்குடும்பத்தில் உள்ளஅனைத்து நபர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் வருமான உச்சவரம்பின்றி பயனடையும் வகையில் ஆணை.

**புதிய கட்டடங்கள்**

- ✶ பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்குவதற்காகப் பல்நோக்கு விடுதி மற்றும் நவீன சமையல் அறை புதிதாகக் கட்டுவதற்கும், அங்குள்ள பிரெய்லி அச்சு இயந்திரத்தைப் பழுது பார்க்கவும் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு.

- ✶ ரூ.5.21 கோடி செலவில் பரனூர், யா.புதுப்பட்டி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் இயங்கிவரும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்குப் புதிய கட்டடங்கள் மற்றும் நவீன சமையலறைகள்.

**பேருந்துப் பயணச் சலுகை**

- ✶ வெளியூர் பேருந்துகளில் 75 விழுக்காடு பேருந்துப் பயணச் சலுகையினை 11,51,099 பயனாளிகள் ரூ. 17.45 கோடி செலவில் பயன்அடைந்துள்ளனர்.

## 2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்

- ✶ கடும் ஊனமுற்றோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் மற்றும் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க ரூ.133.07 கோடி நிதியொதுக்கம்.

- ✶ ஆண்டு வரவு செலவு திட்டம் ரூ.263 கோடி ஒதுக்கீடு.

✶ ✶ ✶

**பெண்கள் நினைத்தால்...**

பெண்கள் நினைத்தால், தங்கள் தலை எழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலை எழுத்தையும் மாற்ற முடியும். அவர்களுக்குத் தேவை, வாய்ப்புகள்! அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே, எனது லட்சியம்!

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்





# சிகரம் தொடும் உயர்கல்வி

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

திரு. **பி.பழனியப்பன்** அவர்கள்





- ரூ.2 கோடி செலவில் 10 பல்கலைக்கழகங்களில் காணொலிக் காட்சியுடன் கூடிய செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள்.

- மாணவர்களின் மொழித்திறன்களை உயர்த்தி அவர்களை உலகச் சந்தையில் போட்டியிடத் தயார்படுத்தும் வண்ணம் ஆங்கிலம், சீனம், ஜப்பான், ஜெர்மன் போன்ற அயல்நாட்டு

மொழிகளைக் கற்பதற்காக ரூ. 1.5 கோடி செலவில் 10 பல்கலைக்கழகங்களில் ஆய்வகங்கள்.

- ✶ 10 பல்கலைக்கழகங்களில் ரூ.2 கோடி செலவில் மாணவர்களின் தொழில் முனைவுத் திறன்களை மேம்படுத்தி அவர்களிடம் உள்ள படைப்பாற்றலை வெளிக் கொணர்ந்து, அவ்வகை தொழில் நிறுவனங்களை உருவாக்கவும், வேலை வாய்ப்புச் சந்தையில் அவர்களுக்கேற்ற நல்லதொரு வாய்ப்பினைப் பெறவும், தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள்.

- ✶ 10 பல்கலைக் கழகங்களில் ரூ. 1 கோடி செலவில் புகழ்பெற்ற வெளிநாட்டுப் பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டம்.

- ✶ உலகத் தரத்திற்கு இணையாக பாடத்திட்டங்களை மறுசீரமைக்கும் பொருட்டு 10 பல்கலைக்கழகங்களில் ரூ.10 கோடி செலவில் பாடத்திட்ட வளர்ச்சி மையங்கள்.

- ✶ தேனி மாவட்டம், போடி நாயக்கனூரில் புதிய அரசுப் பொறியியல் கல்லூரி தொடக்கம்.

- ✶ ஸ்ரீரங்கம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, சாத்தூர், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், நன்னிலம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, நாகலாபுரம், நெம்மேலி எடப்பாடி, கன்னியாகுமரி, வேடசந்தூர், மொடக்குறிச்சி, திருமங்கலம், திருவொற்றியூர், பரமக்குடி, கடையநல்லூர், அருப்புக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடக்கம்.

- ✶ 6 பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக வணிகக் கூட்டிணைவு மையங்கள். இம்மையங்கள் தமிழ்நாடு, இந்தியா மற்றும் வெளிநாட்டில் உள்ள முன்னணித் தொழிற்சாலைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் முகமைகளாகச் செயல்படும். தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தொடர்பு மையமாகச் செயல்படும்.

- ✶ தொழில்நுட்ப அடைகாப்பு மற்றும் பகிர்ந்தளிக்கும் மையம் 9 பல்கலைக்கழகங்களில் அமைப்பு. “அடைகாப்புச் செயல்பாடுகள்” நவீன தொழில்நுட்பங்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் படைப்பாற்றல் கருத்துகளை வணிகத்திற்கு உகந்த பொருட்களாக மாற்றுதல் ஆகியவை இம்மையங்களின் நோக்கமாகும்.

- ✶ 10 பல்கலைக்கழகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவக் கருவிகள் தயாரிக்கும் மையம் அமைப்பு. மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குத் தேவைப்படும்

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு தலைப்புகள் மற்றும் பாடங்களுக்கான தொடுஉணர் வரைகலை (Tactile Graphics) இடம்பெற்றுள்ள மற்றும் இடம் பெறாத பிரெய்லி புத்தகங்களை, இம்மையங்கள் வழங்கும். இந்த மையங்கள் அதிவேகமாகச் செயல்படும் பொருட்டு உயர் அழுத்த பிரெய்லி அச்சுப்பொறியும், தகவல் வங்கியை உருவாக்குவதற்காக தனிநபர் கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. கற்றலில் திறன் குறைந்த மாணவர்களுக்கு உதவும் வண்ணம் பல்லூடகம் சார்ந்த கணினி உதவிப்பெட்டகமும் அளிக்கப்படும்.

- 10 பல்கலைக்கழகங்களில் உயர்சிறப்புவாய்ந்த முதுநிலை பட்டமையங்கள் உயர்தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்களுடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த உயர் தொழில்நுட்பம் அறிவுசார் தகவல்களை உடனுக்குடன் சுலபமாகப் பெற உதவும்.

- இணையதளத்தின் மூலமாக, மாணவர்கள், புத்தகங்கள், பருவகால இதழ்கள், மேற்கோள் நூல்கள் போன்றவற்றைப் படிப்பதற்கு வசதியாகப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து நூலகங்களும் இணைப்பு.

- 5 பல்கலைக்கழகங்களின் கீழுள்ள 30 கல்லூரிகளில் மென்திறன் மையம். இம்மையங்கள் மூலம் மாணவர்களின் வாழ்க்கைத் திறனையும், அவர்களின் ஆளுமை திறனையும் வளர்க்கப் பயிற்சிகள்.

- பெரம்பலூர், ஈரோடு, கன்னியாகுமரி, தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் மூலம் முதுநிலைக் கல்வி விரிவாக்க மையங்களைத் திறந்திட ஆணை. இம்மையங்களில் முதுகலைப் பட்டப்படிப்புகள் வழங்கப்படும். மாணவர்கள் அதிநவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இம்மையங்கள் உதவும். கிராமப்புர மாணவர்கள் பெருமளவில் பயன்பெற்று நகர்ப்புரத்தில் இருப்பவர்களைப் போன்று தேவையான திறன்களை அடைவார்கள். உயர்தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்களைக் கொண்டுள்ள இம்மையங்கள், கிராமப்புர மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்கள் முதுநிலை மற்றும் தரமான ஆராய்ச்சிக் கல்வி பெறுவதை உறுதி செய்கின்றன.

- அரசு, அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரிகள் / பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் / பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 3,35,086 விலையில்லா மடிக்கணினிகள்.

- அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கச் சட்டம்.



★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் பெருமளவு உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, 400 புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்துதல் மற்றும் 986 உதவி பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல்.

★ 93 கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.100 கோடி.

★ ஸ்ரீரங்கம் உட்பட 10 இடங்களில் அரசுப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவ ஆணை. ஒவ்வொரு கல்லூரிக்கும் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 13.30 கோடி நிதி ஒதுக்கீடு.

★ ரூ.478.7 கோடியில் 2,48,064 முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை. ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் தமிழக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் இச்சலுகை நீட்டிப்பு.

★ தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு முறை மூலம் பணியிட மாறுதல்.

* பி.இ. / பி.டெக் பொறியியல் கல்வி பயிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 106 மாணவர்கள் தங்களது பொறியியல் படிப்பைத் தொடர்ந்து பயில முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25,000/– வீதம் ரூ.26,50,000/– நிதியுதவி.

* முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முதல் முறையாக, பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கும் இரண்டாம் ஆண்டு நேரடி பொறியியல் சேர்க்கை மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.இ. / எம்.டெக். போன்ற முதுகலை படிப்பு சேர்க்கைக்கான கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கும் அனுமதி.

* 2010–2011ஆம் ஆண்டில் 6.10 இலட்சமாக இருந்த உயர்கல்வி மாணவர்களின் சேர்க்கை 2012 – 2013ஆம் ஆண்டில் 6.52 இலட்சமாக உயர்வு.

* முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குக் கல்விக் கட்டணத்தை அளிக்கும் திட்டத்தின் மூலம் 2012 – 2013ஆம் ஆண்டில் ரூ.518 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* அரசு / அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் / பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள்.

* தஞ்சாவூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பொறியியல் கல்லூரிகள்.

* ஸ்ரீரங்கத்தில் சேதுராப்பட்டி கிராமத்தில் புதிய இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு 56.37 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு. 2013 – 2014ஆம் கல்வியாண்டிலிருந்து வகுப்புகள் தற்காலிக கட்டடத்தில் தொடக்கம்.

* அரசு கலை – அறிவியல் கல்லூரிகளின் கௌரவ விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.6,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்வு.

* அரசு பொறியியல் கல்லூரி பகுதிநேர ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.5,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்வு.

* அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.6,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்வு.

* அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு 151 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 134 விரிவுரையாளர்கள் தேர்வு.

- ✶ தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் வாயிலாக 32 மாவட்டங்களில் சமுதாய கல்லூரிகள்.
- ✶ ரூ. 100 கோடி செலவில் 86 அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை – அறிவியல் கல்லூரிகள் மற்றும் 7 அரசு கல்வியியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- ✶ ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாடு சென்று கல்வி கற்கும் திட்டம் தொடக்கம். இத்திட்டத்தின்கீழ் ஒரு பருவத்தினை இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கு 25 மாணவர்கள் மற்றும் 5 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

- ✶ 14 புதிய அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை – அறிவியல் கல்லூரிகள்.
- ✶ செய்யாரில் ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குதல்.
- ✶ ஸ்ரீரங்கத்தில் ஒரு பொறியியல் கல்லூரி தொடங்குதல்.
- ✶ பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்வி கட்டண விலக்கு அளிக்க ஆண்டுத் திட்டம் ரூ. 650 கோடியாக உயர்வு.
- ✶ அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழுள்ள நான்கு மண்டல மையங்கள் மற்றும் உறுப்பு பொறியியல் கல்லூரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.150 கோடி செலவில் மேம்படுத்துதல்.
- ✶ அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 530 உதவிப் பேராசிரியர்கள், அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முறையே 61 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் 351 விரிவுரையாளர்கள் நியமனம்.
- ✶ 9 பல்கலைக்கழகங்களில் சுவாமி விவேகானந்தரின் பெயரில் உயர் ஆய்வு கல்வி மையம் அமைத்தல்.

❖ ❖ ❖



# விவசாயிகளை உயர்த்தும் வேளாண்மைத்துறை

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
திரு. **செ.தாமோதரன்** அவர்கள்





- ✶ ஜூன் மாதம் பாசனத்திற்காக மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டதால் 1,80,000 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் நெல் சாகுபடி.
- ✶ உரங்கள், வேளாண்கருவிகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களுக்கு 4% மதிப்புக்கூட்டு வரி விலக்கு.

✶ டிஏபி உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைத்திட டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லா முன்பணம் 2011ஆம் ஆண்டில் ரூ.135.5 கோடி மற்றும் 2012ம் ஆண்டில் ரூ.150 கோடி.

✶ வேளாண் துறைக்கு ரூ.6,491.7 கோடி நிதி ஒதுக்கீடு.

**நுண்ணீர்ப் பாசன செயலாக்கம்**

✶ சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் நுண்ணீர்ப் பாசனக் கருவிகள்.

✶ இதர விவசாயிகளுக்கு 75% மானியத்தில் நுண்ணீர்ப் பாசனக் கருவிகள்.

**ஒட்டுமொத்த கிராம திருந்திய நெல் சாகுபடித் திட்டம்**

✶ 2011–2012ஆம் ஆண்டு 2,880 கிராமங்களில் 25.05 இலட்சம் ஏக்கரிலும், 2012–2013ஆம் ஆண்டில் 1,695 கிராமங்களில் 6.01 இலட்சம் ஏக்கரிலும் திருந்திய நெல் சாகுபடி முறையினைப் பின்பற்றி நெல் சாகுபடி செய்யப்பட்டது.

✶ ஒருங்கிணைந்த பயறு சாகுபடித் திட்டத்தில் 3,402 கிராமங்களில் 4.18 இலட்சம் ஏக்கரில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி.

**பயறுவகைப் பயிர்கள் சாகுபடியில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம்**

✶ ரூ.10.25 கோடியில் 12,179 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட பயறுவகைப் பயிர்களில் நுண்ணீர்ப் பாசனத் தொழில் நுட்பம் செயல்பாடு.

**நெல் கொள்முதல் விலை அதிகரிப்பு**

✶ சன்னரக நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.1,100/–லிருந்து ரூ.1,350 ஆகவும், இதர நெல் இரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,080/–லிருந்து ரூ.1,300 ஆகவும் உயர்வு.

**கரும்பு ஆதரவு விலை**

✶ ஒரு டன்னுக்கு 2011ல் ரூ.2,100/– ஆகவும், 2012ல் ரூ.2,350/– ஆகவும் உயர்வு.

**தானே நிவாரணம்**

✶ ரூ.791 கோடி செலவில் தானே புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மறுவாழ்வு வழங்கும் வகையில் சிறப்புத் தொகுப்புத் திட்டம்.

✶ பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒரு எக்டேருக்கு நெல்லுக்கு ரூ.10,000, இதர பாசனப் பயிருக்கு ரூ.7,500, மானாவாரி பயிருக்கு ரூ.4,000மும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

- ✶ பாதிப்படைந்து முறிந்துபோன 2.13 இலட்சம் தென்னை மரங்களை வெட்டி அகற்ற ரூ.10.66 கோடி.

- ✶ உணவு உற்பத்தியினை உறுதிசெய்யவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும், பயறுவகை சிறுதளை விதைப்பைகள் ரூ.30.56 கோடி செலவில் 3.66 இலட்சம் பயனாளிகளுக்கு விநியோகம்.

- ✶ விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ரூ.4.54 கோடியில் 2.11 இலட்சம் தென்னங்கன்றுகள் நடவு.

**உணவு தானிய உற்பத்தி**

- ✶ உணவு தானிய உற்பத்தியில் 101.52 இலட்சம் மெ.டன் உற்பத்தி செய்து சிறப்பான சாதனை அடைந்ததற்காக மத்திய அரசால் தமிழக அரசுக்கு கிரிஷிகர்மான் விருது.

**சாதனை படைத்த விவசாயிக்குப் பரிசுத்தொகை**

- ✶ திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக 8,421 கிலோ நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்த மதுரை மாவட்ட விவசாயி திரு. ஞ.சோலைமலைக்கு ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு.

**நீடித்த நவீன கரும்பு சாகுபடித் தொழில்நுட்பம்**

- ✶ 2,360 கிராமங்களில் ரூ. 22.78 கோடியில் 12,500 ஏக்கர் பரப்பில் நீடித்த நவீன கரும்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

**துவரை நடவுமுறைத் தொழில்நுட்பம்**

- ✶ பத்து மாவட்டங்களில் ரூ.10.66 கோடியில் 75,000 ஏக்கர் பரப்பளவில் நடவுமுறையில் துவரை சாகுபடித் தொழில்நுட்பம்.

**உழவர் பெருவிழா**

- ✶ பல துறைகள் ஒருங்கிணைந்து செயலாற்றும் விழிப்புணர்வுப் பிரச்சார இயக்கமான உழவர் பெருவிழாத் திட்டத்தில் 38 இலட்சம் விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். ரூ.36 கோடி நிதி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. 5.60 இலட்சம் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டன. 2.98 இலட்சம் உழவர் ஒருங்கிணைந்த கையேடுகள் விநியோகம்.

**டெல்டா மாவட்டங்களுக்கான சிறப்பு சம்பா திட்டம்**

- ✶ ரூ.43.28 கோடியில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திடவும், உற்பத்தியினை அதிகரிக்கவும், நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட தொகுப்பு திட்டம்.

**டெல்டா மாவட்டங்களுக்கான கூடுதல் திட்டம்**

- ரூ.21.061 கோடியில் டெல்டாவில் மேட்டூர் அணையிலிருந்து நீர்வரத்து குறைவானதால் சம்பா பயிரினைக் காப்பாற்றிட கூடுதல் தொகுப்புத் திட்டம்.

**ஒட்டுமொத்த பயிர்க்காப்பீடுத் திட்டம்**

- மழையின்மை காரணமாக டெல்டா விவசாயிகளை வறட்சி பாதிப்பிலிருந்து காத்திட 5.32 இலட்சம் விவசாயிகளுக்குத் தமிழக அரசு ரூ. 30 கோடி நிதி செலவினம்.

**உழவர் ஒருங்கிணைந்த கையேடு**

- ரூ. 53.17 இலட்சம் செலவில் 8.18 இலட்சம் உழவர் ஒருங்கிணைந்த கையேடுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

**டெல்டா பகுதிகளுக்கு வறட்சி நிவாரணம்**

- 3.61 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்த நெல் பயிர் வறட்சியினால் பாதிப்படைந்தது.
- ஒரு ஏக்கருக்கு ரூ.15,000/– வறட்சி நிவாரணம்.
- டெல்டா பகுதிகளில் 3.53 இலட்சம் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ. 543 கோடி.

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை**

- ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1,67,190 ஏக்கரில் ரூ. 14 கோடி மதிப்பில் தோட்டக்கலைப் பயிர்கள்.
- தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியினை மேம்படுத்திட 12,800 விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பத் தோட்டக் கலைப்பயிர்கள் சாகுபடி முறைகளில் ரூ.26.17 இலட்சத்தில் பயிற்சி.
- ரூ.2.76 கோடி செலவில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகள் பயனடையும் வகையில் மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம்.
- 20,946.25 ஏக்கரில் ரூ.16.43 கோடி செலவில் தோட்டக்கலைப் பயிர்களில் துல்லியப்பண்ணையம்.
- ரூ. 6 கோடி செலவில் தமிழகத்தில் 10 மாவட்டங்களில் மாவட்டத் தோட்டக்கலைத் தகவல் மற்றும் பயிற்சி நிலையம்.
- தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தோட்டக்கலைத்துறையில் ஆரம்பம் முதல் இறுதி வரை ரூ.2 கோடி நிதியில் கணினிமயமாக்கல் திட்டம்.

* ரூ.34 கோடி செலவில் சென்னை மற்றும் கோவை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் “பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம்”

**தேசியத் தோட்டக்கலை இயக்கம்**

* ரூ.122.94 கோடி மதிப்பில் 1,20,277.5 ஏக்கரில் தேசிய தோட்டக்கலை இயக்கம். ரூ.5 இலட்சம் செலவில் தேனியில் தேசிய அளவிலான வாழைக் கருத்தரங்கு.
* இண்டோ – இஸ்ரேல் திட்டத்தின் கீழ் “கொய்மலர் மகத்துவ மையம்” தளி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், “காய்கறி மகத்துவ மையம்” ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டத்திலும் ரூ.18.98 கோடி செலவினத்தில் மூன்று ஆண்டுகளில் அமைத்திட நடவடிக்கை.

**தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கம்**

* 1,30,661.9 ஏக்கரில் 20,916.11 இலட்சம் செலவில் தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கம்.
* 100 சத மாதிரி நுண்ணீர்ப்பாசன கிராமங்கள் மாவட்ட அளவில் திட்டமிடப்பட்டு (31 கிராமங்கள்) 2,546 விவசாயிகள் பயனடையும் வகையில் 5,534.95 ஏக்கரில் நுண்ணீர்ப்பாசன முறை.

**பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்**

* பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ரூ.5.73 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா திறக்கப்பட்டது.
* கொடைக்கானலில் உள்ள பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா மற்றும் செட்டியார் பூங்கா ரூ.1.13 கோடி செலவில் சீரமைப்பு.
* சேலம் மாவட்டம், ஏற்காட்டில் ரூ.7.45 கோடி செலவில் அரசு தாவரவியல் பூங்கா ரூ.8.16 கோடி செலவில் ஐந்திணை மரபணுப் பூங்கா பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உருவாக்கம்.
* ரூ.3.50 கோடியில் கொடைக்கானலில் உள்ள அரசுத் தோட்டக்கலைப் பண்ணையில் ரோஜாதோட்டம்மற்றும்கொய்மலர்மாதிரிசெயல்முறைப்பண்ணை, கன்னியாகுமரியில் ரூ.4 கோடி செலவில் சுற்றுச்சூழல் பூங்கா. கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ரூ.2 கோடி செலவில் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

**அரசுத் தோட்டக்கலைப் பண்ணை**

* 350 இலட்சம் இனத்தூய்மையான நடவுச்செடிகள் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றை விவசாயிகளுக்குத் தோட்டக்கலைத் துறையின் பல்வேறு திட்டங்களின் மூலம் வழங்கல்.

* ரூ. 14.23 கோடி செலவில் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளை நவீனப்படுத்திடவும், பண்ணை விளை நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் திட்டம் தொடக்கம்.
* தமிழ்நாடு – நீர்வள, நிலவளத் திட்டத்தில் 20,455 ஏக்கர் பரப்பு இலக்கு. 16,405 ஏக்கர் சாதனை. ரூ. 9.60 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.
* ரூ.7.64 கோடி செலவில் 16,980 ஏக்கர் பரப்பு சாதனை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (டான்ஹோப்)**

* ரூ.95 கோடி மதிப்பிலான இடுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் விநியோகம்.

**வேளாண்மைப் பொறியியல் துறை**

* வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டங்களின் கீழ், 60,928 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.116.22 கோடி மானியம்.
* ரூ.18.47 இலட்சத்தில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கங்கள். ரூ.31.85 இலட்சத்தில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை கையாள்வதில் விவசாயிகளுக்குப் பயிற்சிகள்.
* ரூ.73.90 இலட்சம் செலவில் 554 கிராமப்புர இளைஞர்களுக்குப் பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமான பயிற்சிகள்.
* நதிப்பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகள், மலைப்பகுதிகள், பழங்குடியினர் வாழும் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் மண் அரிப்பினைத் தடுத்து வேளாண் நிலங்களைப் பாதுகாக்கவும், மண்ணின் ஈரப்பதத்தினைத் தக்கவைப்பதன் மூலம் மண்வளத்தைக் காத்து வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் நடவடிக்கை.
* மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத்திட்டங்கள் ரூ.49.71 கோடி செலவில் 68,602.5 ஏக்கர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 5,168 கட்டுமானங்கள் அமைப்பு.
* பாசன பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 10 மாவட்ட பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் 1,11,685 ஏக்கர் பரப்பளவில் ரூ.111.90 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.
* ரூ.30.30 கோடி செலவில் நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், பயிர்வளர்ச்சியின் முக்கியக் காலகட்டத்தில் பாசனம் செய்வதற்கும், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் 1,235 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள்.

* ரூ.71.17 கோடி செலவில் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், 46,412.5 ஏக்கர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனப் பணிகள், 453 பண்ணைக்குட்டைகள், 658 நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் மற்றும் பாசனப் பகுதிகளில் குழாய் மூலம் பாசன வசதிகள்.
* விவசாயிகள் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நில மேம்பாட்டுக் கருவிகள் வாடகைக்கு விடும் திட்டத்தின்கீழ், டிராக்டர்கள் மூலம் 3,33,678 மணி நேரம் உழவுப் பணிகள், புல்டோசர்கள் மூலம் 1,79,182 மணி நேரம் நில மேம்பாட்டுப் பணிகள், நெல் அறுவடை இயந்திரங்கள் மூலம் 33,826 மணி நேரம் அறுவடைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை**

* ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
* ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 88 நவீன கிடங்குகளை அமைப்பதற்காக ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.127.60 கோடி ஒதுக்கீடு.
* ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 70 குளிர்பதன வசதி அமைப்புகள் ஏற்படுத்துவதற்காக ரூ.22.26 கோடி ஒதுக்கீடு.
* உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக, நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.22.38 கோடி ஒதுக்கீடு.
* காய்கறிகள், பழங்கள், புளி, மிளகாய், எலுமிச்சை, திராட்சை மற்றும் வாழை போன்ற விளைபொருட்களுக்காக வணிக வளாகங்கள் மற்றும் குளிர்சாதன வசதி அமைப்புகளை, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உருவாக்குவதற்காக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.35.90 கோடி ஒதுக்கீடு.
* விவசாயிகளுக்குப் பயிர் மற்றும் சந்தை சார்ந்த விவரங்களை வழங்குவதற்காக திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாடு மையம் அமைக்கும் பொருட்டு ரூ.1.17 கோடி ஒதுக்கீடு.
* ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரம் விற்பனை வளாகம், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் குளிர்சாதன வசதி அமைப்புகளை உருவாக்குவதற்காக, 75 சதவீதத் தொகையாக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு முகமையின் (அபீடா) நிதி உதவியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
* தற்போது உள்ள சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களைக் கணினி மயமாக்குவதற்கும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.22.30 கோடி ஒதுக்கீடு.

- ✶ உணவுப் பதப்படுத்துதலை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தினை மத்திய மற்றும் மாநில அரசின் 75:25 மானியப் பங்களிப்புடன் செயல்படுத்திட ரூ.10.40 கோடி ஒதுக்கீடு.

**சர்க்கரைத் துறை**

- ✶ நீடித்தநவீனகரும்புசாகுபடித்திட்டத்தினைக்கொண்டுகரும்புமகசூலைஇரட்டிப்பாக்கி கரும்பு உற்பத்தியை 1,000 இலட்சம் டன்களாக உயர்த்த நடவடிக்கைகள்.
- ✶ ரூ.500/– இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1,000 எண் நிழல்வலைக் கூடங்கள் அமைத்து செதில் பரு நாற்றுக்கள் உற்பத்தி செய்து 7,500 ஏக்கரில் நடும் பணிகள்.

**விதைச்சான்றளிப்பு**

- ✶ விதைச்சான்றளிப்புத் திட்டத்தின் கீழ் 2,81,250 ஏக்கர் இலக்கிற்கு 2,37,195 ஏக்கர் பரப்பு பதிவு செய்யப்பட்டு, 2,00,000 மெ.டன் இலக்கிற்கு 1,83,234 மெ.டன் விதைகளுக்கு சான்றளிப்பு.
- ✶ முதன் முறையாக வரலாறு காணாத சாதனையாக ஒரு இலட்சத்து இரண்டாயிரம் மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்று வழங்கப்பட்டது.

I. **விதை ஆய்வு**

- ✶ விதை விற்பனை நிலைய ஆய்வுகளில் 1,35,500 எண்கள் இலக்கிற்கு, 1,30,715 எண்கள் விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதை மாதிரிகள் எடுத்தலில் 1,30,500 எண்கள் இலக்கிற்கு 1,12,707 எண்கள் விதை மாதிரிகள் தரப் பரிசோதனைக்காக எடுக்கப்ட்டுள்ளன.
- ✶ 24,013 விதைக் குவியல்கள், 2,075 மெ.டன் தரக் குறைவானவை எனக் கண்டறியப்பட்டு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது . அதன் மதிப்பு ரூ.966 இலட்சம்.
- ✶ விதைச்சட்ட மீறல்களுக்காக நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 738 வழக்குகளில், 602 வழக்குகள் அரசுக்குச் சாதகமான தீர்ப்புகள்.

II. **விதைப் பரிசோதனை**

- ✶ விதைப் பரிசோதனைத் திட்டத்தில் 1,72,500 எண்கள் இலக்கிற்கு, 1,78,723 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் அறிவிப்பு.
- ✶ அனைத்து விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் ரூ 21.58 இலட்சம் மதிப்பில் கணினி வசதிகள்.
- ✶ ஏழு விதைப் பரிசோதனை நிலையங்கள்,மரபணு பரிசோதனை நிலையம் மற்றும் பிடி நஞ்சுப் பரிசோதனை நிலையம் ஆகியவற்றிற்கு ரூபாய் 90.95 இலட்சம் மதிப்பில் புதிய, மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள்.

- ✶ ரூ.26 இலட்சம் செலவில் கோவை கண்ணம்பாளையத்தில் உள்ள இனத்தூய்மை பரிசோதனைப் பண்ணையில் புதிய குடோன் வசதி ஏற்படுத்துதல், கிணற்றின் உட்புறச் சுவர் கட்டுதல் மற்றும் தற்பொழுதுள்ள நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல்.
- ✶ விதைப் பரிசோதனை நிலையங்களுக்கும் மேம்படுத்தப்பட்ட, தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கி தரம் மேம்படுத்துதல்.

III. **பயிற்சி**

- ✶ சான்று விதை உற்பத்தியைப் பெருக்கவும், தரமான விதைகளை உபயோகிப்பதில் விழிப்புணர்வுஏற்படுத்தவும்,85,800நபர்களுக்குப்பயிற்சிவழங்குதல்என்றஇலக்கிற்கு, 93,220 விதை உற்பத்தியாளர், விதை விற்பனையாளர், விதை சாகுபடியாளர் மற்றும் உழவர்களுக்கு விதைச்சான்று மற்றும் விதைத் தரக்கட்டுப்பாடுப் பயிற்சி.
- ✶ விதை உற்பத்தியில் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்திட, அட்மா திட்டத்தின் கீழ், ரூ.57.25 இலட்சம் மதிப்பில் விதை உற்பத்தியாளர் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள்.

IV. **அங்ககச்சான்றளிப்பு**

- ✶ அங்ககச்சான்றளிப்புத் திட்டத்தின் கீழ் 60,500 ஏக்கர் இலக்கிற்கு 42,197 ஏக்கர் பரப்பு பதிவு.
- ✶ ஜி.எஸ்.1 இந்திய நிறுவனத்திடம் இருந்து நிறுவன முற்சேர்க்கை எண் மற்றும் பார்கோடிங் வாங்கப்பட்ட, ரகசிய வார்த்தை மூலம் பாதுகாக்கப்பட்ட மூன்றாம் பிரிவு டிஜிட்டல் கையொப்பம் பெறப்பட்ட ரூ.1,60,000 மதிப்புள்ள ஏழு ஜி.பி.எஸ். கருவிகள் பெறப்பட்டுள்ளன.
- ✶ தகுதி வாய்ந்த அங்கக விவசாயிகளுக்கு, வாய்ப்புச் சான்றிதழ் மற்றும் வணிகச் சான்றிதழ்.

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை**

- ✶ 1993 நீர்வடிப்பகுதிகளில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி 90:10 என்ற விகிதத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் செயல்பாடு.
- ✶ ரூ.16,200.95 இலட்சம் செலவில் 2,85,452.5 ஏக்கர் நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள்.
- ✶ நிலவள மேம்பாட்டின் கீழ் 3,907.5 ஏக்கரில், நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள். நீர்வள மேம்பாட்டின் கீழ் 1,160 கசிவு நீர்க்குட்டைகள், 2,969 பண்ணைக் குட்டைகள், 596 கால்நடைக்குட்டைகள், 2,308 அமிழ்வு நீர்க்குட்டைகள், 6,531 தடுப்பணைகள் மற்றும் 1,165 குளங்கள் தூர்வாருதல். தாவர வள மேம்பாட்டின் கீழ் 20,212.5 ஏக்கர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவனப் பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப்பணிகள்.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்**

- ✶ 17 மாவட்டங்களில் 1,222 நீர்வடிப்பகுதிகளில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்பாடு.
- ✶ ரூ.34.44 கோடி செலவில் 55,098 எக்டர் நிலம் மேம்பாட்டுப் பணிகள்.
- ✶ நிலவள மேம்பாட்டின் கீழ் 488 ஏக்கரில் நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள். நீர்வள மேம்பாட்டின் கீழ் 539 கசிவு நீர்க்குட்டைகள், 1,092 பண்ணைக் குட்டைகள், 284 கால்நடைக் குட்டைகள் 124 அமிழ்வு நீர்க்குட்டைகள், 969 தடுப்பணைகள் மற்றும் 354 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தாவர வள மேம்பாட்டின் கீழ் 14,147.5 ஏக்கர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவனப் பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப்பணிகள்.
- ✶ வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் 24 மாவட்டங்களில் 910 நீர்வடிப்பகுதிகளில் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் செயல்பாடு.
- ✶ ரூ.23.53 கோடி செலவில் 1,06,935 ஏக்கர் தரிசு நிலம் விளைநிலங்களாக மாற்றம்.
- ✶ நிலவள மேம்பாட்டின் கீழ் 2,237.5 ஏக்கரில் நிலம் சமன்பாடு, கோடை உழவு, சம உயர வரப்பு, கல் வரப்பு மற்றும் தடுப்புச் சுவர் பணிகள். நீர்வள மேம்பாட்டின் கீழ் 267 கசிவு நீர்க்குட்டைகள், 841 பண்ணைக் குட்டைகள், 80 கால்நடைக் குட்டைகள், 660 அமிழ்வு நீர்க்குட்டைகள், 903 தடுப்பணைகள் மற்றும் 396 குளங்கள் தூர்வாருதல் ஆகிய பணிகள். தாவர வள மேம்பாட்டின் கீழ் 31,180 ஏக்கர் பரப்பில் பழமரக்கன்றுகள், தீவனப் பயிர் வளர்ப்பு மற்றும் சமூகக் காடுகள் வளர்ப்புப்பணிகள்.
- ✶ 18 மாவட்டங்களில், 200 நீர்வடிப்பகுதிகளில் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ( நவப்ரா ) செயல்பாடு.
- ✶ ரூ.17.78 கோடி செலவில் 74,082.5 ஏக்கர் நிலம் மேம்பாடு. நீர்வள மேம்பாட்டுப் பணிகளான 320 பண்ணைக் குட்டைகள், 540 கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் 200 தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ✶ 25 மாவட்டங்களில் (பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டு முன்னோடித் திட்ட மாவட்டங்கள் உட்பட) 155 நீர்வடிப்பகுதிகளில் 77 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி – நபார்டு செயல்பாடு.
- ✶ ரூ.3.38 கோடி செலவில் 10,147.5 ஏக்கர் நிலம் 13 மாவட்டங்களில் உள்ள 34 நீர்வடிப்பகுதிகளில் மேம்பாடு.

* 3,975 ஏக்கரில் நிலமேம்பாட்டு பணிகள், 360 பண்ணைக்குட்டை அமைத்தல் மற்றும் 270 எக்டரில் தாவர மேம்பாட்டு பணிகள்.

**நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டம்**

* நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டம் முதன் முறையாக தமிழகத்தில் செயல்பாடு. ரூ.1.3 கோடிக்கு அரசாணை வழங்க ரூ.1.44 கோடி நிதி விடுவிப்பு.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**

* திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் தொகுதியில் நாவலூர் குட்டப்பட்டில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் நாட்டிலேயே முதன் முறையாக மகளிருக்காகப் பிரத்தியேகமான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

**பப்பாளி மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி**

* பப்பாளி மாவுப் பூச்சி தாக்கி 90 சத சேதத்தை ஏற்படுத்தியது.

* பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய வேளாண்மையில் முக்கியப் பூச்சிகள் நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்டு, பெருக்கி 35,00,000 அசிரோபேகஸ் பப்பாயே பூச்சிகள் தமிழகமெங்கும் விடப்பட்டன. இதனால் ரூ.435 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் பாதுகாக்கப்பட்டன. ரூ.265 கோடி மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட வில்லை. இதன் மூலம் சுற்று சூழலும் பாதுகாக்கப்பட்டது.

* தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் தமிழ்நாட்டின் 28 மாவட்டங்களில் ரூ. 14 கோடி திட்ட மதிப்பீட்டில், புதிதாக சமுதாய வானொலி நிலையங்களை நிறுவ ஏற்பாடு. தட்பவெப்பநிலை, வேளாண் விளைபொருட்களின் அன்றாட சந்தை விலை, விவசாயிகளின் வெற்றிக் கதைகள், பல்வேறு பயிர்த்திட்டங்கள் பற்றிய வேளாண் விஞ்ஞானிகளின் ஆலோசனைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் பற்றிய பல்வேறு செய்திகள் இச்சமுதாய வானொலி மூலமாக ஒலிபரப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெற்ற விருதுகள்**

* இந்திய வேளாண்மை வணிக மையம் வழங்கிய தேசிய அளவிலான சிறந்த வேளாண் வணிக இயக்குனரகத்திற்கான விருது.

**கிருஷி சீக்ஷா விருதி**

* மகேந்திரா அண்ட் மகேந்திரா நிறுவனம் வழங்கிய சிறந்த மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்காக கிருஷி சீக்ஷா விருது.

**மிக ஆளுகைக்கான தங்க விருது**

- 2011–ஆம் ஆண்டின் மின் ஆளுகைக்கான ‘தங்க விருது’ நிருவாகம் சீர்த்திருத்தங்கள் மற்றும் பொதுக் குறைகள் துணை மற்றும் இந்திய அரசாங்கத்தின் தகவல் தொழில் நுட்பத்துறைகள் இணைந்து தமிழ்நாடு வேளாண் துறைக்கு (AGRISNET) இணைய தளத்திற்கு வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் AGRITECH PORTAL மற்றும் AGMARKMET அடங்கும்.
- “அட்மா” திட்டத்தின் கீழ் 1,322 விரிவாக்க அலுவலர்கள் மற்றும் 8,054 உழவர் நண்பர்கள் நியமனம்.
- ரூ.25 கோடியில் விவசாயிகளுக்கு உழவர் பெரு விழாவில் இடுபொருட்கள் விநியோகம்.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

- தேசிய வேளாண்வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு.
- தரமான விதைகளை உற்பத்தி செய்ய ரூ.161.62 கோடி நிதி ஒதுக்கீடு.
- திரவ உரங்கள் வாங்கி சேமிப்பு. பின்னர் விநியோகிக்க ரூ.50 கோடி சுழல்நிதி .
- பயிர் காப்பீட்டுக்கு ரூ.42.95 கோடி நிதி ஒதுக்கீடு.
- சொட்டு நீர்பாசன மானியத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 1 ஏக்கர் என்ற உச்ச வரம்பு நீக்கம்.

**வறட்சி நிவாரணம் – 110 அறிவிப்பு**

- ரூ.68 கோடி மதிப்பீட்டில் டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கு கூடுதல் சிறப்பு உதவிகள்.

**டெல்டா அல்லாத மாவட்டங்கள்**

- ரூ.836 கோடி செலவில் தமிழகத்தில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் 50%க்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள 17.94 இலட்சம் விவசாயிகளுக்கு நிவாரணம்.
- ரூ.750 கோடி செலவில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் 50,000 பண்ணைக் குட்டைகள்.
- ரூ.1,754.86 கோடி செலவில் டெல்டா அல்லாத இதர மாவட்டங்களுக்கென நிவாரண உதவிகள்.

- இந்தியாவிலேயே முதன் முறையாக வறட்சிக்காக நிவாரணஉதவிகள்.

- ரூ.312.89 கோடி செலவில் 50 சதவிகிதத்திற்கு மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள 6.25 இலட்சம் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5,000 நிவாரணத் தொகை. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையை தாண்டி ரூ.2,571 அதிகம்.

- ரூ.50.15 கோடி செலவில் நெல், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத பயிர்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள 1.01 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000 நிவாரணத் தொகை. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையை தாண்டி ரூ.1,571 அதிகம்.

- ரூ.424.24 கோடி செலவில் பாசன ஆதாரமற்ற நிலங்களில் நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத இதர பயிர்களை சாகுபடி செய்து 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள 10.05 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3,000 நிவாரணத் தொகை. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையை தாண்டி ரூ.2,785 அதிகம்.

- ரூ.43.35 கோடி செலவில் தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள 50,908 விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000 நிவாரணத் தொகை. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையை தாண்டி ரூ.761 அதிகம்.

- ரூ.4.58 கோடி செலவில் மல்பெரி விவசாயிகளின் பயிர்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள 10,602 விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3,000 நிவாரணத் தொகை. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையை தாண்டி ரூ.1,704 அதிகம்.

✶ ✶ ✶

**முன்னுரிமை**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். அதே நேரத்தில், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அதாவது inclusive growth அமையும் வண்ணம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



# நாட்டுயர்வுக்கு வழிகோலும் கூட்டுறவு

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்

திரு. **செல்லூர் கே. ராஜு** அவர்கள்



**வேளாண்மைப் புரட்சிக்கு வித்திடும் கூட்டுறவு நிறுவனங்கள்**

- ✶ வேளாண் உற்பத்தியை அதிகரிக்க 19,20,819 விவசாயிகளுக்கு ரூ.7,350 கோடி பயிர்க்கடன். நிர்ணயிக்கப்பட்ட குறியீடு ரூ.7,000 கோடி.
- ✶ உரிய காலத்தில் பயிர்க்கடன்களைத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டு ரூ.294 கோடி மானியமாக விடுவிப்பு.
- ✶ தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் தேங்காயைத் தரமான கொப்பரையாகத் துரிதமாக மாற்ற ரூ.129.58 இலட்சம் செலவில் 22 சூரியஒளி தேங்காய் கொப்பரை உலர்கலன்கள்.
- ✶ பாமணி உர உற்பத்தி நிறுவனத்தில் உரிய எடையில் துரிதமாகச் சிப்பமிட ரூ.32 இலட்சம் செலவில் அதிவேக சிப்பமிடும் இயந்திரம்.
- ✶ விவசாய வேலையாட்கள் பற்றாக்குறையினைக் களைய 1,236 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.25.60 கோடி அரசு மானியத்தில் ரூ.54.18 கோடி மதிப்பில் உழவு இயந்திரம், கதிரடிக்கும் இயந்திரம், மினி டிராக்டர் போன்ற இயந்திரங்கள் மற்றும் இதரக் கருவிகளுடன் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.
- ✶ மாநிலம் முழுவதும் டிஏபி உரம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாண் பெருமக்களுக்குத் தேவையான அளவில் உரிய நேரத்தில் கிடைக்க தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கும் வட்டியில்லாக் கடன் ரூ.130.50 கோடியிலிருந்து ரூ.150 கோடியாக உயர்வு.
- ✶ விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்களாக 1.24 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.518.38 கோடி கடன்.




**வளம் காணும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு**

- ✶ மாற்றுத் திறனாளிகள் வாழ்வு மேம்பாடடையவும், வருவாய் ஈட்டும் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வட்டியில்லாக் கடனாக 11,498 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.35.08 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய வட்டியில்லாக் கடன் வழங்க அரசு ரூ.1.80 கோடி மானியமாக விடுவித்துள்ளது.

**மகளிர் மேம்பாட்டிற்கான மகத்தான பணி**

- ✶ மகளிர் தொழில் திறனை ஊக்குவித்து, பொருளாதாரத் தன்னிறைவு பெற 21,683 மகளிருக்கு ரூ.76.71 கோடியில் தொழில் முனைவோர் கடன்.
- ✶ பணிபுரியும் மகளிர் குடும்ப தேவைக்காக 18,036 மகளிருக்கு, ரூ.68.20 கோடி சம்பளக் கடன்.
- ✶ மகளிர் சுய தொழில் செய்து மேம்பட 1,51,757 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.976.43 கோடி கடன்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் பேணும் கூட்டுறவு நிறுவனங்கள்**

- ✶ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், கூட்டுறவு நிறுவனங்களில் அதிக அளவில் கடன் பெற்று மேம்பாடு எய்த 9,000 உறுப்பினர்களுக்கு ரூ.25 இலட்சம் பங்கு

மூலதனக் கடன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள 40,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு அதிக அளவில் கடன் பெற நபர் ஒன்றுக்கு ரூ.2,500 வீதம் ரூ.10 கோடி.

- ரூ.30.88 கோடியில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் உள்கட்டமைப்பு மற்றும் நிதியாதாரங்களை மேம்படுத்தி, நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்திட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்.
- மலை வாழ் மக்கள் வாழ்விடங்களுக்கே சென்று அவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்திட பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 வாகனங்கள்.

**மக்கள் நலப்பணியில் கூட்டுறவு நிறுவனங்கள்**

- வீட்டு வசதி மற்றும் வீட்டு அடமானக் கடன்களாக 23,272 நபர்களுக்கு ரூ.429.58 கோடி.
- மக்களுக்கு 15 விழுக்காடு தள்ளுபடி விலையில் தரமான மருந்துகள் கிடைக்க 216 கூட்டுறவு மருந்தகங்கள் திறப்பு.
- மக்களின் அவசரத் தேவைகளுக்கு நகைக் கடன்களாக 1.72 கோடி நபர்களுக்கு ரூ.62,038.63 கோடி.
- சிறு தொழில் மேற்கொள்ளவும், சிறு போக்குவரத்து வாகனங்கள் இயக்கவும், 75,207 நபர்களுக்குப் பண்ணைச் சாராக் கடன்கள் ரூ.436.06 கோடி.
- விவசாயிகளின் விளை பொருள்களுக்கு சந்தையில் நியாயமான விலை கிடைக்கும் வகையில் தானிய ஈட்டுக் கடன் ரூ.381.52 கோடி.
- சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறு வணிகர்கள், கந்துவட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கும் வகையில் சிறுவணிகக் கடன்கள் 2,58,818 நபர்களுக்கு ரூ.241.29 கோடி.

**நவீனமயமாக்கலும், வாடிக்கையாளர்களின் நலனும்**

- வாடிக்கையாளர்களின் வசதியை மேம்படுத்திட, மாவட்ட மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 102 கிளைகள் குளிர் சாதன வசதியுடன் நவீனமயமாக்கல். இதில் திருச்சி மத்தியக் கூட்டுறவு வங்கியின் ஸ்ரீரங்கம் மற்றும் பேட்டைவாய்த்தலை

கிளைகள் நவீனமயமாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

- ✶ வணிக வங்கிகளுக்கு இணையாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் சேவை முறை செயல்பாடு.
- ✶ தமிழ்நாடு மாநிலத் தலைமை வங்கி, இந்தியாவில் எந்தப் பகுதிக்கும் நிதிமாற்றம் செய்ய மின்னனு வங்கியியல் சேவை(E-Banking), நிகழ்நேர நிதி பரிமாற்றம் முறை (RTGS) மற்றும் தேசிய மின்னனு நிதி மாற்றம் (National Electronic Fund Transfer) ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**துயர் துடைக்கும் பணியில் கூட்டுறவு நிறுவனங்கள்:**

- ✶ தமிழகத்தில் சென்னையைத் தவிர்த்து ஏனைய 31 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. காவிரிப் பாசன பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் பாதிப்பைக் கருத்தில் கொண்டு, 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.
- ✶ தானே புயலால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு கடலூர் மாவட்டத்தில் 1,92,847 விவசாயிகளுக்கு ரூ.106.73 கோடியும், விழுப்புரம் மாவட்டத்தில் 79,771 விவசாயிகளுக்கு ரூ.25.94 கோடியும் அரசு நிவாரணம்.

**சேமிப்புக் கிடங்கு வசதியில் கூட்டுறவு நிறுவனங்கள்:**

- ✶ விவசாயப் பெருமக்களுக்கு அவர்கள் விளைவித்த விளைபொருளுக்கு ஆதாயவிலை கிடைக்கும் வகையில் அப்பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கவும் அதன்மீது தானிய ஈட்டுக்கடன் வழங்கவும் கூட்டுறவு நிறுவனங்களில் 2,84,700 மெட்ரிக்டன் கொள்திறன் கொண்ட 2,270 கிடங்குகள் கட்டுவதற்கு அரசு ரூ.235 கோடி மானியம்.
- ✶ தமிழக கூட்டுறவு நிறுவனங்களிலுள்ள கிடங்குகள், சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தரச் சான்று (Accreditation) பெற்று அதன் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பல்வேறு சலுகைகள் பெற நடவடிக்கை.
- ✶ உலகக் கூட்டுறவு ஆண்டினையொட்டி 7,11,234 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- ✶ இந்தியாவில் இரண்டாவது மாநிலமாக, 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் வங்கியியல் உரிமத்தைப் பெற்று சாதனை.

- ★ ரூ. 1 கோடிக்கு மேல் வணிகம் செய்யும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்கங்களின் எண்ணிக்கை, கடந்த இரண்டாண்டுகளில் 3,854 லிருந்து 4,329 ஆக உயர்வு.

- ★ கூட்டுறவு வங்கிகளின் சிறந்த செயல்பாடு மற்றும் நவீனமயமாக்கப்பட்டதன் விளைவாகக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத்தொகை ரூ.26,245.17 கோடியிலிருந்து ரூ.36,918.48 கோடியாக உயர்வு.

- ★ கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டி அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த ரூ.154.62 கோடி மாநில அரசின் மானியம்.

- ★ சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தலை நடத்திட, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

- ★ காய்கறி விலையைக் கட்டுப்படுத்த விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக்கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்.

**முன்னாள் படை வீரர்கள் நலன்**

- ★ தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களில் வீர தீரச் செயல்கள் / சிறப்பாகப் பணிபுரிந்தமைக்கான விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு வழங்கப்படும் பணமுடிப்பு மற்றும் நிலம் வழங்குவதற்குப் பதிலாக வழங்கப்படும் பணப் பயன்கள் உயர்வு.

- ★ கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதாந்திரத் தொகுப்பூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.

- ★ படைப்பணியில் உயிர் நீத்தோரின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதற்கான நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டு 90 நபர்களுக்குஅரசாங்கத்தில் வேலைவாய்ப்பு.

- ★ 273 முன்னாள் படைவீரர்கள், பல்வேறு அரசு / தனியார் நிறுவனங்களில் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மூலமாகப் பணியமர்த்தம்.

- ★ முன்னாள் படைவீரர்களின் பெயர்களைப் பதிவு செய்தல், பணியிலமர்த்துதல் மற்றும் நலத்திட்டங்களை நிருவகித்தல் ஆகியவற்றை முறைப்படுத்த முன்னாள் படைவீரர் நலத்துறையில் தேசியத் தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் அறிமுகம்.



- ★ இரண்டாம் உலகப்போர் மாதாந்திர மானியங்கள் படைவீரர்களுக்கு ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/– ஆகவும், படைவீரர்களின் கைம்பெண்களுக்கு ரூ.800/–லிருந்து ரூ.1,500/– ஆகவும் உயர்வு.

- ★ வேலூரில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் முன்னாள் படைவீரர் மையப் புதிய கட்டடம் கட்டும் பணி துவக்கம்.

- ★ தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்குப் புதிய முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் தோற்றுவிப்பு.

- ★ முன்னாள் படை வீரர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு மின்திருட்டு தடுப்புப் படையில் முன்னாள் படைவீரர்களைப் பணியமர்த்த வழிவகை செய்யப்பட்டு, இதுநாள் வரை 200 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தம்.

- ★ தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ரூ.3 இலட்சம் வரை பயன்பெறும் வகையில் ‘பணியாளர்கள் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்’ ரூ.25 இலட்சம் செலவில் அறிமுகம்.

★ தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணி புரியும் முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு பணிகளில் சிறப்புப் பயிற்சிகள்.

★ தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலம் தொகுப்பு ஊதியத்தில் பணி புரியும் பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தில் 10% உயர்வு.

★ தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மூலம் 1,168 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தம்.

★ 9,200 பணியாளர்கள் பயனடையும் வகையில் ரூ.65 இலட்சம் செலவில் ஒரு இலவச சீருடை.

★ 62 முன்னாள் படைவீரர்களின் குடும்பங்கள் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் ஈட்டுறுதிக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5,000 முதல் ரூ.1,32,000 வரை இழப்பீட்டுத் தொகை.

★ ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு ஆண்டொன்றிக்கு சுமார் ரூ.1.78 கோடி முதலீட்டுடன் குழு ஒய்வூதிய நலத்திட்டம்.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

★ விவசாயிகளுக்கு பயிர்க்கடன் ரூ.4,500 கோடியாக உயர்வு.

★ பயிர்க்கடன் வட்டி மானிய உதவிக்கு ரூ.160 கோடி.

★ ★ ★

**உணவுப் பாதுகாப்பு தரும் உன்னதத் திட்டம்**

இலவச அரிசி என்பது மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய திட்டம்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்





# சிறப்பான திட்டங்களால் பெருகிடும் வனவளம்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **கே.டி.பச்சைமால்** அவர்கள்





✶ மாநிலத்தில் பசுமைப்பரப்பினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 64ஆவது பிறந்தநாளையொட்டி ரூ.29.44 கோடி மதிப்பீட்டில் 64 இலட்சம் மரக்கன்றுகள் நடவுத் திட்டம். மேலும், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் 65ஆவது பிறந்தநாளையொட்டிரூ.43.55 கோடி மதிப்பீட்டில் 65 இலட்சம் மரக்கன்றுகள் நடவுத் திட்டம்.

* ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் “தமிழ்நாடு உயிரிபண்ணைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தில்” ரூ.21.97 கோடி வழங்கப்பட்டு மாவட்ட மேலாண்மை பிரிவினை உருவாக்குதல், சூரியசக்தி கைவிளக்கு வாங்குதல், களப்பணியாளர்களுக்கு வாகனங்கள் வாங்குதல், கிராம தன்னார்வு தொண்டர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 1,000 கிராமங்களில் உள்ள தனியார் நிலங்களில் ரூ.68.40 கோடி மதிப்பீட்டில் 1 கோடி மரக்கன்றுகள் நடப்பட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

* தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை–2ன்கீழ் ரூ.113 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* நகர்புரங்களில் குரங்குத் தொல்லைகளைப் போக்கிட 2012–2013ஆம் ஆண்டில் ரூ.3.33 கோடி அனுமதி.

* வன வளங்களை பாதுகாத்து, கட்டமைப்புகளை மேம்படுத்திட 13–ஆம் நிதிக்குழு நிதியிலிருந்து ரூ.55.45 கோடி அனுமதி.

* ரூ.6.08 கோடி ஒதுக்கீட்டில் 161.875 ஏக்கர் நிலப்பரப்பில் தேக்கு மரங்கள் நடவு மற்றும் பராமரிப்புக்கு ரூ.2.97 கோடி.

* வன உயிரினங்களால் விளை நிலங்களுக்கு ஏற்படும் அழிவிற்கு ஆறுதல் தொகை வழங்கிட ரூ.21.51 கோடி.

* ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் புதிய வன உயிரின சரணாலயம்.

* வன உயிரினப் பாதுகாப்புச் சூழல் நிதி ஏற்படுத்திட ரூ.1 கோடி.

* மலைப்பகுதி மாவட்டங்களில் பழங்குடி இளைஞர்களுக்கும் ஏற்கெனவே பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் பழங்குடி இன வேட்டை தடுப்பு காவலர்களுக்கும் சம அளவு அடிப்படையில் வனக்காவலர் பணியிடங்கள் 30% ஒதுக்கீடு செய்திட ஆணை.

* 2012–2013ஆம் ஆண்டில் 17,564.9 ஏக்கர் நிலப்பகுதி பாதுகாக்கப்பட்டு வனப் பகுதிகளாகவும், 8,949.33 ஏக்கர் நிலப்பகுதிகள் பாதுகாப்பான நிலப்பகுதி களாகவும் அறிவிக்கை.

- ✶ ரூ.12.73 கோடி செலவில் 1.19 கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு.
- ✶ வனஉயிரின வாழ்விடங்களை மேம்படுத்தி தீவன வளங்களை ஏற்படுத்த ரூ.8.24 கோடி.
- ✶ பள்ளிக்கரணை சதுப்புநிலத்தினை சீரமைத்து மேம்படுத்திட ரூ.9.21 கோடி.
- ✶ பழங்குடியினரின் பயன்பாட்டிற்கென ரூ.13.925 கோடி செலவில் சாலைகள் மேம்பாடு.
- ✶ விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.7.48 கோடி மதிப்பீட்டில் மறு உற்பத்திப்பணிகள்.
- ✶ ரூ.12.45 கோடி மதிப்பீட்டில் வனச்சாலைகள் பராமரிப்பு.
- ✶ ரூ.7.35 கோடி செலவில் ஸ்ரீரங்கம் தொகுதியில், திருச்சி வனக் கோட்டம் மேல் அணைக்கட்டு காப்புக்காட்டில் வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் நட்சத்திர வனம்.
- ✶ வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ.27.13 கோடி செலவில் மேற்படுத்தப்பட்ட வனஉயிரின பாதுகாப்பு (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) நிறுவனம்.
- ✶ நபார்டு நிதியுதவியுடன் 10 மாவட்டங்களில் தரங்குன்றிய வனப்பகுதிகளில் நீர்வள பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாட்டிற்கு ரூ.50 கோடி.
- ✶ வனவிலங்கு தாக்கி உயிரிழந்தால் வழங்கப்படும் இழப்பீடு ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகவும், பயிர்ச்சேதங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/–த்திலிருந்து ரூ.25,000/–ஆகவும் உயர்வு.
- ✶ வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.2.50 கோடி சுழல் நிதி.
- ✶ வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ/மாணவியருக்கு முதன்முறையாக பரிசாக ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– வரை வழங்குதல்.
- ✶ 45.25 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.21.18 கோடி வருவாய்.

- ✶ 458 கனமீட்டர் தேக்கு மரக்கட்டைகள் ஏல விற்பனையின் மூலம் ரூ.85 இலட்சம் வருவாய்.
- ✶ ரூ.31.99 கோடி மதிப்புள்ள சமூக வனத்தோட்டப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவாய்.
- ✶ இராமநாதபுரம் மாவட்டத்தில் சக்கரைக்கோட்டை குளம் பறவைகள் சரணாலயம்.

**தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்**

- ✶ தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் 4,24,103 மெட்ரிக் டன் கூழ்மரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு காகித ஆலை மற்றும் சேஷசாயி காகித ஆலை ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு.
- ✶ தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் (paid up share capital) ரூ.4 கோடியாக உயர்வு.
- ✶ வனத்தோட்டக் கழகம் ரூ.28 கோடி லாபம் ஈட்டியுள்ளது.

**அரசு ரப்பர் கழகம்**

- ✶ 157.85 எக்டேரில் உயர் மகசூல் தரக்கூடிய ரப்பர் மரக்கன்றுகள்.

**2013–2014ஆம் ஆண்டு திட்டங்கள்**

- ✶ வனத்துறைக்கு 15.89% உயர்த்தி ரூ.880.69 கோடி நிதி ஒதுக்கீடு.
- ✶ "சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை" உருவாக்கம்.

❖ ❖ ❖



## நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

# சாதனைப் படைக்கும் சாலைப் பணிகள்

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்
திரு. **எடப்பாடி கே.பழனிச்சாமி** அவர்கள்






- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.3,636 கோடியில் 9,893 கி.மீ. நீளச் சாலைகளில் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள்.
- ரூ.2,023 கோடியில் செலவில் திட்டம் சாராப் பணிகளின் கீழ் 11,389 கி.மீ. நீளச் சாலைகளில் பராமரிப்புப் பணிகள்.
- நபார்டு வங்கி நிதியுதவியுடன் 701.82 கி.மீ. நீளமுள்ள 186 சாலைகள் ரூ. 291.18 கோடி செலவில் மேம்பாடு.

- ரூ.257 கோடி மதிப்பீட்டில் 113 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
- சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி நகருக்கு ரூ.3.50 கோடி மதிப்பில் புறவழிச்சாலை.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் எட்டுக்குடி நகருக்கு ரூ.1.55 கோடி மதிப்பில் புறவழிச்சாலை மற்றும் நாகப்பட்டினம் நகருக்கு ரூ.19.49 கோடி மதிப்பில் புறவழிச்சாலை.
- திருச்சி மாவட்டத்தில் துறையூர் நகருக்கு ரூ.9.45 கோடி மதிப்பில் புறவழிச்சாலை.
- திருவண்ணாமலை மாவட்டத்தில், வந்தவாசி நகருக்கு 2.2 கி.மீ. நீளத்திற்கு ரூ.3.50 கோடி மதிப்பில் புறவழிச்சாலை.
- அரியலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் வட்டம் I நகருக்கு 5.25 கி.மீ. நீளத்திற்கு ரூ.16.86 கோடி மதிப்பில் புறவழிச்சாலை.
- திருப்பூர் மாவட்டத்தில், தாராபுரம் வட்டம் II நகருக்கு 2.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.4 கோடி மதிப்பில் புறவழிச்சாலை.
- சிவகங்கை நகருக்கு சுமார் 10.6 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் எடப்பாடி நகருக்கு 8.8 கி.மீ. நீளத்திற்கும் புறவழிச்சாலை அமைப்பு.
- திருப்பத்தூர், ஆற்காடு, திருவண்ணாமலை, நாமக்கல், திருச்செங்கோடு, பவானி, மயிலாடுதுறை, முதுகுளத்தூர், அம்பாசமுத்திரம், தென்காசி, சங்கரன்கோயில் மற்றும் கடலூர் ஆகிய 12 நகரங்களில் புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.154.85 கோடிஒதுக்கீடு.
- திருத்தணி, மணச்சநல்லூர், மன்னார்குடி ஆகியவற்றிற்குப் புறவழிச்சாலை அமைக்க ரூ.36.07 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு.
- ரூ.81 கோடி செலவில் கொள்ளிடம் ஆற்றில் ஸ்ரீரங்கத்தையும், திருச்சியையும் இணைக்கும் பாலம்.
- சென்னை அண்ணாசாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை மற்றும் உள்வட்டச் சாலைகள் சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்த “ஒருங்கிணைந்த திட்டம்”.
- மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களுக்கு வட்ட மற்றும் ஆரச்சாலைகள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை.

- ✶ சென்னை வெளிவட்டச் சாலை இரண்டாம் கட்டமாக சுமார் 32 கி.மீ. நீளத்திற்கு நெமிலிச்சேரி முதல் மீஞ்சூர் வரை ஆறு வழிச் சாலை அமைக்கும் பெருந்திட்டத்திற்குப் பொது மற்றும் தனியார் பங்கேற்போடு வடிவமைத்தல், கட்டுதல், நிதி திரட்டுதல், செயல்படுத்தல், ஒப்படைத்தல் (DBFOT) முறையில் அரை ஆண்டுதோறும் ஈவுத்தொகை வழங்கும் செயல்திட்டத்திற்கு ரூ. 1,075 கோடி நிதி ஒதுக்கீடு.

- ✶ சென்னை திருப்போரூர், சிங்கப்பெருமாள் கோயில், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், தாமரைப்பாக்கம், பெரியபாளையம், புதுவாயல் மற்றும் காட்டுப்பள்ளி வழியாக மாமல்லபுரத்திலிருந்து எண்ணூர் துறைமுகம் வரை சென்னை வெளிவட்டச் சாலையை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு ரூ.10 கோடிக்கு ஒப்புதல்.

- ✶ சென்னை வெளிவட்ட சாலையில் சாலை கட்டமைப்புகளை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.5.22 கோடிக்கு ஒப்புதல்.

- ✶ செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் ரூ.233.93 கோடி மதிப்பில் பொள்ளாச்சி கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 191.40 கி.மீ நீள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் 185.988 கி.மீ நீள மாவட்ட முக்கியச் சாலைகளில் முதற்கட்ட மேம்பாட்டுப் பணிகள் மற்றும் ஐந்து வருடப் பராமரிப்புப் பணிகளுக்கு ஒப்புதல்.

- ✶ 2011–2012 ஆம் ஆண்டில், 11 மாவட்டங்களில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் சாலைகளை மேம்பாடு செய்ய ரூ.10 கோடிக்கும் மற்றும் 2012–2013 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் சுற்றுலாச் சாலைகளில் மேம்பாடு செய்ய ரூ.9.92 கோடிக்கும் ஒப்புதல்.

- ✶ சென்னை தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலையின் இரண்டாம் கட்ட பணியான சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரையிலான பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும். இப்பணிக்கான நில எடுப்பிற்காக ரூ.294.68 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல்.

- ✶ சென்னைப் பெருநகருக்கு சிறப்பான சாலை இணைப்பை வழங்குவதற்காக நடப்பாண்டில் ரூ.45 கோடி மதிப்பில் 2 சாலைப்பணிகளுக்கும், ரூ.30 கோடி மதிப்பில் 8 ஆற்று பாலங்களுக்கும், ரூ.20 கோடி மதிப்பில் 1 ஆகாய நடைபாதைக்கும், ரூ.19 கோடி மதிப்பில் 5 சுரங்க நடைபாதைகளுக்கும் மற்றும் ரூ.271.68 கோடி மதிப்பில் 4 சாலை மேம்பாலப் பணிகளுக்காக அரசு ஒப்புதல்.

- ✶ ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1,900 கோடிக்கு 5,342 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தவும் 244 பாலங்கள் / சிறு பாலங்கள் கட்டவும் மற்றும் 4,943 கி.மீ. நீளச்சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளவும்,

188 பாலங்கள் / சிறு பாலங்கள் / பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளவும் ரூ.2,262.50 கோடி மதிப்பில் அரசு ஒப்புதல்.

- ✶ நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ், ரூ.211.60 கோடி மதிப்பில் மொத்த நீளம் 433.72 கி.மீ. கொண்ட 130 சாலைகளை மேம்படுத்த அரசு ஒப்புதல்.
- ✶ ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.212 கோடி செலவில் 503 பாலம்/சிறுபாலம் கட்டுமானப் பணிகள்.
- ✶ விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டேரிபட்டில் பல அடுக்குப் பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.20 இலட்சத்திற்கு ஒப்புதல்.
- ✶ கோவை மாவட்டத்தில் டெக்ஸ்டூல் அருகே கூடுதலாக இருவழிச் சாலை மேம்பாலம் கட்ட ரூ.20 கோடி மதிப்பில் ஒப்புதல்.
- ✶ ரூ.6.91 கோடி மதிப்பில் கூவம் ஆற்றின் குறுக்கே பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் கி.மீ. 6/6 இல் பாலம்.
- ✶ ரூ.15.64 கோடியில் சென்னை அடையாற்றின் குறுக்கே திரு.வி.க. பாலத்திற்கு அருகில் மூன்று வழித்தடப்பாலம்.
- ✶ பகுதி – II திட்டத்தின் கீழ் ரூ.16.83 கோடி மதிப்பில் மாத்தூர் – திட்டக்குடி, குண்டு – உப்பலவாடி, திருச்சி – துறையூர் பாலம், பெருவிளை பாலம், ஆசாத்நகர், நசுவன்கரை, விளாத்திக்குளம் – பெருநாழி ஆகிய 7 பாலப்பணிகள்.
- ✶ திருச்சி நகரத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் மற்றும் சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் போக்குவரத்திற்கு உதவும் வகையில் மாநில நெடுஞ்சாலையான சென்னை – திருச்சி – திண்டுக்கல் சாலையில் (SU–9) கி.மீ. 312/2 – 313/0 இல் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 4 வழி பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.25 இலட்சத்திற்கு ஒப்புதல்.
- ✶ கிழக்குக் கடற்கரை சாலையில் பாலாற்றின் குறுக்கே (கி.மீ.75/300) தற்போதுள்ள பாலத்தைப் புதுப்பித்துக்கட்டவும் கூடுதலாக இருவழிப்பாலம் கட்டவும் ரூ.134 கோடிக்கு அரசு ஒப்புதல்.
- ✶ கரூர் நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் அமராவதி ஆற்றின் குறுக்கே பசுபதிபாளையம் அருகே ரூ.12.50 கோடிக்கு உயர்மட்டப் பாலம் அமைக்க ஒப்புதல்.
- ✶ நபார்டு வங்கி நிதியுதவியுடன் 144 பாலங்கள் ரூ.287.09 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 65 பாலங்கள் ரூ. 151 கோடி மதிப்பில் அமைக்கவும் மற்றும் 121 பாலங்கள் ரூ.235 கோடி செலவில் அமைக்க அரசு ஒப்புதல்.

- ரூ.24 கோடி செலவில் சுனாமி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் பகுதி II திட்டத்தின் கீழ் 2 பாலப் பணிகள்.

- ரூ. 440 கோடி மதிப்பில் 21 இரயில்வே சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள்.

- இரயில்வே பணிகள் திட்டத்தின் கீழ், 23 சாலை மேம்பாலம் / கீழ்பாலங்கள் அமைக்க ரூ.740.01 கோடிக்கும் மற்றும் 12 சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் அமைக்க ரூ.100.90 கோடி மதிப்பில் முதல் கட்ட பணிகளுக்காக (நில எடுப்பு, பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைத்தல் மற்றும் தள ஆய்வு) அரசு நிருவாக ஒப்புதல்.

- ரூ.3 கோடி மதிப்பில் இரண்டு நவீன தகவல் சேகரிப்பு உபகரணங்கள் (Advanced Data Collection Equipment).

- சாலைகளைப் பராமரிக்க உயரிய தொழில் நுட்பத்துடன் கூடிய புவியியல் தகவல் அமைப்பு, ஒருங்கிணைந்த திட்டம், மனிதவளம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு மற்றும் சாலை மேலாண்மை அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய e-பாதை மென்பொருட்களை நெடுஞ்சாலைத்துறையின் பயன்பாட்டிற்குத் துவங்கப்பட்டது.

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – IIக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்புக் கழகத்தின் மூலம் ரூ.65 கோடி நிதி.

- துறையின் அனைத்துத் தலைமைப் பொறியாளர்களுக்கும் புதிய ஒருங்கிணைந்த கட்டடம் ரூ.13.21 கோடி மதிப்பில் தர உறுதி மற்றும் ஆராய்ச்சிக் கட்டட வளாகத்தில் கட்ட ஒப்புதல்.

- பகுதி – II திட்டத்தின் கீழ், 42 கட்டடங்கள் ரூ. 12.01 கோடி மதிப்பில் 3 வட்ட அலுவலக கட்டடங்கள், 8 கோட்ட அலுவலகக் கட்டடங்கள், 2 மண்டல ஆய்வக கட்டடங்கள், 12 உட்கோட்ட அலுவலகக் கட்டடங்கள், பரங்கிப்பேட்டையில் 1 பிரிவு அலுவலகமும், 15 பயணியர் மாளிகைகள் மற்றும் மலைப்பாளையம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புராதனக் கட்டடங்களுக்குப் (பயணியர் மாளிகை) பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ரூ.8.46 கோடி மதிப்பில் 35 அலுவலக / பயணியர் மாளிகைக் கட்டடங்கள் கட்டவும் மற்றும் ரூ.8.63 கோடி மதிப்பில் 31 அலுவலக / பயணியர் மாளிகைக் கட்டடப் பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்புதல்.

**தமிழ்நாடு கடல்சார் வாரியம்**

- திருவாளர்கள் எல் அண்டு டி ஷிப் பில்டிங் லிட் நிறுவனத்தினருக்கு, காட்டுப்பள்ளியில் கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுக வளாகம் கட்டுவதற்கு அனுமதி.

- தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால், இத்துறைமுகத்தில் பிரத்யேக சரக்குகள் மற்றும் வணிக ரீதியிலான சரக்குகளைக் கையாள அனுமதி.

* பொது மற்றும் தனியார் கூட்டாண்மையில் போட்டி ஏல முறையில் தெரிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன், தூத்துக்குடியில் கடல்சார் கல்லூரி ஒன்று துவங்க அரசு கொள்கை அளவில் ஒப்புதல்.
* நாகப்பட்டினத்தில் அனைத்துப் பருவநிலைகளிலும் இயங்கக்கூடிய, கப்பலணையும் வசதிகள் உள்ள ஆழ்கடல் பசுமை வள துறைமுகம் ஒன்று அமைக்க, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேம்படுத்த, தனியார் முதலீட்டாளர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கு ஒப்புதல்.

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், சென்னை**

* பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 126.60 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வந்துள்ளது. 130.25 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வரப்படும் என்று எதிர்பார்ப்பு.
* 20.26 இலட்சம் பயணிகள் பயணம் செய்ததின் பயனாக, கன்னியாகுமரி படகுத்துறை, சுமார் ரூ.3.94 கோடி கட்டண வருவாய் ஈட்டியுள்ளது. 01.04.2012 முதல் 31.03.2013 வரை 20.47 இலட்சம் பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் எனவும், 10.07.2012 முதல் கட்டணம் மாற்றியமைத்ததால், ரூ.6.81 கோடி கட்டண வருவாய் ஈட்டலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.
* எம்.எல் பகீரதி என்ற சுமார் 36 ஆண்டுகள் பழமையான படகுக்குப் பதிலாக ரூ.1.08 கோடி மதிப்பில் எம்.எல். விவேகானந்தா என்ற ஒரு புதிய படகு வாங்கப்பட்டுள்ளது.

**2013 – 2014 ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

* வரவு செலவு திட்டத்தில் ரூ.6,452.77 கோடி நிதி ஒதுக்கீடு.
* ரூ.2,032 கோடி செலவில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்.
* சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை கிழக்கு கடற்கரை சாலையை 4 வழிச் சாலையாக தரம் உயர்த்த திட்டம்.
* ரூ.271.68 கோடி செலவில் சென்னை மாநகரில் 4 பெரு மேம்பாலங்கள்.
* ரூ.130 கோடி செலவில் மதுரை நகரத்தில் 2 மேம்பாலங்கள்.
* “தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்” என்ற புதிய அமைப்பு உருவாக்கம்.

## 110 அறிவிப்பு

- ✶ 45 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைத்திட திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.5 கோடி.
- ✶ ரூ.168 கோடி செலவில் திருநின்றவூர் முதல் பாடி வரையிலான 22 கி.மீ. நீளமுள்ள சாலையை ஆறுவழிச்சாலையாக அகலப்படுத்துதல் – முதற்கட்டமாக நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.98 கோடி.
- ✶ 39.40 கி.மீ. நீள தண்டலம் – பேரம்பாக்கம் – தக்கோலம் சாலை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தப்படும் .
- ✶ ரூ.98 கோடி செலவில் தஞ்சாவூர் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மனக்கரம்பை வரை 14.27 கி.மீ. நீளத்திற்கு தஞ்சாவூர் புறவழிச்சாலை.
- ✶ ரூ.300 கோடி செலவில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் 131 ஆற்றுப் பாலங்கள்.
- ✶ ரூ.100 கோடி செலவில் 215 கி.மீ. நீளமுடைய 67 அரசு சாலைகள் மேம்படுத்தப்படும்.
- ✶ ரூ.948.30 கோடி மதிப்பில் 11 மாவட்டங்களில் 18 ரயில்வே மேம்பாலங்கள்– ஆரம்பகட்ட பணிகளுக்காக – ரூ.201.88 கோடி.
- ✶ ரூ.200 கோடி செலவில் சிறுசேரியில் 20 அடுக்கில் 2,000 வாகனங்கள் மற்றும் 50 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிறுத்த பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம்.
- ✶ ரூ.8.68 கோடி செலவில் போச்சம்பள்ளி – கொடமண்டப்பட்டி சாலை வசதி. இச்சாலையிலிருந்து சிப்காட் தொழில் வளாகத்தை இணைக்க –ரூ.3.22 கோடி.

✶ ✶ ✶

### சாலை உள்கட்டமைப்பின் முக்கியப் பங்கு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தொழில், சாலைப் போக்குவரத்து போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்குச் சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

# உயர் அளவில்
# உணவு மானியம்!

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்
திரு. **ஆர்.காமராஜ்** அவர்கள்






✶ ரூ.300 கோடியில், பொங்கல் பரிசாக 1 கோடியே 84 இலட்சம் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும், 19,733 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்காக ரூ.100 ரொக்கம் அடங்கிய ரூ.160 மதிப்பிலான பொங்கல் பரிசு தொகுப்பு.

- ✶ 1.66 கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி மாதம் 20 கிலோவும், அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் பயனீட்டாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 35 கிலோ அரிசி விலையின்றியும் வழங்கப்படுகிறது. பயன்பெறும் குடும்பங்கள் 18.97 இலட்சம்.
- ✶ 1,95,29,693 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ரூ.291.09 மானியம் வீதம் ரூ.4,900 கோடி மானியம்.
- ✶ தொழு நோயால் பாதிக்கப்பட்ட 232 குடும்ப அட்டைதாரர்களுக்கு சிட்கோ நகரில் ஒரு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை.
- ✶ போக்குவரத்து வசதியில்லா மற்றும் தொலை தூர பகுதிகளில் 300 முழு நேர நியாய விலைக்கடைகள் மற்றும் 591 பகுதி நேர புதிய நியாய விலைக் கடைகள்.
- ✶ திருநங்கையர்களுக்கு 1,516 குடும்ப அட்டைகள்.
- ✶ குறித்த காலத்திற்குள் அணை திறக்கப்பட்டதாலும், மாநில அரசின் ஊக்கத் தொகையாலும் அதிகபட்சமாக 23.82 இலட்சம் மெட்ரிக் டன்கள் நெல் கொள்முதல் செய்கிறது.
- ✶ 300 மூட்டைகள் மற்றும் அதற்கு அதிகமாக நெல் இருப்பு வைத்திருக்கும் விவசாயிகளின் விளை நிலங்களுக்குச் சென்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல்.

**விலைக் கட்டுப்பாடு**

- ✶ வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் போது அதனைக் கட்டுப்படுத்த அமைக்கப்பட்ட விலை நிலைப்படுத்தும் நிதியத்தின் நிதி ரூ.50 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்வு.
- ✶ ரூ.3 கோடியில் 1,000 மெட்ரிக் டன்கள் அரிசி மேற்கு வங்காளத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மினி–கிட் ரக அரிசி ரூ.31க்கும், சுவர்ண ரக அரிசி ரூ.25/–க்கும் விற்பனை.
- ✶ ரூ.2 கோடி ஒதுக்கீட்டில் புளி, குண்டு மிளகாய், நீட்டு மிளகாய் கொள்முதல் செய்து, ஒரு கிலோ புளி ரூ.58/–, ஒரு கிலோ குண்டு மிளகாய் ரூ.120/–, ஒரு கிலோ நீட்டு மிளகாய் ரூ.80/–க்கும் 25 கோடி ரூபாயைப் பயன்படுத்தி 10,000 மெட்ரிக் டன் சன்ன ரக அரிசி கொள்முதல் செய்து கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் நுகர்வோர் பயன் பெறும் வகையில் விற்பனை.
- ✶ அரிசி விலையைக் கட்டுப்படுத்த, அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றிற்கு ரூ.20/– என்ற விலையில் வெளிச்சந்தையில் விற்பனை.

**சேமிப்புக் கிடங்கு வசதி**

- ✶ 1.79 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்ட ரூ.80.14 கோடி ஒதுக்கீடு.
- ✶ தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு வசதியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தவிர தனியார் நிறுவனங்களும் பயன்படுத்தி வருகின்றன. அதிகபட்சமாக 93 சதவிகித சேமிப்புப் பயன்பாடும் மற்றும் வருவாய் ரூ.39.21 கோடி விற்பனை அளவையும் எட்டியுள்ளது.
- ✶ காவிரிப் பாசனப் பகுதியில் 60 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.14.50 கோடியில் அமைக்கப்பட உள்ளது.

**நுகர்வோர் நலன்**

- ✶ அத்தியாவசியப் பொருட்களைக் கடத்தல் செய்யும் சமூக விரோதிகள் குறித்துத் தகவல் அளிப்பவர்களுக்கு சன்மானம் ரூ.500/– லிருந்து ரூ.1,000/– ஆகவும், போலி குடும்ப அட்டை குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு சன்மானம் ரூ.200/– லிருந்து ரூ.250 ஆகவும் உயர்வு.
- ✶ தமிழ்நாட்டில் மே 2012இல் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பெங்களூர் மற்றும் கொச்சியிலிருந்து எரிபொருள் தருவிக்கப்பட்டு சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பெட்ரோல் பங்குகள் மூலம் நுகர்வோர்களுக்கு எவ்விதத் தட்டுப்பாடுமின்றி விநியோகிக்கப்பட்டன.
- ✶ மத்திய அரசின் உணவு பாதுகாப்பு சட்டத்தின் மீதான முடிவுகள் எத்தகையதாக இருப்பினும் தமிழக மக்கள் பயன்பெற அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவு.
- ✶ சமையல் எரிவாயு மீதான மதிப்பு கூட்டு வரி முழுவதும் நீக்கம்.
- ✶ வெளிச்சந்தையில் ரூ.57க்கு விற்கப்படும் 1 லிட்டர் பாமாயில் ரூ.25க்கும்; ரூ.76க்கு விற்கப்படும் 1 கிலோ துவரம் பருப்பு ரூ.30க்கும்; ரூ.60க்கு விற்கப்படும் 1 கிலோ உளுத்தம் பருப்பு ரூ.30க்கும் சிறப்பு பொது விநியோகம் திட்டத்தின் கீழ் விநியோகம்.
- ✶ 13 தென் மாவட்டங்களில் உள்ள நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில் மதுரையில் சுற்றுக்கிளை திறக்கப்பட்டன.

**2013 – 2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

- ✶ ரூ.32.6 கோடி செலவில் 7 அரிசி ஆலைகள் நவீனமயமாக்கம்.
- ✶ ரூ.9.33 கோடி செலவில் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையில் 12 புதிய அலகுகள்.

❖ ❖ ❖



# புதிய திட்டங்களால் வளம் கொழிக்கும் பால்வளம்

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்
திரு. **வி.மூர்த்தி** அவர்கள்






- ✶ 20.67 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 24.36 இலட்சம் லிட்டராக உயர்வு.
- ✶ அதிகபட்சமாக 27.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் நிறுவனம் சாதனை.
- ✶ பால் பணம் பட்டுவாடா நிலுவையினை உடன் வழங்க ரூ.115.85 கோடி வழிவகை முன்பணம்.

* பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.18/–இல் இருந்து ரூ.20/– ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.26/–இல் இருந்து ரூ.28/– ஆகவும் உயர்வு.

* இலாபத்தில் செயல்படும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் 17,043 உறுப்பினர்களுக்கு போனஸ், பங்கு ஈவுத்தொகை மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.21.06 கோடி.

* கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தாங்கள் ஈட்டிய இலாபத்திலிருந்து கூடுதல் விலையாக ரூ.55.06 கோடி வழங்கியதால் 3,23,979 பால் உற்பத்தியாளர்கள் பயன்.

* விலையில்லாக் கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் பயனாளிகளைக் கொண்டு 480 கிராமங்களில் புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள்.

* ஸ்மார்ட் கார்டு திட்டம் அறிமுகம். Smart Card –ஐக் கொண்டு, ஆவின் நுகர்வோர் வீட்டிலிருந்தபடியே www.aavinmilk.com என்ற இணையதளம் மூலம் மாதாந்திர பால் அட்டைகள்.

* ஆவின் சாக்லேட், மேங்கோ மில்க்ஷேக், பால்பேடா, ஸ்ரீகந்த், மில்க் பிரெட், மில்க் கேக் மற்றும் ஏழு சுவைகளில் மில்க் ஷேக் அறிமுகம்.

* 400 புதிய ஆவின் பாலகங்கள் தொடக்கம். மூன்று ஆவின் நடமாடும் பாலகங்கள் தொடக்கம்.

* ஆவின் விற்பனை நிலையங்களில் புதிய ‘ஊட்டி டீ’ விற்பனை.

* பால் விற்பனை இதுவரை நாளொன்றுக்கு 19.58 லிட்டரிலிருந்து 21.15 லிட்டராக அதிகரிப்பு.

* சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 10.30 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதிகபட்சமாக 11.25 இலட்சம் லிட்டர் என்ற அளவை எட்டி சாதனை.

* இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மொத்த ஆண்டு விற்பனை வருவாய் ரூ.2,369 கோடியிலிருந்து ரூ.3,584 கோடியாக உயர்வு.

* இணையம் மற்றும் ஒன்றியத்தில் பணிபுரியும் 222 பணியாளர்களுக்குப் பதவி உயர்வு .

* மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு சிறப்புத் துணை விதிகள்.

* ரூ.7 கோடியாக இருந்த உள்கட்டமைப்பிற்கான முதலீடு ரூ.8.73 கோடியாக உயர்வு.

* ரூ.60 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால் பண்ணை ஒன்றும் 20 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை.

❖ ❖ ❖



# சீர்மிகும் திட்டங்களால் சிறப்பாகும் சுற்றுச்சூழல்

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
திரு. **எம்.சி.சம்பத்** அவர்கள்





- ரூ.46.73 இலட்சம் செலவில் 1,869 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுற்றுச்சூழல் மன்றங்களின் (Eco clubs) பல்வேறு விழிப்புணர்வுப் பணிகள். ரூ.80 இலட்சம் ஒதுக்கீட்டில் 3,200 பள்ளிகளில் புதியதாக சுற்றுச்சூழல் மன்றங்கள்.

- பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ரூ.150 கோடி.

- ரூ.84.90 கோடி ஒதுக்கீட்டில் 540.89 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் மறு சீரமைப்பு.

- ரூ.20 இலட்சம் செலவில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்த விழிப்புணர்வுப் பணிகள்.

- ரூ.19 இலட்சம் செலவில் பிளாஸ்டிக் உபயோகத்தினால் சுற்றுச்சூழலுக்கு நேரிடும் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள்.

- பிளாஸ்டிக் குவியல்களைச் சேகரிக்கவும், தூளாக்கும் இயந்திரங்களுடன் சேகரிப்பு மையங்கள் அமைக்கவும் நகராட்சிகளுக்கு ரூ.80 இலட்சம், பேரூராட்சிகளுக்கு ரூ.1.20 கோடி, ஊராட்சிகளுக்கு ரூ.80 இலட்சம் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு ரூ.1.20 கோடி நிதி.

- நகராட்சிகளுக்கு ரூ.13.89 கோடி, பேரூராட்சிகளுக்கு ரூ.18 கோடி, ஊராட்சிகளுக்கு ரூ.9 கோடி மற்றும் சென்னை மாநகராட்சிக்கு ரூ.9.11 கோடி ஒதுக்கீட்டில் 446.50 கிமீ தரமான பிளாஸ்டிக் சாலைகள்.

- மக்கிப் போகாத பிளாஸ்டிக் பொருள்களை மக்கள் பயன்படுத்துவதைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த சுற்றுச்சூழல் துறைக்கு ரூ.50 இலட்சமும், உள்ளாட்சிகளுக்கு ரூ.1.00 கோடியும் அனுமதி.

- ரூ.4.77 கோடி செலவில் ஊட்டி ஏரி தூய்மைப்படுத்தப்பட்டது.

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்**

- இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பம் பதிவு செய்யும் முறை 10.06.2011 அன்று துவக்கப்பட்டு இதுவரை 800 தொழிற்சாலைகள் பயன்.

- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 18 பொது கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை (Zero Liquid Discharge) அடைவதற்காக, ரூ.200 கோடி வட்டியில்லாக் கடனாக வழங்க அறிவிக்கப்பட்டு 18 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.179.34 கோடி வழங்க ஆணை.

- ரூ.32 இலட்சம் ஒதுக்கீட்டில் ஒரு முறை பயன்பாட்டிற்கு பிறகு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாதிருப்பது குறித்த விழிப்புணர்வு பயிற்சி.

- கழிவு நீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் பொழுது ஏற்படும் உயிரிழப்பினை தவிர்ப்பது குறித்து தொழிற்சாலைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில், இதுவரை 3,000 பேருக்குப் பயிற்சி.

- ரூ.58 இலட்சம் செலவில் மறைமலைநகரில் புதிய மாவட்ட ஆய்வகம்.

- வாரியத்தின் அனைத்து மாவட்ட பொறியாளர்களுக்கும் ரூ. 3.96 இலட்சம் செலவில் கையடக்க கணினி (Tablet Computer).

- தமிழகத்தில் முதன்முறையாக சுற்றுச்சூழல் மேம்பாட்டில் சிறந்து விளங்கிய 12 தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள்.

- மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு ரூ. 128 இலட்சம் செலவில் 86 மிதக்கும் நுண்துகள்கள் 10 (PM 10) கருவிகள் மற்றும் ரூ. 11.33 இலட்சம் செலவில் 5 மிதக்கும் நுண்துகள்கள் 2.5 (PM 2.5) கருவிகள் வழங்கப்பட்டது.

❖ ❖ ❖

**இயற்கைச் சூழல் பேணுவோம்**

"உணவுச் சங்கிலி" (Food Chain) என்ற அற்புத நிகழ்வின் மூலம் தாவரங்களும், விலங்குகளும் ஒன்றையொன்று சார்ந்து மனித வாழ்விற்கு அடித்தளமாக அமைகின்றன. எனவே, இயற்கைச் சூழலை நாளைய தலைமுறையினருக்காகப் பேணிக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் இன்றைய தலைமுறையினருக்கு உள்ளது.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



# புதுமைகள் படைக்கும் பொதுப்பணித்துறைப் பணிகள்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
திரு. **கே.வி. ராமலிங்கம்** அவர்கள்






- ✶ தேனி மாவட்டம், லோயர் கேம்பில் திரு. கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு ரூ.1.25 கோடி செலவில் மணிமண்டபம்.
- ✶ சென்னை, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ரூ.7.70 கோடி செலவில் மேம்படுத்தி அழகுபடுத்துதல் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவிடம் ரூ.1.20 கோடி செலவில் மேம்படுத்தும் பணி.
- ✶ சென்னை, கிண்டி, சர்தார் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டப வளாகம் ரூ.11.61 கோடி செலவில் புதுப்பிப்பு.

* திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் தேசியச் சட்டப்பள்ளி வளாகம் ரூ.100 கோடி செலவில் கட்டும் பணி.
* சென்னை, தலைமைச் செயலகம் நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டட முகப்புத் தோற்றத்தினை ரூ.28 கோடி செலவில் மேம்படுத்தும் பணி.
* ரூ. 25 கோடி செலவில் தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியரகக் கட்டடங்கள் கட்டும் பணி.
* ரூ. 25 கோடி ஒதுக்கீட்டில் கடலூரில் மாவட்ட ஆட்சியரகக் கட்டடங்கள் கட்டும் பணி.
* ரூ.15 கோடி ஒதுக்கீட்டில் 10 இடங்களில் வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி.
* ரூ.15 கோடி ஒதுக்கீட்டில் 15 இடங்களில் உள்ள அரசுத் தொழிற்கல்வி மையக் கட்டடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கும் பணி.
* ரூ.97.48 கோடி ஒதுக்கீட்டில் கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள், கால்நடை நோய் நுண்ணறிவு மையம் மற்றும் இதர மையக் கட்டடங்கள் கட்டும் பணி.
* சென்னை அரசுப் பல் மருத்துவக் கல்லூரியில் ரூ.2.40 கோடி ஒதுக்கீட்டில் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான விடுதியின் கூடுதல் தளம் கட்டும் பணி.
* சென்னை, கீழ்ப்பாக்கம் வளாகத்தில் உள்ள மருத்துவக் கல்வி இயக்குநரகம் மற்றும் தேர்வுக்குழு கட்டடத்தின் இரண்டாம் தளம் ரூ.2 கோடி செலவில் கட்டும் பணி.
* சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனை வளாகத்தில், சிறுநீரகவியல் துறையில் விபத்து மற்றும் உடலியக்க மருத்துவக் கட்டடத்தின் கூடுதல் தளங்கள் ரூ.4.35 கோடி செலவில் கட்டும் பணி.
* ரூ.5.06 கோடி ஒதுக்கீட்டில் 23 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டும் பணி.
* ரூ.3.36 கோடி ஒதுக்கீட்டில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நூலகக் கட்டடம் கட்டும் பணி.
* ரூ.2 கோடி ஒதுக்கீட்டில், சென்னைப் பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான பள்ளியில் விடுதியுடன் கூடிய நவீனச் சமையலறைக் கட்டடம் கட்டும் பணி.
* ரூ.2.10 கோடி ஒதுக்கீட்டில், 5 சமூக நல மையங்களில் பாதுகாப்புச்சுவர் கட்டும் பணி நிறைவேற்றம்.

- ரூ.2.60 கோடி ஒதுக்கீட்டில், 26 குழந்தைகள் மற்றும் மகளிர் பாதுகாப்பு மையக் கட்டடப் பணிகள் முடிப்பு.

- ரூ.3 கோடி ஒதுக்கீட்டில் 15 இடங்களில் உயிர் உரம் தயாரிக்கும் பிரிவுகளுக்கு சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி.

- ரூ.1.30 கோடி ஒதுக்கீட்டில் குடுமியான் மலையில் மையக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் நுண்உணவுக் கலவை தயாரிப்பு மற்றும் வழங்கும் கிடங்கு அறை கட்டும் பணி.

- ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவைக் கொண்டாடும் வகையில் எழில் மிகு அலங்கார வளைவு அமைத்தல்.

- ரூ.52.14 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுதல்

- ரூ.42.33 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுதல்

**நீர்வள ஆதாரத்துறை**

- காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைகள் மத்திய அரசின் அரசிதழில் 19.02.2013 அன்று வெளியிடப்பட்டதன் மூலம் காவேரி டெல்டா மாவட்ட வேளாண் பெருமக்களின் நீண்டநாள் கனவு நனவானது.

- உலகவங்கிக் கடனுதவியுடன் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் 1383 ஏரிகள், 265 அணைக்கட்டுகள் மற்றும் 2864.93 கி.மீ. நீள வரத்து வாய்க்கால்களில் ரூ.508.38 கோடி மதிப்பில் புனரமைப்புப் பணிகள்.

- செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெருந்திட்டத்தின் கீழ் ரூ.138.66 கோடி மதிப்பில் தடுப்பணைகள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள்.

- திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சமமட்டக் கால்வாயில் தொலைகல் எல்.எஸ். 0/000 கி.மீ. முதல் 49/300 கி.மீ. வரையுள்ள பகுதிகளை ரூ.184.50 கோடி மதிப்பில் புனரமைக்கும் பணி.

- ரூ.330 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை கிராமங்களின் அருகே ஒரு புதிய நீர்தேக்கம்.

- ரூ.130 கோடி மதிப்பீட்டில் சோழவரம், போரூர், அயனம்பாக்கம், நேமம், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளை புதுப்பித்தல்.

- ✶ கரூர் மாவட்டத்தில், மாயனூர் கிராமத்தில் ரூ.234 கோடி மதிப்பில் காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் பணி.

- ✶ உலக வங்கியின் கடனுதவியுடன், ரூ.745.49 கோடி மதிப்பில் அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்.

- ✶ ரூ.200 கோடி மதிப்பீட்டில் கடலரிப்பைத் தடுக்கும் வகையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் அமைத்தல்.

- ✶ ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் வாய்க்காலின் மைல் 3–3–000 முதல் 9–7–000 வரை ரூ.50 கோடி மதிப்பில் புனரமைக்கும் பணி.

- ✶ ரூ.1,560 கோடி மதிப்பீட்டில் காவேரி டெல்டா வளர்ச்சித் திட்டம்.

- ✶ ஜவஹர்லால் நேரு நகர்புற புனரமைப்புக் குழுமத் திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் வெள்ள பாதுகாப்பினை உறுதி செய்திட ரூ.633.03 கோடி மதிப்பிலான பணிகள்.

- ✶ ரூ.1,509 கோடி மதிப்பீட்டில் 2,864.93 கீ.மீ. நீளத்திற்கு கால்வாய்களையும்; 268 அணைகளையும் மற்றும் 1,383 ஏரிகளையும் புனரமைத்தல்.

- ✶ ரூ. 635.54 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தடுப்புப் பணிகள்

**நபார்டு திட்டங்கள்**

- ✶ தஞ்சாவூர் மாவட்டம், கல்லணைக் கால்வாய் தொலைக்கல் 0.75 கி.மீ. முதல் 58.67கி.மீ. வரையும், கள்ளப்பெரம்பூர் ஏரியையும் ரூ.130.34 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு, 6,075 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.

- ✶ தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பகுதியில் கல்லணைக் கால்வாய் 58.67 கி.மீ. முதல் 92.20 கி.மீ. வரை ரூ.28.58 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு 68,977.50 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.

- ✶ ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் ரூ.17.45 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டு 24,792.5 ஏக்கர் ஆயக்கட்டுப் பயன்.

- ✶ கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை வாய்க்கால் மற்றும் ஏரிகளில் ரூ.22.50 கோடி மதிப்பில் புனரமைப்புப் பணிகள்.

✶ மதுரை மாவட்டம், நிலையூர் வாய்க்காலினை புனரமைத்து, அதன் நீர் கடத்தும் திறனை அதிகரித்து, நிலையூர் நீட்டிப்பு வாய்க்காலுக்கு நீர் வழங்க ரூ.23.50 கோடி மதிப்பிலான பணிகள்.

✶ திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை மற்றும் முத்தரசநல்லூர் கிராமங்களுக்கு அருகே காவேரி ஆற்றின் குறுக்கே ரூ.32 கோடி மதிப்பில் தடுப்பணை அமைக்கும் பணி.

✶ திருவள்ளூர் மாவட்டம், கடலோரப் பகுதியில் அமையப் பெற்ற கடலரிப்புத் தடுப்புச் சுவரை உயர்த்திப் புனரமைத்து கடல் அலைகளால் ஏற்படும் அரிப்பு மற்றும் ஊடுருவலை ரூ.26.58 கோடி மதிப்பில் தடுக்கும் பணி.

**2013–2014 ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| ✶ பாசனத்திற்கான நிதி ஒதுக்கீடு | – | ரூ.3,313 கோடி |
| கட்டடங்கள் – நிதி ஒதுக்கீடு | – | ரூ.1,092 கோடி |

✶ காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள்.

✶ ரூ. 50 கோடி மதிப்பீட்டில் மரபு சார்ந்த 176 நீர்நிலைகளை புனரமைத்தல்.

✶ பெண்ணையாறு – பாலாறு இணைப்பு.

✶ ரூ. 745.49 கோடி திட்ட மதிப்பீட்டில் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அணைகளைப் புனரமைத்தல்.

✶ ✶ ✶

**நீர்வளம் பெருக்குவோம்**

மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுத்து முறையாகச் சேமித்து, பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும், குடிநீர் ஆதாரமும் பெருகும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்





# கால்நடை மேம்பாட்டில் கணக்கற்ற சாதனைகள்

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்
திரு. **டி.கே.எம்.சின்னையா** அவர்கள்





- ✶ ரூ.85 கோடி செலவில் 24,000 பயனாளிகளுக்குக் விலையில்லா கறவைப் பசுக்கள். நாளொன்றுக்கு 80,000 லிட்டர் பால் ஆவின் மூலம் கொள்முதல்.
- ✶ ரூ.320 கோடி செலவில் 2.50 இலட்சம் பயனாளிகளுக்கு 10 இலட்சம் விலையில்லா ஆடுகள்.
- ✶ இலவசமாக வழங்கப்பட்டுள்ள வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் இதுவரை 2,41,467 குட்டிகளையும், கறவைப் பசுக்கள் சுமார் 2,185 கன்றுகளையும் ஈன்றுள்ளன. 8,806 பசுக்கள் தற்போது சினை நிலையில் உள்ளன.

- நபார்டு RIDFXVII திட்டத்தின் கீழ், துறையின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.122.24 கோடி நிதி ஒதுக்கீடு. இதில் 360 கால்நடை நிலையங்களுக்கு ரூ.97.48 கோடி செலவில் நிரந்தரக் கட்டடம் கட்டவும், 12 கால்நடைப் பண்ணைகளின் மேம்பாட்டிற்காக ரூ.24.69 கோடியும் ஒதுக்கீடு.

- மாநில உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 792 கட்டடங்கள் புனரமைப்பு.

- மாநில தீவன அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், ரூ.35.23 கோடி செலவில் 24,000 ஏக்கரில் தீவனப்பயிர்கள் விவசாயிகளின் சொந்த நிலங்களில் இறவையிலும், 16,000 ஏக்கர் மானாவாரியிலும் சாகுபடி. இதன்மூலம் பசுந்தீவன உற்பத்தி 9.6 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிப்பு.

- தீவனம் வீணாவதை குறைக்கவும், அதன் பலன் அதிக அளவில் கிடைக்கும் வகையில் 5,043 புல் அறுக்கும் விசைக் கருவி விவசாயிகளுக்கு ரூ. 6.31 கோடி மதிப்பில் 75 சதவீதம் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- 1,954 ஏக்கர் நீர்த்தெளிப்பான் பாசனத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ. 4.10 கோடி மதிப்பில் 100 சதவீதம் மானியத்திலும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும் 1,954 நீர்த்தெளிப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 30 ஏக்கர் பரப்பளவில் ரூ. 184.8 கோடி மதிப்பில் ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு மற்றும் ஓசூர், கால்நடைப் பண்ணைகளில் தீவன விதை உற்பத்தி மையங்கள்.

- தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 10 மாவட்டங்களில் ரூ.2.40 கோடியில் 2,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தீவனப் புல் சாகுபடி.

- 6,636 கிராமங்களில் உழவர் பெருவிழா முகாம்கள் நடத்த ரூ.1.51 கோடி செலவு. 38,39,550 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்ததன் மூலம் 8,91,356 விவசாயிகள் பயன்.

- பெண்கள் சுயஉதவிக்குழுவாயிலாகப்பொருளாதாரத்தன்னிறைவுபெற்றுமுன்னேறும் திட்டத்திற்காக ரூ. 90.71 இலட்சத்தில் 495 மகளிருக்கு கன்றுடன் எருமைகள்.

- கோழி வளர்ப்புத்திட்டத்தின் கீழ் நாட்டுக்கோழி மற்றும் கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க ரூ. 22.35 கோடி நிதி ஒதுக்கீடு. அதனில் நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க 523 பயனாளிகளுக்கும், கறிக்கோழிப் பண்ணை அமைக்க 1,118 பயனாளிகளுக்கும் கடன் உதவி.

- கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாம்களால் 14.86 இலட்சம் விவசாயிகளின் 131.82 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

- ✶ தற்பொழுது நிலவி வரும் வறட்சியின் பிடியிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கவும் அதனால்கால்நடைகள்விற்பனையில்ஏற்படும்நட்டத்தினைத்தவிர்க்கவும்,முக்கியமாக அதிகம் பாதிப்புக்குள்ளான டெல்டா மாவட்டங்களில் உலர் தீவன உற்பத்திக்கென ரூ.15 கோடியும், பசுந்தீவன உற்பத்திக்கென ரூ.5 கோடியும் ஒதுக்கீடு.

- ✶ கால்நடைகளைக் கொள்ளை நோய்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க 186.17 இலட்சம் கோமாரி, 52.72 இலட்சம் அடைப்பான், 4.93 இலட்சம் சப்பை நோய், 9.8 இலட்சம் தொண்டை அடைப்பான், 4.63 இலட்சம் ஆட்டம்மை நோய் மற்றும் 119.09 இலட்சம் ஆட்டுக்கொல்லி நோய் ஆகிய தடுப்பூசிப் பணிகள்.

- ✶ தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், ரூ.13.72 கோடி செலவில் 9.75 இலட்சம் கால்நடைகளுக்கு இலவச செயற்கைமுறைக் கருவூட்டல், 4,515 ஹெக்டேரில் தீவனப்பயிர்சாகுபடியும், 1,601அசோலாதீவனப்பயிர்வளர்ப்புமாதிரிப்பயிற்சிவகுப்புகள், 3,440 மலடு நீக்க சிகிச்சை முகாம்கள், 4.33 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் 4.07 இலட்சம் கிடேரிக் கன்றுகளுக்குக் குடற்புழுநீக்கம், 3,200 விவசாயிகளுக்குக் பட்டறிவுப் பயணங்கள், 33,470 கால்நடைகளுக்கு தாது உப்புக் கலவை (ம) 29,640 கால்நடைகளுக்குத் தாது உப்புக்கட்டி அளித்தல் ஆகிய பணிகள்.

- ✶ மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தில் 8 மாவட்டங்களில் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டில், 59 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களில் தீவன அபிவிருத்தியும், 50 சதவிகிதம் மானியத்தில் 2,379 பயனாளிகளுக்கு கிரிராஜா கோழிகளும், 290 பயனாளிகளுக்கு வெள்ளாடு/ செம்மறி ஆடு அலகுகளும், 364 பயனாளிகளுக்கு கலப்பினக் கிடேரிக் கன்றுகளும் மற்றும்100 சதவிகிதம் மானியத்தில் அடர் தீவனமும், மற்றும் மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ✶ கால்நடை பராமரிப்புத்துறையின் பணிகள் சீரிய முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய ரூ.594 இலட்சம் செலவில் 121 வாகனங்கள்.

- ✶ 385 கால்நடைக் கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்வு. 585 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் 585 கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்கள் பதவிகள் புதிதாகத் தோற்றுவிப்பு.

- ✶ கால்நடை நிலையங்களில் மருத்துவசேவையைச் சீரிய முறையில் வழங்கும் நோக்கில் 798 கால்நடை உதவி மருத்துவர்கள், 303 கால்நடை ஆய்வாளர்கள், 1,191 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நியமனம்.

- ✶ புதிதாக 20 கால்நடை மருந்தகங்கள், ரூ.25.85 இலட்சம் செலவில் 50 கால்நடைக் கிளை நிலையங்கள் தோற்றுவிப்பு.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

✶ தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் ரூ.16.34 கோடியிலும், திருநெல்வேலியில் ரூ.12.59 கோடியிலும், புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் உருவாக்கம்.

✶ பன்னாட்டுத் தரத்தில் ஒசூரில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம்.

✶ முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மாதம் கல்வி உதவித் தொகை ரூ. 500/–இல் இருந்து ரூ. 4,000/– ஆக உயர்வு.

✶ முனைவர் பட்டபடிப்பு மாணவர்களுக்கு முதன் முறையாக மாதம் ரூ.5,000/–.

✶ கால்நடை மருத்துவத்தில் எட்டு புதிய பாடதிட்டங்கள் மற்றும் எட்டு கணினி வழி முதுநிலைப் பட்டயப் படிப்புகள் துவக்கம்.

✶ 18 வகையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தொடக்கம்.

✶ 14 வகையான குறுகிய காலப் பல்வேறு பண்ணை சார் பயிற்சித் திட்டங்கள் தொடக்கம்.

✶ கால்நடை மருத்துவப் பாடங்கள் முதன் முதலாகத் தமிழில் மொழி பெயர்ப்பு.

✶ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் புத்தாக்கத் திட்டத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து சிறப்பு விருது.

✶ “சர்தார் படேல் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சிறந்த நிறுவன விருது– 2011” எனும் உயரிய விருது, 16.07.2012 அன்று இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டது.

✶ 16 புதிய தொழில் நுட்பங்கள் வெளியீடு.

✶ ரூ.12.55 இலட்சம் மதிப்பில் சேலம் கருப்பு இன வெள்ளாட்டுப்பிரிவினை பொட்டனேரியில் அமைத்தல்; ரூ.12.12 இலட்சம் மதிப்பில் மகளிர் சுய உதவி குழுக்களுக்குத் திறன் சார்ந்த பயிற்சி அளித்தல் ரூ. 9.35 இலட்சம் மதிப்பில் செம்மறி ஆடுகளின் குடற்புழு நீக்க மருந்தினைக் கண்காணித்தல் மற்றும் குடற்புழு கட்டுப்படுத்துதல்; மேலும் ரூ. 8.53 இலட்சம் மதிப்பில் சுற்றுப்புறப் பாதகமின்றி குறைந்த நீர்த்தேவையுடன் நுண்ணுயிர் கூழ்ம முறையில் இறால் வளர்த்தல் போன்ற 4 திட்டங்களை ரூ.42.55 இலட்சம் செலவில் செயல்படுத்த அனுமதி.

✶ தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் ரூ.5 கோடி செலவில் 10 திட்டங்கள் செயல்பாடு.

✶ தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2012–2013ஆம் நிதியாண்டில் ரூ.27.89 கோடி செலவில் 16 திட்டங்களைச் செயல்படுத்த அரசாணை.

* புது தில்லியில் உள்ள உயிர்தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் ரூ.22.93 கோடி மதிப்பில் கால்நடை அறிவியல் உயிர்ப்பொருட்கள் பரிமாற்ற ஆய்வமைப்பு உருவாக்கம்.

* சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான நிருவாகக் கட்டடம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளநிலைப் பட்ட மாணவர் விடுதி, முதுநிலைப் பட்ட மாணவியர் விடுதி மற்றும் தர உறுதி மற்றும் சான்றளிப்பு மையம்; நாமக்கல் கால்நடை மருத்துவ மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்முறைக் கால்நடைப் பண்ணை வளாகம் மற்றும் பாலகம்; சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இணையதளத் தகவல் மையம் ஆகிய 7 புதிய கட்டடங்கள் ரூ. 1.64 கோடி மதிப்பில் கட்டப்பட்டன.

* விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.240 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்.

* ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரில் மண்டலக் கால்நடைக் கண்காட்சிகள்.

* ரூ.45.96 கோடி செலவில் ஒசூரில் 80 ஏக்கர் பரப்பில் பன்னாட்டுத் தரத்தில் கோழி உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம்.

**2013 – 2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

* ரூ.6.93 கோடி செலவில் 100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தல்.

* ரூ.115 கோடி செலவில் 450 கால்நடை மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள்.

❖ ❖ ❖

**தமிழகம் எதிலும் முதலிடம்**

இந்தியாவிலேயே, முதலீட்டாளர்கள் நாடுகின்ற, முதன்மையான இடமாகத் தமிழகத்தை ஆக்குவதே இந்த அரசின் இலட்சியமாகும். முதலிடம் என்று நான் குறிப்பிடுவது முதலீட்டைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மிக முக்கியமாக நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே எனது இலட்சியம்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



# புதுயுகம் படைக்கும் தொழில்துறை

**மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்**
**திரு. பி.தங்கமணி அவர்கள்**






- ரூ.26,625 கோடி முதலீட்டில், 17 இந்திய மற்றும் பன்னாட்டுப் பெரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். 1.46 இலட்சம் பேருக்கு நேரடி / மறைமுக வேலைவாய்ப்பு.
- இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் உருவாகும் கழிவுகளை மூலப்பொருட்களாகக் கொண்டு, ரூ.100 கோடி முதலீட்டில், நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன் உற்பத்தித்திறன் கொண்ட புதிய சிமெண்ட் தொழிற்சாலை துவக்கம்.
- ரூ.3,375 கோடி முதலீட்டில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில், எண்ணூர் துறைமுகம் அருகில், இந்தியாவிலேயே மிகப்பெரிய துறைமுக வசதியுடன் கூடிய எல் & டி கப்பல் கட்டுமானத் தளம்.

- ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு சென்னையில் வர்த்தக ஆதரவு மையம் அமைத்திட ஜப்பான் வர்த்தக அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ரூ.920 கோடி முதலீட்டில், தென்மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில், 500 ஏக்கர் பரப்பளவில், 100 மெகா வாட் திறன் கொண்ட சூரிய சக்தி பூங்காக்கள் நிறுவிடப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- தொழில்முனைவோருக்கு வழங்கும் கடனுக்கான வட்டி வீதத்தை, வெளிச்சந்தையில் வழங்கும் வட்டிவீதத்தை விட 3 சதவீதம் குறைத்து வழங்கும் திட்டம் (TIIC) மூலம் அறிமுகம்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME) மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடனில், தொழில் முனைவோரின் பங்களிப்பினை 10 சதவீதமாகக் குறைக்கும் திட்டம் அறிமுகம்.
- நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித்திறன் கொண்ட ஈரப்பதம் கொண்ட நுண்ணிய கால்சியம் கார்பனேட் ஆலையைத் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அமைத்தல்.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலம் நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதியில், 1,600 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ்மரக்கன்றுகள் நடவு செய்து, நிலச் சீர்திருத்தம்.
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 2011–2012ஆம் ஆண்டில் ரூ.197.60 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது. மேலும், 2012–2013ஆம் ஆண்டில் ரூ.218.14 கோடி நிகர இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தமிழ்நாடு கனிம நிறுவனம், சுண்ணாம்புக்கல் உற்பத்தியை மாதத்திற்கு 15,000 டன் என்ற அளவிலிருந்து, 60,000 டன் என்ற அளவிற்கு உயர்த்தியது.
- தமிழ்நாடு கனிம நிறுவனம், சுமார் ரூ.13.64 கோடி அளவிற்கு கறுப்பு கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்து புதிய சாதனை.
- புவியியல் மற்றும் சுரங்கத் துறையால் ஈட்டப்பட்ட கனிம வருவாய் ரூ.1,777.35 கோடி.
- முன் எப்போதும் இல்லாத அதிக அளவாக, தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 61,491 டன் டூனைட் (Dunite) கனிமம் விற்பனை செய்துள்ளது.
- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், மேக்னசைட் பொருட்களை விற்பனை செய்ததில், இலாபமாக ரூ.23.99 கோடி ஈட்டியுள்ளது.
- வரலாற்றில் முதன்முறை சாதனையாக, தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1.77 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது.
- சிப்காட் தொழில் பூங்காக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ரூ.100 கோடி நிதியுடன் தொழில் கட்டமைப்புத் தொகுப்பு நிதி உருவாக்கம்.

❖ ஐந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் உற்பத்தித் திறன், நிதி நிருவாகம் மற்றும் செயல்பாட்டிற்காக 2011–12ஆம் ஆண்டிற்கான தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன.

## சிறப்பு முயற்சிகள் துறை

### சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

❖ 45 கி.மீ நீளத்திலான இரண்டு வழித்தடங்களுடன் 24 கி.மீ சுரங்கப்பாதையாகவும், 21 கி.மீ உயர்த்தப்பட்ட வழித்தடமாகவும் கொண்டு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் செயல்பாடு.

❖ உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் கட்டுமானப் பணிகளில் 75 சதவீதமும், நிலத்தடி மெட்ரோ நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகளில் 35 சதவீதமும், டிப்போ கட்டுமானத்தில் 55 சதவீதம் நிறைவு.

❖ 10 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைக் கொண்டு 2.7 கி.மீ நீளத்திற்கு சுரங்கப்பாதை அமைப்பு.

❖ தண்டவாளங்கள் அமைக்கும் பணி 5.25 கி.மீ. நீளத்திற்கு முடிவுற்றுள்ளது. முதல் இரயில் பெட்டி தொடர் உற்பத்தி செய்யப்பட்டுவிட்டது. மீதமுள்ள இரயில் பெட்டி தொடர்களின் உற்பத்தி பணிகள் துவக்கம்.

### 2013 – 2014 ஆம் ஆண்டுத் திட்டங்கள்

❖ தொழில் வளர்ச்சிக்கு, சிப்காட் நிறுவனம் மூலம் 25,000 ஏக்கர் நிலப் பரப்பு கொண்ட நில வங்கி.

❖ தூத்துக்குடியில், பொதுத்துறை – தனியார் பங்கேற்புடன் புதிய கப்பல் கட்டும் தளம்.

❖ ரூ.1,90,000 கோடி தொழில் முதலீட்டை ஈர்க்க மதுரை – தூத்துக்குடி தொழில் வழித்தடம்.

❖ சிறிய மற்றும் நடுத்தர கட்டமைப்புத் திட்டங்களுக்காக வரும் 3 ஆண்டுகளில் ரூ.770 கோடி முதலீட்டை உறுதிப்படுத்த “தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டம்”.

❖ ❖ ❖

**துறைதோறும் முதன்மை**

ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற இலக்கை நான் கொண்டுள்ளேன்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்





# நெசவாளர் நலன் காக்க நிறைவான திட்டங்கள்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
டாக்டர். **எஸ். சுந்தர்ராஜ்** அவர்கள்



- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஈரோடு, நன்கு செயல்பட்டு 2012 – 2013ஆம் ஆண்டில் ரூ.4.20 கோடி இலாபமாக ஈட்டியுள்ளது. இவ்வாலையை நவீனமயமாக்க 2013 – 2014ஆம் ஆண்டில் ரூ.5.82 கோடியை விடுவித்துள்ளது.

- முதியோர் ஒய்வூதியத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஒய்வூதியத் தொகை மற்றும் மாத குடும்ப ஒய்வூதியத் தொகையினை ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதனால், முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் 20,222 கைத்தறி நெசவாளர்களும், குடும்ப ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் 1,549 பயனாளிகளும் பயனடைந்து வருகின்றனர்.

- சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நிறுத்தப்பட்ட மத்திய அரசினால் வழங்கப்பட்டு வந்த தொகையினை மாநில அரசு வழங்கி இதுவரை இத்திட்டத்தின் கீழ் 76,051 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- மூடப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை மீண்டும் திறப்பது என முடிவு செய்யப்பட்டது. மேலும், நவீனப்படுத்த ரூ.18.43 கோடி விடுவிக்கப்பட்டது. கன்னியாகுமரி, புதுக்கோட்டை, கோவில்பட்டி, தேனி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த ரூ.105 கோடியை வழங்க ஆணையிடப்பட்டது.

- நடைமுறை மூலதனத்திற்கு வங்கிகளால் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தில் காலாண்டிற்கு ஒருமுறை மானியமாக வழங்கப்பட்டு வந்த 4 விழுக்காடு வட்டித் தொகை மாதந்தோறும் கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகிறது. அதிகரிக்கப்பட்ட வட்டி விகித தொகையான ரூ.17.50 கோடி கடந்த ஆண்டைவிட ரூ.4.50 கோடி அதிகமாகும்.

- விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியினை உயர்த்தி சேலை ஒன்றிற்கு ரூ.20.50 வேட்டி ஒன்றிற்கு

ரூ.10.30 வழங்கப்பட்டு வருகிறது. அரசு 875 கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு கூலியாக ரூ.2.60 கோடியை வழங்க ஆணையிட்டது.

- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் தொடங்கப்பட்டு 2011 – 2012 –ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்த "இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" திட்டம் 2013–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து, ரூ.61.00 கோடி விற்பனை செய்தது.
- கோ–ஆப்டெக்ஸ், தீபாவளி 2012 பண்டிகையை முன்னிட்டு ரூ.128 கோடி மதிப்பிற்கு சில்லரை விற்பனை மற்றும் பொங்கல் 2013 பண்டிகையை முன்னிட்டு ரூ.52.45 கோடி மதிப்பிற்கு சில்லரை விற்பனை நடைபெற்று சாதனைப் படைத்துள்ளது.
- கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் அதிகப்பட்ச சில்லரை விற்பனையாக ரூ.244.64 கோடி எட்டியது. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 78 ஆண்டுகால வரலாற்றிலேயே இந்த விற்பனை மிகவும் உயர்ந்தபட்ச விற்பனையாகும்.
- திருப்பூர் சாயகழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு நானோ மற்றும் பிரைன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தக் கூடுதல் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.200 கோடியை வட்டியில்லா கடனாக விடுவித்துள்ளது.

## பட்டு வளர்ச்சித் துறை

- 2011–2012 ஆம் ஆண்டு முதல் மல்பரி தோட்டங்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 75 சதவிகிதமாக வழங்கப்பட்டு வந்த மானிய உதவிகள் 100 சதவீதமாக வழங்கப்படுகிறது.
- ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்ய ரூ.4,125/– என வழங்கப்பட்டு வந்த மானிய உதவி 2012–2013ஆம் ஆண்டு முதல் ரூ.6,750/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகபட்ச மானியமாக 2.5 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யும் விவசாயிக்கு ரூ.16,875/– வழங்கப்படுகிறது.
- நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைக் கொள்முதல் செய்ய ஒரு விவசாயிக்கு ரூ.30,000/– என வழங்கப்பட்டு வந்த மானிய உதவி, 2012–2013ஆம் ஆண்டிலிருந்து ரூ.37,500/– ஆக உயர்வு.
- 2012–13ஆம் ஆண்டிலிருந்து, 1,500 சதுர அடி பரப்பிற்கு மேல் பட்டுப்புழு வளர்ப்பு குடிலுக்கு ரூ.75,000/– லிருந்து ரூ.1 இலட்சமாகவும், 1,000 முதல் 1,500 சதுர அடி பரப்பளவுள்ள குடிலுக்கு ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/– ஆகவும், 700 முதல் 1000 சதுர அடி பரப்பளவு உள்ள குடிலுக்கு ரூ.25,000/–லிருந்து ரூ.37,500/– ஆகவும், பட்டுப்புழு வளர்ப்பு குடில்கட்ட மானிய உதவிகள் உயர்த்தப்பட்டுள்ளது.

- பட்டு விவசாயிகள் நவீன பட்டுத் தொழில் நுட்பங்களை, தெரிந்துகொள்ள ஏதுவாக முன்பு ரூ.11 க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 'பட்டு மலர்' என்ற தமிழ் மாத இதழ் தற்பொழுது மானிய விலையில் ரூ.2க்கு செப்டம்பர் மாதம் 2012 முதல் விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் 19,000 பட்டு விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சி பற்றிய தொழில் நுட்பங்கள் மாதா மாதம் சென்றடையும்.

- பாரம்பரியமாகப் பட்டு வளர்ப்பில் சிறந்து விளங்கும் மாநிலங்களை விட தமிழ்நாடு இருசுழற்சியின பட்டு உற்பத்தியில் வகிக்கும் முதல் நிலையினை 2011–2012 மற்றும் 2012–2013ஆம் ஆண்டிலும் தொடர்ந்து தக்கவைத்துள்ளது.

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

- பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் பணிபுரிந்து வரும் கைவினைஞர்களின் ஊதியத்தை சுமார் 100 விழுக்காடு உயர்த்தி வழங்கி அவர்கள் பிரதிமாதம் ரூ,15,000 முதல் ரூ. 20,000 வரை ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- "பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது" என்ற விருது வருடந்தோறும் 16 முக்கிய கைத்திறத் தொழில்களில் 85 கைவினைஞர்களுக்கு (17 மகளிர் கைவினைஞர் உள்பட) வழங்கப்படும். இவ்விருதில் ரூ. 5000/– ரொக்கப் பரிசும் ஒரு தகுதி சான்றிதழும் வழங்கப்படும்.

* * *

**ஊக்கம் வேண்டும் உழைக்க வேண்டும்**

நம் நாட்டு மக்களுக்கு என்ன குறை? அறிவில் குறையா? இல்லை! ஆற்றலில் குறையா? இல்லவே இல்லை! அப்புறம் என்ன குறை? ஊக்கம் இல்லை என்பது குறை! உழைப்பு போதாது என்பது குறை!

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்





# பன்னாட்டுப் பயணிகளை ஈர்க்கும் சுற்றுலாத்துறை

**மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்**
**திரு. பூ.செந்தூர் பாண்டியன் அவர்கள்**



- ✶ அனைத்து சுற்றுலா வசதிகளையும் ஒரே இடத்தில் வழங்கும் சுற்றுலா சிறப்புப் பூங்காக்கள் / 7 மாவட்டங்களில் ஊரகச் சுற்றுலாத் தொகுப்புகள் / தமிழ்நாட்டில் 4 சுற்றுலாச் சுற்றுகளை மேம்படுத்துதல்/ திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் / சாலையோர வசதிகள்/சுகாதாரக் கழிப்பறை விழிப்புணர்வு / கடல் வழிச் சுற்றுலா, வான்வழிச் சுற்றுலா மற்றும் இதரச் சுற்றுலாக்களை மேம்படுத்துதல்.
- ✶ கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலாச் சுற்று மற்றும் தென்னகச் சுற்றுலாச் சுற்று ஆகிய திட்டங்களின்கீழ் சுற்றுலாத் தலங்களை அழகுபடுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகள்



மேம்பாட்டிற்காக சிறப்புச் சுற்றுலாத் திட்டம், ரூ.500 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி கடன் உதவியுடன் உருவாக்கம்.

- ரூ.45 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம், மன்னார்குடி, கொல்லிமலை, ஸ்ரீவாஞ்சியம், ஏலாக்குறிச்சி, திருச்சுழி, திருக்கோஷ்டியூர், சிவகங்கை, மணமேல்குடி, ஆய்குடி, தூத்துக்குடி, இருக்கன்குடி, செட்டிநாடு, இராமேஸ்வரம், திருக்கடையூர் ஆகிய 15 இடங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு; தூத்துக்குடி, கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம், விருதுநகர், சிவகங்கை ஆகிய பத்து மாவட்டங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள்; நெடுஞ்சாலைத்துறை மூலம் 11 மாவட்டங்களில் சுற்றுலா சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 18 மாவட்டங்களில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேம்பாடு.

- மத்திய அரசு நிதி உதவியுடன், ஜவ்வாது மலை, தஞ்சாவூர், ஏற்காடு, குற்றாலம், சென்னை (இசைக்கல்லூரி), முட்டுக்காடு, சமணப் புனிதத் தலங்கள் ஆகிய ஏழு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ.23.82 கோடியில் ஒப்புதல்.

- ரூ.20.67 கோடியில் கல்லணை, வைகை அணை, திருவானைக்காவல், ஜேடர்பாளையம் ஆகிய பகுதிகளின் மேம்பாடு.

- தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலா, நலவாழ்வுச் சுற்றுலா ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக மையக் குழுக்கள்.

- நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் புதுப்பிக்கப்பட்டுள்ள டென்மார்க் ஆளுநர் மாளிகைப் பராமரிப்பு மற்றும் நிதி ஆதாரங்களை நிருவகிக்க அறங்காவலர் குழு உருவாக்கம்.

- சுற்றுலாத்துறைக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காகவும், ஊடக ஆலோசனைக்காகவும் ஆலோசகர் தேர்வு.

- தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்குப் பின்வரும் பணிகளுக்கான ஆலோசனை அமைப்பாக தமிழ்நாடு நகர்ப்புரக் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் நியமனம்.

  – தமிழ்நாடு சுற்றுலா வரைவுக் கொள்கை தயாரித்தல்.

  – தமிழ்நாடு சுற்றுலா '10 ஆண்டுச் செயல் திட்டம்' ஆவணம் தயாரித்தல்.

  – கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்.

- "தொலைநோக்கு 2023" ஆவணம் வெளியிடப்பட்டதற்கிணங்க சுற்றுலாவை மேம்படுத்த புதிய சுற்றுலா வரைவுக் கொள்கை வெளியிட நடவடிக்கை.



- ✶ மத்திய அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஸ்ரீரங்கத்தில் சுற்றுலா பொருள் விளக்கக் கூடம் மற்றும் கலையரங்கம் கட்டுவதற்கு ரூ.3.17 கோடி மத்திய அரசால் நிதி ஒப்பளிப்பு.

- ✶ மைய அரசின் நிதியுதவியுடன் சுற்றுலாப் பெருந்திட்டத்தில், மதுரை, இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை மேம்படுத்த ரூ.36.31 கோடியும், தஞ்சாவூரை மேம்படுத்த ரூ.14.75 கோடியும் ஒதுக்கீடு.

- ✶ குப்பையில்லாப் பகுதி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல் மற்றும் அலங்காரக் குப்பைத் தொட்டிகள் அமைத்தல் பணிகளுக்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- ✶ திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் தொகுதி, முக்கொம்பு பகுதி சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு.

- ✶ இந்திய நாட்டிய விழா–2013 மாமல்லபுரத்தில் மிகச் சிறப்பான முறையில் இந்தியா முழுவதிலும் உள்ள தேர்ச்சி பெற்ற மற்றும் பிரபலமான நடனக் கலைஞர்களைக் கொண்டு 116 வகையான கலை நிகழ்ச்சிகள் (88 வகையான பாரம்பரிய நடனங்கள் மற்றும் 28 வகையான கிராமியக் கலை நடன நிகழ்ச்சிகள்) நடத்தல்.

- ✶ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் சுற்றுலா சுற்றுச்சூழல் பூங்கா மற்றும் ஒன்பது இடங்களில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்.

- ✶ இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக தியான மண்டபம்.

- ✶ லண்டனில் நடைபெற்ற சர்வதேசப் பயணச் சந்தை (Word Travel Mart) மற்றும் ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலாச் சந்தைகளில் (International Tourism Bourse) சுற்றுலாத் துறை கலந்துகொண்டு தமிழ்நாடு பற்றிய தகவல்கள் அடங்கிய "குறும் பதிவி" (Pen drive) பல்வேறு சுற்றுலாத் தொடர்பான பங்குதாரர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்டன.

- ✶ இராஜஸ்தானில் நடைபெற்ற "புஷ்கர் மேளா"வில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கிற்கு இரண்டாவது பரிசு.

- ✶ சுற்றுலாத்துறை மேற்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக வெளிநாடு மற்றும் உள்நாடு சுற்றுலாப் பயணிகள் வருகை 32 விழுக்காட்டிலிருந்து 34.01 விழுக்காடாக உயர்வு. எதிர் வரும் ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் வண்ணம் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் திட்டம்.

- ✶ ரூ.250 கோடி செலவில் மாமல்லபுரத்தில் தமிழ்நாடு கடலாண்மைப் புராதன அருங்காட்சியகம் அமைப்பதற்கு அரசாணை.

- ✶ சுற்றுலா இயக்குநரகத்தினைப் புனரமைப்பதற்காக ரூ.28 இலட்சம் அனுமதி.

- ✶ ரூ.10 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாட்டிற்குச் செல்வோம் 2014" என்ற உத்தியின் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப் பணிகள்.

- ✶ 108 அம்மன் திருக்கோவில்களைத் தரிசிக்கும் ஆடி மாத ஆன்மிகச் சுற்றுலா.

- ✶ ஸ்ரீராம நவமி – இராமர் கோவில்கள் சுற்றுலா தொடக்கம்.

❖ ❖ ❖

**"சர்வ தர்மா சம்பவா"**

நமது சமுதாயத்தில் உள்ள பல்வேறு சமூகங்களின் பலதரப்பட்ட கலாச்சார, மதக் கோட்பாடுகளின் கலவைதான் இந்தியாவின் மதச்சார்பின்மை. நம் நாட்டில் வழக்கத்தில் உள்ள பல்வேறு மதங்கள் ஒன்றாக வாழ்வதுதான் "சர்வ தர்மா சம்பவா" என்கிற தத்துவமாகும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை

# முத்திரை பதிக்கும் வணிகவரி - பத்திரப்பதிவு

மாண்புமிகு வணிகவரி மற்றும்
பத்திரப் பதிவுத்துறை அமைச்சர்
திரு. **பி.வி. ரமணா** அவர்கள்



## வணிகவரித்துறை

- ரூ.230.96 கோடி ஒதுக்கீட்டில் வணிகவரித் துறையை முழுமையான கணினிமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- வேளாண் இடுபொருள்கள் மற்றும் உபகரணங்கள், இரசாயன உரங்கள், ஜிப்சம், பூச்சிக் கொல்லிகள், களைத் தடுப்பான்கள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், திவலைப் பீய்ச்சிகள், தெளிப்பான்கள், சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் ஆகியவற்றின் மீதான மதிப்புக் கூட்டுவரி ஆண்டொன்றிற்கு ரூ.87 கோடி வரிவிலக்கு.
- 1.4.2012 முதல் கோதுமை, ஓட்ஸ், இன்சுலின், கையினால் தயாரிக்கப்படும் பூட்டுகள், பாலூட்டும் புட்டிகள், பாலூட்டும் ரப்பர் மற்றும் தலைக்கவசம் ஆகிய பொருட்களின் மீதான மதிப்புக் கூட்டுவரியிலிருந்து விலக்கு.
- மின் சக்தியால் இயங்கக்கூடிய இரு சக்கர வாகனங்கள், தீக்குச்சி தயாரிப்பதற்கான மரக் குச்சிகள் மற்றும் மரப்பட்டைகள், சானிடரி நேப்கின்கள் மற்றும் டயாபர்கள், காம்பேக்ட் ப்ளோரசண்ட் விளக்குகள் மற்றும் காம்பேக்ட் ப்ளோரசண்ட் குழல் விளக்குகள் ஆகிய பொருட்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி 14.5 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைப்பு.
- 1.36 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில், வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டுவரி முற்றிலும் விலக்கிக் கொள்ளப்பட்டது. இதன்மூலம், ஆண்டொன்றுக்கு அரசு ரூ.120 கோடி மானியம் வழங்கி ஒரு சமையல் எரிவாயு மீதான விலையில் ரூ.14.73 குறைக்கப்பட்டது.
- பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 15 பேர் கருணை அடிப்படையில் பணி நியமனம்.

- 15 இடங்களில் 34 வணிகவரி அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூ.20.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. 10 இடங்களில் 16 வணிகவரி அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.11.18 கோடி நிதி ஒதுக்கீடு.

## பதிவுத்துறை

- 1.11.2011 முதல் 31.1.2012 வரையிலான மூன்றுமாத காலங்களுக்குச் "சமாதானத் திட்டம்" நடை முறைப்படுத்தப்பட்டு 23,804 ஆவணங்கள் பதிவுதாரர்களுக்குத் திரும்ப வழங்கப்பட்டு, இதன் மூலம் அரசுக்கு ரூ.140.83 கோடி வருவாய்.

- பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியரின் 17 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம்.

- 52 சார்பதிவகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.26 கோடி ஒதுக்கீடு.

- 01.04.2012 முதல் விற்பனை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 6 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைப்பு.

- பொதுமக்களுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான சேவையை வழங்கும் வகையில் வலைதள அடிப்படையிலான மென்பொருள் தயாரித்தல் முதல் செயல்படுத்துதல் வரையிலான திட்டத்திற்கு ரூ.117.34 கோடி ஒதுக்கீடு.

- அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP Cameras) நிறுவுவதற்கு ரூ.3.50 கோடி ஒப்பளிப்பு.

- தடையில்லா மின்சாரம் கிடைக்க ஏதுவாக முதற்கட்டமாக 150 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு மின் ஆக்கிகள் வழங்குவதற்கு ரூ.4.50 கோடி ஒப்பளிப்பு.

- முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்குப் பெறுவதற்கான உச்சவரம்பு ரூ.5,000/– லிருந்து ரூ. 25,000/– ஆக உயர்வு.

- ரூ.74.90 கோடி செலவில் 17 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகங்கள் மற்றும் 100 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடங்கள்.

* * *



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# அகிலம் போற்றும் ஆதி திராவிடர் நலத்துறைப் பணிகள்



மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திரு. **என்.சுப்பிரமணியன்** அவர்கள்

- ✶ தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க வழங்கப்படும் திட்ட அலகுத் தொகை ரூ.7.50 இலட்சம். அதில் 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம் இரண்டில் எது குறைவோ அது மானியம்.
- ✶ ஆதிதிராவிடர் தொழில் முனைவோரை ஊக்குவிக்க கலந்தாலோசனை மையம்.
- ✶ ஆதிதிராவிட / பழங்குடியின விடுதிகளில் தங்கியுள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாத உணவுப்படி ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.650/– லிருந்து ரூ.750/– ஆகவும் உயர்வு.
- ✶ 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.
- ✶ 779 ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திட, சிறப்பு மானியம் ரூ.39 கோடி.
- ✶ ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியருக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கிட ரூ. 43 கோடி.
- ✶ பழங்குடியினர் நலனுக்கென ரூ.246 கோடி ஒதுக்கீடு.
- ✶ அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக சிறப்பு நிதியுதவி ரூ.10.76 கோடி.
- ✶ தாட்கோ நிறுவனத்திற்குப் பங்கு மூலதனம் ரூ.13.26 கோடி.
- ✶ தாட்கோவால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தில் திரைப்படத் தொழில் நுட்பப் பயிற்சி முடித்த 43 மாணவர்களுக்கு சான்றிதழ்கள்.

- ✶ சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிட மாணவ, மாணவியருக்குக் கற்பிப்புக் கட்டணம், கட்டாயக் கல்விக் கட்டணங்கள் அனைத்தையும் அரசே ஏற்றல்.
- ✶ 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது இடம் பெறும் ஆதிதிராவிட மாணவர்களுக்கான பரிசுத் தொகை ரூ.6,000 ஆக உயர்வு.
- ✶ 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.2,000, ரூ.1,000 மற்றும் ரூ.500 ஆக உயர்வு.
- ✶ முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.1,500/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்வு.
- ✶ அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத்தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகை முதல் ஆண்டிற்கு ரூ.1,500லிருந்து ரூ.2,000 ஆகவும், அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கு ரூ.1,000லிருந்து ரூ.1,500 ஆகவும் உயர்வு.
- ✶ உயர்கல்வி சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பட்டப்படிப்புப் பயில்வோருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.6,500/– லிருந்து ரூ.7,500/– ஆக உயர்வு. பட்ட மேற்படிப்பு / தொழில் கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.7,000லிருந்து ரூ.8,000/– ஆக உயர்வு.
- ✶ 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில், 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சி அளிக்கும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ரூ.10,000/–ம், ஒவ்வொரு பாடத்திலும் 100 விழுக்காடு தேர்ச்சி அளிக்கும் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ.5000/–ம் வழங்கப்படுகிறது.
- ✶ சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் ஆதி திராவிட விடுதியில் தங்காது பயிலும் மதம் மாறிய கிறித்துவ மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.65/– முதல் ரூ.125/– வரை வழங்கப்பட்டு வந்த பராமரிப்புப்படி, ரூ.100/– முதல் ரூ.175/– ஆகவும், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.115/– முதல் ரூ.280/– வரை வழங்கப்பட்டு வந்த பராமரிப்புப்படி, ரூ.175/– முதல் ரூ.350/– வரை உயர்வு.
- ✶ பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, எண்ணெய் செலவினங்களுக்கான தொகை ரூ. 25/– லிருந்து ரூ.50/–ஆகவும் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.35/– லிருந்து ரூ.75/– ஆகவும் உயர்வு.

- ஆதிதிராவிட / பழங்குடியின நல விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு கூடுதலாக 1,500 இடங்கள் ஒதுக்கீடு.

- பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், இடைநிற்றலைத் தவிர்த்து தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்க கூடுதலாக ரூ.32 கோடி ஒதுக்கீடு.

- ரூ.25 கோடி ஒதுக்கீட்டில், சுமார் 25 ஆயிரம் இளைஞர்களுக்குத் திறன் வளர் / தொழில் முனைவோர் / வேலை வாய்ப்புகள் தொடர்பான பயிற்சிகள்.

- பத்தாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்க ரூ.331 கோடி ஒதுக்கீடு.

- "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு" 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

- தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 93 ஆதிதிராவிட மாணவ – மாணவியர் விடுதிகளுக்கு ரூ.68.15 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள்.

- 1,059 மாணவ–மாணவியர் விடுதிகளில் இன்றியமையாக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.77 கோடி நிதி ஒதுக்கீடு.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையினைக் கடைப்பிடிக்காத கிராமம் ஒன்றுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த வழங்கப்படும் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு.

- கல்லூரி விடுதி மாணவர்களுக்கு இரண்டடுக்குக் கட்டில்கள் வழங்க ரூ.5.28 கோடி ஒதுக்கீடு.

- மத்திய அரசின் UPSC முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் தொகை ரூ.50,000 ஆக உயர்வு.

- 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியரை ஊக்கப்படுத்த மாநில அளவில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவியருக்கு முதல் பரிசு ரூ.50,000/– இரண்டாம் பரிசு ரூ.30,000/– மூன்றாம் பரிசு ரூ.20,000/– வழங்கப்படுகிறது.

- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடரல்லாத ஒரு எழுத்தாளருக்கும் சிறந்த படைப்புகளுக்கான பரிசுத் தொகை ரூ.40,000/– ஆக உயர்வு.

- ரூ.3.82 கோடி மதிப்பீட்டில் புதிதாக 25 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள்.

- ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் 582 விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் சுகாதார நலனைப் பாதுகாக்க விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டைத் தகளி (Napkin Burner).

- 200 ஆதி திராவிடர் நலத் தொடக்கப்பள்ளிகளைப் புதுப்பிக்க / பழுதுபார்க்க ரூ.30 கோடி ஒதுக்கீடு.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

ஆதிதிராவிடர் நலனுக்காக ரூ.7,042 கோடி ஒதுக்கீடு. 15.29 சதவிகிதம் கூடுதல்.

ரூ.489.48 கோடி பழங்குடியினர் நலனுக்காக துணைத்திட்டத்தில் ஒதுக்கீடு.

ரூ.479.87 கோடி கல்வி உதவித் தொகைக்கு ஒதுக்கீடு. 10.62 சதவிகிதம் கூடுதல்.

ரூ.56.34 கோடியில் விலையில்லா மிதிவண்டிகள் .

ரூ.35.04 கோடி மதிப்பீட்டில் 44 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் .

❖ ❖ ❖

**நம்பிக்கை ஏற்படுத்துவோம்**

மதச்சார்பற்ற கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கு வழிகாண முடியும் என்ற ஒரு நம்பிக்கையையும் சிறுபான்மையினருக்கு ஏற்படுத்திட வேண்டும்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



போக்குவரத்துத் துறை

# பயன்மிகு திட்டங்களால் பயணங்கள் இனிதாகும்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
திரு. **வி.செந்தில் பாலாஜி** அவர்கள்









- ✶ சென்னையில் மோனோ இரயில் திட்டத்தை ரூ.8,500 கோடி செலவில் முதற்கட்டமாக மூன்று வழித்தடங்களில் 57 கி.மீ. தூரத்திற்கு DBFOT முறையில் செயல்படுத்திட அரசு அனுமதி.
- ✶ இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய ஒளி மூலம் 25 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திர நிலையம்.
- ✶ ரூ.1,026 கோடி மதிப்பில் 6,000 புதிய பேருந்துகள்.
- ✶ 424 பழைய பேருந்துகள் புதுபிக்கப்பட்டு இயக்கம்.

* வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை 19,167இல் இருந்து 20,500 ஆக உயர்வு.
* மத்திய அரசின் டீசல் விலை உயர்வால் ஏற்படும் கூடுதல் செலவை மக்கள் மீது சுமத்தாமல் ஈடுசெய்ய போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.700 கோடி ஒதுக்கீடு.
* முதல்முறையாக மாற்றுத்திறனாளிகள் எளிதாக ஏறி இறங்க ஏழு சிறப்பு வடிவமைப்பு பேருந்துகள் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகம்.
* தொலைதூரத் தடங்களுக்கு மின்னணுப் பயணச்சீட்டு முன்பதிவு முறை அறிமுகம்.
* கையடக்க மின்னணுப் பயணச்சீட்டுக் கருவிகள் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் அறிமுகம்.
* தொலைதூரப் பயணிகளின் வசதிக்காக தமிழகத்தின் பல்வேறு இடங்களில் 71 முன்பதிவு மையங்கள் துவக்கம்.
* நவம்பர் 2011 முதல் 37 பயணவழி உணவகங்கள் தரம் உயர்வு.
* கூடுதல் வருவாயை ஈட்டும் பொருட்டு சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவை அறிமுகம்.
* 25 இலட்சம் மாணவ, மாணவியருக்குக் கட்டணமில்லாக் கையடக்க இலவசப் பேருந்து பயண அட்டைகள்.
* "விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு" முறை வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மாநகராட்சிகளிலும் ஜூன் 2012இல் அறிமுகம்.
* 45 வயதிற்கு மேற்பட்ட 18,003 ஓட்டுநர்களுக்கு முழு உடல் பரிசோதனை.
* பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.1.28 கோடியில் புதிய சி.டி. நிழல் ஒளிக்கூறு இயந்திரம்.
* விபத்தில்லாப் பணித் திட்டத்தின்கீழ், ரூ.91.52 இலட்சம் மதிப்பில் விபத்தில்லாமல் பணி செய்த ஓட்டுநர்களுக்கு ஊக்கத் தொகை.
* கோயம்பேடு பேருந்து நிலையத்தில் பணியாளர் ஓய்வறையில் ரூ.17 இலட்சம் செலவில் 223 இரண்டு அடுக்குக் கட்டில்.
* ரூ.199.08 கோடி மதிப்பில் 2.79 இலட்சம் தொழிலாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் மற்றும் கருணைத் தொகை.
* 3,771 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.82.85 கோடி ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை இரண்டு கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

- ✶ பண்டிகைக் கால முன்பணம் ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.
- ✶ 16,179 ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.
- ✶ மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள 569 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை.
- ✶ அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் 321 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- ✶ அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 9,157 பதிலி பணியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.
- ✶ போக்குவரத்துக் கழக மாற்றுத்திறனாளி ஊழியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் தேதி ஊதியத்துடன் சிறப்பு விடுப்பு அனுமதி.
- ✶ சாலைப் போக்குவரத்து நிறுவன பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் பட்டயப் படிப்பு தொடங்க அனுமதி.
- ✶ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய விபத்து இழப்பீட்டுத் தொகை திட்டம் மூலம் ரூ.40 கோடி நிதியுதவி.
- ✶ நீதிமன்றப் பிணையில் இருந்த 219 பேருந்துகளை மீட்க ரூ.13.91 கோடி நிதி ஒதுக்கீடு.
- ✶ ரூ.41.65 இலட்சம் செலவில் பணிமனை மற்றும் பேருந்து நிலையங்களில் உள்ள 115 பணியாளர் ஓய்வறைகள், ரூ.1.11 கோடி செலவில் 152 பணிமனைகளில் உள்ள பணியாளர் ஓய்வறைகள் மேம்பாடு.
- ✶ ரூ.9.13 கோடி செலவில் 531 பணிமனைகளில் கான்கிரீட் தளம்.
- ✶ கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மின்னணு ஏல முறையில் ஏலமிடும் முறை அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் அறிமுகம்.
- ✶ 42 புதிய பணிமனைகள் அமைக்க நடவடிக்கை.
- ✶ தமிழகப் போக்குவரத்துக் கழகங்களின் 2011–2012ஆம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டுத் திறனுக்காக மத்தியத் திட்டக்குழுப் பாராட்டு.
- ✶ ஒரு லிட்டர் எரிபொருளுக்கு பேருந்துகள் செல்லக் கூடிய இயக்க தூரம் 5.25 கி.மீ.லிருந்து 5.27 கி.மீ. ஆக அதிகரிப்பு.

✶ ✶ ✶





# மீனவர் துயர் துடைக்கும் மீன்வளத்துறை

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்
திரு. **கே.ஏ.ஜெயபால்** அவர்கள்





✶ மீன்பிடித் தடைக் காலத்தில் வழங்கப்படும் நிவாரணத்தொகை ரூ.1,000/– லிருந்து ரூ.2,000/– ஆக உயர்வு. 3.13 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 63 கோடி ஒதுக்கீடு.

- மீன்பிடிப்புக் குறைந்த காலத்திற்கு ரூ.4,000/– சிறப்பு நிவாரணம். 2.76 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு ரூ.111 கோடி ஒதுக்கீடு.
- விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளைச் சூரை மீன் பிடிப்பிற்கு மாற்றியமைக்க ரூ. 5 கோடி ஒதுக்கீடு.
- கடலூர் மாவட்டம், பெரியகங்கணாங்குப்பம் கிராமம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் கிராமத்தில் முறையே ரூ.14 கோடி மற்றும் ரூ.23 கோடி செலவில் மீன் பதனிடும் பூங்காக்கள்.
- ரூ.18 கோடியில் நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம்.
- ரூ.68.14 கோடியில் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீன்வளத் தொழில்நுட்ப நிறுவனம்.
- மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 3,44,702 பயனாளிகளுக்கு ரூ.41.27 கோடி.
- மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 2,95,986 பயனாளிகளுக்கு ரூ.35.49 கோடி.
- பாரம்பரிய மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்க 2,450 பயனாளிகளுக்கு ரூ.6.46 கோடி.
- ரூ.94.83 கோடியில் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட 5,000 பாரம்பரிய மீனவர்களுக்கு 1 லிட்டர் ரூ.25/– என்ற மானிய விலையில் மண்ணெண்ணெய்.
- ரூ.2.63 கோடியில் தமிழக அண்மைக் கடல் பகுதிகளில் மீன்வளத்தை அதிகரிக்க 17 இடங்களில் மீன் உறைவிடங்கள்.
- 88 மீனவ இளைஞர்களுக்குக் கடற்சார் கல்வி பயில ரூ.41.25 இலட்சம் உதவித்தொகை.
- தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 16.23 கோடி செலவில் சென்னை மீன்பிடித் துறைமுகத்தினை நவீனப்படுத்தும் பணிகள்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீன்பிடித் துறைமுகத்திற்கு ரூ.60.65 கோடியும், தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திற்கு ரூ.57.40 கோடியும் மற்றும் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்திற்கு ரூ.73.52 கோடியும், துறைமுக மேம்பாட்டிற்காகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு.

- ✶ கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி கிராமத்தில் சுமார் ரூ.50 கோடி செலவில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மீன்பிடித்துறைமுகம் அமைக்க ஆய்வு.
- ✶ மத்திய – மாநில நிதியுதவியுடன் ரூ.78.50 கோடியில் நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம்.
- ✶ கடலூர் மீன்பிடித் துறைமுக மேம்பாட்டு பணிகளுக்காக தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியின் கீழ் ரூ.10.34 கோடி ஒப்பளிப்பு.
- ✶ கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம் ஆகிய இடங்களில் கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றி ஒப்படைத்தல் (BOOT) திட்டத்தின் கீழ், மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகள்.
- ✶ மத்திய–மாநில அரசு நிதியுதவியுடன் இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் ரூ. 50 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம்.
- ✶ தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் ரூ. 78.93 இலட்சம் செலவில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஜகதாப்பட்டினம் மற்றும் ரூ. 7.78 கோடி செலவில் கடலூர் மாவட்டத்திலுள்ள முடசலோடையில் மீன் இறங்கு தளங்கள் நவீனப்படுத்தும் பணிகள்.
- ✶ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி – ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு (NABARD-RIDF) நிதியுதவியுடன் ரூ. 62.95 கோடி செலவில் தமிழ்நாட்டில் 11 மீன்இறங்கு தளங்களும், ரூ. 37.05 கோடி செலவில் 12 இடங்களில் அரசு மீன் விதைப் பண்ணைகள் அமைக்கும் பணிகள்.
- ✶ ரூ.1.03 கோடியில் பாரம்பரிய மீனவர்கள் பயன்பெறும் வகையில் 10 இடங்களில், சூரிய சக்தி மற்றும் காற்று விசை மூலமாக இயங்கும் வழிகாட்டி விளக்குகள்.
- ✶ அவசரகால சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ.103.24 கோடி செலவில் நாகப்பட்டினம் மற்றும் பழையாறில் மீன்பிடித்துறைமுகம் நவீனப்படுத்தும் பணி; நாகூர் மற்றும் அன்னன்கோயில் மீன் இறங்கு தளங்கள் நவீனப்படுத்தும் பணி மற்றும் ஆறுகளின் முகத்துவாரங்களை அகலப்படுத்தும் பணி.
- ✶ தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறும் வகையில் 10 மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அமைத்திட ரூ.50 இலட்சம் செலவில் 50% மானியம்.

- ✶ நீர்த்தேக்கங்களில் மீன்வளத்தினைப் பாதுகாக்கும் பணிக்காக 45 கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குவதற்கு ரூ.1.07 கோடி நிதி.

- ✶ சூரை மீன்பிடிப்புப் பயிற்சி வழங்குவதற்காகக் கண்ணாடி நாரிழைபடகுகள் வாங்குவதற்காக ரூ.85.81 இலட்சம் நிதி.

- ✶ ரூ.1.35 கோடி செலவில் பரங்கிபேட்டையில் ஒருங்கிணைந்த கடலோர மீன்வளர்ப்பு மாதிரிப் பண்ணை.

- ✶ ரூ.85.85 இலட்சம் செலவில் 1,300 கடல் மீனவர்களுக்குப் பிற மாநிலங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

- ✶ தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.20.81 கோடி செலவில் அரசு மீன் பண்ணைகளைச் சீரமைத்தல், அலுவலர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, கணவாய் மீன் பிடித்தல் மற்றும் நவீன மீன் விற்பனை அங்காடிகள் அமைத்தல் போன்ற பணிகள்.

- ✶ ரூ.1 கோடியில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நாகப்பட்டினத்தில் ஒரு மீன் சுத்தப்படுத்தும் நிலையம்.

- ✶ ரூ.12 கோடியில் தூத்துக்குடி துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.

- ✶ தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தில் 14 மாவட்டங்களிலுள்ள 40 உபவடிநிலப் பகுதிகளுக்கு பல்வேறு மீன் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.6.96 கோடி நிதி ஒப்பளிப்பு. உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்திட கூடுகளில் மீன்வளர்த்தல் மற்றும் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்புப் பண்ணை அமைத்தல் போன்றவற்றிற்கு ரூ.12.92 கோடி நிதி ஒப்பளிப்பு. உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட பல்வேறு திட்டங்கள் ரூ.3.66 கோடி செலவில் செயல்பாடு.

- ✶ நீர்தேக்கங்களின் மீன் உற்பத்தியை அதிகரிக்க ரூ. 79.04 இலட்சம் செலவில் 69.26 இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகள் இருப்பு செய்தல்.

- ✶ மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 53 நீர்த்தேக்கங்களையும் குத்தகைக்கு விடல்.

- ✶ 159 ஹெக்டேருக்கு ரூ.1.33 கோடி உள்நாட்டு மீன்வள மானியம்.

- ✶ ரூ.3.33 கோடியில் உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் இறால் வளர்ப்போருக்கு மானியம்.

- ✶ ரூ. 1.11 கோடி செலவில் 13 நடமாடும் மீன்விற்பனை நிலையங்கள்.

- ரூ.93 இலட்சத்தில் சென்னையிலும் ரூ.85 இலட்சம் செலவில் கோவையிலும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் மீன் கையாளும் நிலையங்கள் அமைப்பு.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தில் 19 ஆண்டுகளுக்குப் பின், 6 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள்.
- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலமாக, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.89.08 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், நீலாங்கரையில் நவீன மீன்விற்பனை அங்காடி மற்றும் மீன் உணவகம்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலமாகத் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.30.75 இலட்சம் மதிப்பீட்டில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் 20 பேர் வெளிமாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பு.

ஆழ்கடல் மீன் பிடிப்பினை ஊக்குவித்திட, புதிய டியூனா மீன்பிடி படகுகள் வாங்க வழங்கப்படும் மானியம் 25 லிருந்து 50 சதவீதமாக உயர்வு.

ரூ.245 கோடி செலவில், கடலோரப் பகுதிகளில் மீன் இறங்கு தளங்கள் மற்றும் கடலூர், பழையாறு, நாகப்பட்டினம், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்கள் மேம்பாடு.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

7.78 கோடி ரூபாய் செலவில் கடலூர் மாவட்டத்தில் உள்ள முடசலோடையில் புதிய நவீன மீன் இறங்கு தளம்

இராமநாதபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பொதுத்துறை – தனியார் துறை பங்கேற்பு மூலமாக இரண்டு மீன் பதப்படுத்தும் பூங்காக்கள்.

ரூ.20 கோடி செலவில் நாகூரிலும் பரங்கிப்பேட்டையிலும் ஆழமற்ற முகத்துவாரங்களில் பாதுகாப்பாக படகுகள் சென்று வர நிலைப்படுத்தும் பணிகள்.

**110 அறிவிப்புகள்**

ரூ.8.50 கோடி செலவில் மீனவர்கள் பாதுகாப்பினை உறுதிசெய்ய தகவல் தொடர்பு வசதிகள் ஏற்படுத்த கடலோரத்தில் தகவல் தொடர்பு கோபுரங்கள் அமைத்து, தகவல் தொடர்பு கருவிகள் இல்லாத விசைப் படகுகளுக்கு 75 சதவிகிதம் மானியத்தில் ரூ.20,000 விலையுள்ள VHF கருவிகள் மற்றும் ஆழ்கடல் பகுதியில் அதிக நாள் தங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் படகுகளுக்கு 75 சதவிகிதம் மானியத்தில் ரூ.2.50 இலட்சம் மதிப்புள்ள HF ரேடியோ கருவிகள்.

ரூ.42 கோடி மதிப்பில் சேத்துப்பட்டு ஏரி புனரமைக்கப்பட்டு பசுமைப் பூங்கா.

ரூ.75 கோடி மதிப்பில் சென்னை மீன்பிடி துறைமுகம் மேம்பாடு.

★ ★ ★





# மதிநுட்பம்மிகு திட்டங்களால் மதிப்புறு தகவல் தொழில்நுட்பம்

**மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்**
**முக்கூர். திரு. என்.சுப்பிரமணியன் அவர்கள்**






- ✶ 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளியிலேயே இணையத்தின்வாயிலாகப்பதிவுசெய்து,வேலைவாய்ப்புபயிற்சித்துறைஅலுவலகத்திலிருந்து பதிவு செய்ததற்கான அட்டையை, தங்களுடைய தகுதிநிலை மாறாமல் பெற்றுக் கொள்ள ஆணை.

- ✶ தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ், மின் ஆளுமைத் திட்டங்களைச் செயல்படுத்த, தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் 01.08.2011 முதல் தொடக்கம்.

- ✶ தமிழ்நாடு சுகாதார திட்டம் , சென்னை மெட்ரோ ரயில் திட்டம், தமிழகத் தேர்தல் ஆணைய வாக்காளர் பட்டியல் திட்டம், விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர், மடிக்கணினி வழங்கும் திட்டம் போன்ற அரசாங்க இணையப் பதிவுகள்/செயற்பாடுகள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் வாயிலாக செயல்பாடு.



- ✶ தேசிய அளவில் தமிழகம், முதன் முதலாக தகவல் பாதுகாப்பு நிருவாகம் மற்றும் தரவு மைய இயக்கங்கள் ஆகியவற்றுக்கான ISO/IEC 20000–1:2005 மற்றும் 27001:2005 தர சான்றிதழ்களைப் பெற்றது.

- ✶ மின் மாவட்ட திட்டங்களை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தும் பொருட்டு மாவட்டங்களில் மின் ஆளுமை சங்கங்கள் அமைப்பு.

- ✶ இணையதளத்தில் மக்களுக்கு பயன்படும் தகவல்கள் மற்றும் மின் ஆளுகை சேவைகளைச் சிறப்பாக வெளியிட்டதற்காகத் தமிழகத்திற்கு 2012ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வெப் ரத்னா விருது.

- ✶ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ் 8,35,407 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள்.

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்**

- ✶ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவை சென்னை நீங்கலாக தமிழகம் முழுவதும் 02.09.2011 அன்றும் சென்னையில் 20.10.2012 அன்றும் தொடக்கம்.

- ✶ அரசு கேபிள் டிவி மாதக் கட்டணம் ரூ.70; 61.55 இலட்சம் சந்தாதாரர்கள்; 100 சேனல்கள்; 24,361 ஆப்பரேட்டர்கள்.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

- ✶ ரூ.10 கோடி செலவில் கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்கள் ஊக்குவிப்பு.

✶ ✶ ✶



செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை

# மக்கள் திட்டங்களை மக்களிடம் சேர்க்கும் சீர்மிகு பணிகள்

மாண்புமிகு செய்தி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர்
திரு. **கே.டி. ராஜேந்திரபாலாஜி** அவர்கள்








## செய்தி–மக்கள் தொடர்புத்துறை

- ✶ சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் நிருபர்கள் பயன்பாட்டிற்கென ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம்.
- ✶ 03.08.2011 அன்று ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட தலைமைச் செயலக செய்தியாளர் அறை.
- ✶ தலைமைச் செயலகத்தின் பிரதான நுழைவு வாயிலின் இருபக்கங்களிலும் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட புகைப்பட மாடம் திறப்பு.
- ✶ 14.09.2011 முதல் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/– லிருந்து ரூ.6,000/– ஆக உயர்வு.
- ✶ 14.09.2011 முதல் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.2,500/–லிருந்து ரூ.3,000/– ஆக உயர்வு.

* ஓய்வுபெற்ற பத்திரிக்கையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்ச வரம்புத் தகுதி ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்வு. பணியில் இருக்கும் பத்திரிக்கையாளர்களின் ஆண்டு வருமானத்திற்கான உச்ச வரம்புத் தகுதி ரூ.1.20 இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்வு.

* ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் செய்தியாளர் ஊடக மையம் மற்றும் மென்பொருள் வசதியுடன் இணைய மையம் அமைப்பு.

* 18.7.2011 அன்று ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் திறப்பு.

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20.2.2013 அன்று ரூ.3 கோடி மதிப்பீட்டில், சீர்காழியில் அமைக்கப்பட்டுள்ள தமிழிசை மூவர் மணிமண்டபம், விருப்பாட்சியில் கட்டப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம், ஓமந்தூரில் கட்டப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

* ரூ.23 கோடி மதிப்பீட்டில் சென்னையில் பேரறிஞர் அண்ணா மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடங்கள், கிண்டி காந்தி மண்டப வளாகம், சென்னை (ம) கன்னியாகுமரியில் உள்ள காமராஜர் மணிமண்டபங்கள், கும்பகோணம் மகாமகக் கலையரங்கம் ஆகியவை புனரமைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்குச் சாய்வு நடைபாதைகள். 9.12.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவிடத்தை திறந்து வைத்தார்கள்.

* மெரினா கடற்கரையில் அண்ணல் காந்தியடிகளின் சிலையை ரூ.11.95 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி.

* ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் சென்னையில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கும் விருதுநகரில் தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கும் மணிமண்டபங்கள் அமைக்க ஆணை.

* ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில், தியாகி சிதம்பரநாதன் அவர்களுக்கு களியக்காவிளையிலும், தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு, திருச்சிராப்பள்ளியிலும், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும் திருவுருவச்சிலைகள்.

* தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு, சேலம் மாவட்டம், சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைக்க, ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு.





- ✶ வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு, சிவகங்கையில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுச் சின்னம்.
- ✶ சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில், ரூ.63 கோடி மதிப்பீட்டில், புதிய கலையரங்கம் மற்றும் மாநிலச் செய்தி நிலையம்.
- ✶ 9.4.2013 அன்று சட்டப் பேரவையில், வீரபாண்டிய கட்ட பொம்மன் அவர்களுக்கு கயத்தாறில் மணிமண்டபம் கட்ட ஆணை.
- ✶ மறைந்த அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 8.4.2012 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
- ✶ இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த தினத்தை அரசு விழாவாகக் கொண்டாட ஆணை.
- ✶ தென்னிந்தியத் திரையுலகத்தின் முதல் பெண் இயக்குநர் மற்றும் படத்தயாரிப்பாளர் டி.பி.இராஜலட்சுமி அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட ஆணை.
- ✶ 14.04.2012 அன்று சித்திரைதிருநாள் விழா, தமிழ்வளர்ச்சித்துறையுடன் இணைந்து மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
- ✶ வேலூர், தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆண்டுக்கொருமுறை, பொருட்காட்சிகள் நடத்த ஆணை.
- ✶ தமிழகத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.
- ✶ செய்தி மக்கள் தொடர்புத்துறையால் 143 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் அரசுக்கு ரூ.29 கோடியே 50 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் வருவாய் .

* ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட குளிர் சாதன வசதியுடன் கூடிய எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன, நவீன படப்பிடிப்புத் தளம் 6.1.2012 அன்று திறப்பு.

* எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் படப்பிடிப்புத் தொகை, ரூ.8,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்வு.

* எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தயாரித்த திரைப்படம், கோவாவில் நடைபெற்ற அகில இந்தியத் திரைப்பட விழாவில், தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு பரிசு பெற்றது.

* எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் ரூ.9.50 கோடி மதிப்பீட்டில், 2013–2014ஆம் கல்வியாண்டில் அனிமேஷன் மற்றும் காட்சிப் பயன் எனும் புதிய பட்டயப்படிப்புகள்.

* ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில், எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு முன்காட்சித் திரையரங்கினை, நவீனப்படுத்த ஆணை.

* ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில், தமிழ்நாடு திரைப்படப்பிரிவின், செய்திப்படங்கள் டிஜிட்டல் முறையில் பாதுகாப்பு.

* பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் புகைப்படச்சுருள்கள் மின்னணு முறையில் ரூ.15.89 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு.

* ரூ.18 இலட்சம் செலவில் முக்கிய விழா நிகழ்ச்சிகளை உடனுக்குடன் ஒளிபரப்ப ஏதுவாக, தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்கு நேரடி ஒளிபரப்புக் கருவி (Live back bag) .

* செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பணிகளை விரைவு படுத்தி சிறப்புடன் செயலாற்ற பழைய வாகனங்களுக்கு மாற்றாக, 34 புதிய வாகனங்கள் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் வாங்கி வழங்கப்பட்டன.

* தலைமையகம் மற்றும் அனைத்து மாவட்டங்களுக்கும் நவீன தொழில் நுட்ப டிஜிட்டல் காமிராக்கள் ரூ.81.58 இலட்சம் மதிப்பீட்டில், வாங்கி வழங்கப்பட்டன.

* செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களை ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில், புதுப்பிக்க ஆணை.

* அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில், ரூ.1.06 கோடி மதிப்பீட்டில், மின்னணு விளம்பரத் திரைகள் (Digital Display Screens) அமைக்க ஆணை.

- திருப்பூர், அரியலூர் மாவட்டங்களுக்கு புதிய ஜீப்புகள் வாங்கப்பட்டு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.
- காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழினை, மாதாந்திர இதழாக ஜுலை திங்கள் முதல் வெளியிடப்பட்டு வருகிறது.
- ரூ,5.83 கோடி செலவில், தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்திற்குப் புதியதாக கட்டடம் கட்ட ஆணை.
- தமிழரசு அச்சகத்திற்குக் கணினியிலிருந்து நேரடியாக அச்சுத்தகடு செய்யும் வசதி கொண்ட CTP (Computer to Plate) நவீனத் தொழில்நுட்ப இயந்திரம், ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க ஆணை.
- "ஓராண்டுச் சாதனைகள்", "நாடு நலம் பெறத் திட்டங்கள்", "மீனவர் நலம் காக்கும் மக்கள் அரசு" மற்றும் "அம்மாவும் அன்னைத் தமிழும்" போன்ற தலைப்புகளில் திரைப்படச்சுருள் செய்தி மலர்கள் தயாரிப்பு.
- "ஓராண்டுச் சாதனைகள்", "சித்திரைத் திங்களில் தமிழ்புத்தாண்டு" , "மீனவர் மீன்பிடித் தடைக்கால உதவித்தொகை" ஆகிய குறும்பாடல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.
- "நூறாண்டு பேசும் ஓராண்டுச் சாதனை", "அம்மாவும் அன்னைத் தமிழும்", "டெங்குவை ஒழிப்போம் – பகுதி 1", "உங்களால் நான் (சுதந்திரத் திருநாள் 2012)", "டெங்குவை ஒழிப்போம் – பகுதி 2", "பென்னி குவிக்" ஆகிய வீடியோ செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.
- "விதியை மாற்றிய விதி", "ஒரு கையெழுத்து மாறியது தலையெழுத்து" (11 குறும்பாடல்கள்)-Jingles ஆகிய வீடியோ செய்தி மலர்கள் வெளியிடப்படவுள்ளன.
- தமிழரசு சிறப்பு வெளியீடுகள் : "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்" – தமிழ் தொகுப்பு I, "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்" – தமிழ் தொகுப்பு II, "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்" – ஆங்கிலம் தொகுப்பு I, "வெற்றிக்கதைகள்", "அமுத மொழிகள்", "காபி டேபிள்" புத்தகம், "பத்திரிக்கையின் பார்வையில் மிளிரும் சாதனைகள்" ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன.
- தமிழரசு சிறப்பு வெளியீடு ஓராண்டுச் சாதனை மலர்.

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

* அரசு மைய அச்சகத்தினை நவீனமாக்கிட ரூ.7.70 கோடி நிதியில் அதி நவீன இயந்திரங்கள்.
* எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையினைச் சார்ந்த அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இரவு நேரப்படியை நாளொன்றுக்கு ரூ.14/–லிருந்து ரூ.25/– ஆக உயர்வு – சுமார் 200 தொழில்நுட்பப் பணியாளர்கள் பயன்.
* எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையினைச் சார்ந்த அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர சிற்றுண்டிப் படியானது ரூ.150/–லிருந்து ரூ.200/– ஆக உயர்வு – சுமார் 1,200 தொழில்நுட்பப் பணியாளர்கள் பயன்.
* அனைத்துப் பணியாளர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் மனமகிழ் மன்றத்திற்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1,00,000/– நிதித்தொகை 2011ஆம் ஆண்டு முதல் ரூ.2,00,000/– ஆக உயர்வு.
* எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் இயக்ககம், அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் மின்ஆளுமையினைப் படிப்படியாக அறிமுகம் செய்யும் பொருட்டு 2011–2012ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.23.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
* எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அரசு மைய அச்சகம் உள்ளிட்ட கிளை அச்சகங்களில் புதிய இயந்திரங்களான நவீன வெட்டும் இயந்திரம், முகப்பு அட்டை செய்யும் இயந்திரம் மற்றும் கம்பியடிக்கும் இயந்திரம் போன்றவற்றை நிறுவி அச்சுப்பணியினை மேம்படுத்தும் பொருட்டு ரூ.71.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
* எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையைச் சார்ந்த அரசு அச்சகங்களில் புத்தகம் கட்டுநர்களாகப் பணிபுரியும் கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் ரூ.500/– ஊக்கத் தொகையாக வழங்க ஆணை.
* அரசு அச்சகங்களில், புத்தகம் கட்டும் பிரிவில் வெட்டும் இயந்திரங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்ப்படியானது ரூ.30/– லிருந்து ரூ.200/–ஆக உயர்வு.
* அரசு மைய அச்சகத்தின் வரவு–செலவுப் பிரிவு மற்றும் அதிரகசியப் பிரிவு ஆகியவற்றில் விடுமுறை நாட்களிலும் விடுப்பு ஏதுமின்றி தொடர்ந்து பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த வார ஈட்டுப்படி ரூ.15/–லிருந்து ரூ.200/–ஆக உயர்வு.

- சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்ற அரசு அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பூதியமாக ரூ.300/– மாதந்தோறும் வழங்கப்படுகிறது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அனைத்து அச்சகங்களிலும் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு சேலைகளுக்குப் பதிலாக ஊதா நிற மேலங்கி சீருடையாக வழங்கப்படுகிறது.
- வல்லுநர் குழு அறிக்கையின்படி, அரசு மைய அச்சகத்தினை நவீனப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு நான்கு வண்ண ஆப்செட் இயந்திரம் ரூ.2.6 கோடி மதிப்பிலும், ஒரு இரண்டு வண்ண வெப்ஆப்செட் இயந்திரம் ரூ.1.48 கோடி மதிப்பிலும் கொள்முதல்.
- திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை அரசுக் கிளை அச்சகங்களில், அரசு வெளியீடுகளுக்கான விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டன. அவ்வெளியீட்டு விற்பனை நிலையங்களின் கிளைகளிலேயே பெயர் மற்றும் மத மாற்றப் படிவங்களையும் பொதுமக்கள் எளிதாகப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு.
- அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 3 ஜோடி கைத்தறி சீருடை மற்றும் 1 ஜோடி கதர் சீருடை வழங்கப்பட்டு வருகிறது. ஆண்களுக்கு ஜோடி ஒன்றிற்கு தையற்கூலி ரூ.200/– வழங்கப்பட்டு வருகிறது.
- பெண் தொழிலாளிக்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் நான்கு ஜோடி புடவை மற்றும் ரவிக்கைகளுக்கு பதில் ஆண்டுக்கு ஒரு முறை 2 கருநீலநிற (Violet) மேல் அங்கிகள் (Overcoat) சீருடையாக வழங்கப்படுகின்றன.
- தனிநபர் பெயரை மாற்ற ரூ.415/–ம், தமிழில் பெயரைப் பிரசுரம் செய்ய ரூ.115/–ம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது.
- திருநங்கைகளுக்கான பெயர் மாற்ற அறிவிக்கைகள் கட்டணம் ஏதுமின்றி அரசிதழில் வெளியிடவும், அவ்வாறு வெளியிடப்படும் அரசிதழ்களை அஞ்சல் மூலம் அவர்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கவும் ஆணைகள் .
- சென்னை அரசு மைய அச்சகத்தில் பணியாளர்களை ஊக்கப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஜப்பான் நாட்டின் கைசென் பாட வழியில் (Kaizen method) தரக்கட்டுப்பாட்டுக் குழுக்கள் உருவாக்க ஆணைகள் வெளியிடப்பட்டு ரூ.95,000/– அதற்கான பயிற்சிகளும் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு பணிகள் தரப்பட்டுள்ளன.

# சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை



★ அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்திட முதன்முறையாக தனித்துறை உருவாக்கம்.

**விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கல்**

★ மகளிரின் பணிச்சுமையைக் குறைக்க ரூ.3,370 கோடி நிதி ஒதுக்கீட்டில் 60 இலட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்பட்டன.

**மாணவ/மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கல்**

★ ரூ.2,766 கோடி நிதி ஒதுக்கீட்டில் 16.64 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

★ ரூ.1,500 கோடி மதிப்பில் 35 இலட்சம் உபகரணத் தொகுப்புகள் விநியோகம்.

★ ரூ.1,500 கோடி மதிப்பில் 5.65 இலட்சம் மடிக்கணினிகள்.

★ ★ ★



## தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

# தொழிலாளர்கள் நலனில் தொய்வடையாப் பணிகள்

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

திரு. **எஸ்.டி.செல்லப்பாண்டியன்** அவர்கள்



- ✶ பீடித் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ள அரசு வழங்கும் பங்குத் தொகை ரூ.5,000/–லிருந்து ரூ.60,000/–மாக உயர்வு. 200 வீடுகள் கட்டுவதற்கு ரூ.1.20 கோடி ஒதுக்கீடு.
- ✶ எடையளவு சட்டத்தின் கீழ் 7,31,515 ஆய்வுகளில் ரூ.41,22,35,875/– முத்திரைக் கட்டணமும் ரூ.1,78,83,908/– இணக்கக் கட்டணமும் வசூலிப்பு.
- ✶ குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 49 வழக்குகளில் ரூ.4,72,000/– அபராதம்.
- ✶ 56 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்பு.
- ✶ தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 326 சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்ற 11,376 மாணவர்களில் 3,474 மாணவர்கள் முறையான பள்ளிகளில் சேர்ப்பு.
- ✶ மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மேற்படிப்புக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.250/–லிருந்து ரூ.500/–ஆக உயர்வு.
- ✶ 17 அமைப்பு சாரா நல வாரியங்களில் 9.28 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.218 கோடி நல உதவித் தொகை.
- ✶ நலத்திட்ட உதவிகளை மின்னணுப் பரிமாற்றம் மூலம் வங்கிகள் வழியாக வழங்கும் முன்னோடித் திட்டம் 6 மாவட்டங்களில் அமலாக்கம்.
- ✶ வயது முதிர்ந்த அமைப்புசாரா தொழிலாளர் நல உறுப்பினர்களின் மாத ஓய்வூதியம் ரூ.500/– லிருந்து ரூ.1,000/– ஆக உயர்வு.
- ✶ தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய 60 உறுப்பினர்களுக்கு ரூ.12.75 இலட்சம் செலவில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி.

- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய 430 உறுப்பினர்களுக்கு ரூ.11.44 இலட்சம் செலவில் திறன்மிகு பயிற்சி.
- ரூ.32.04 இலட்சம் செலவில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்.
- தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 4,534 தொழிற்சாலைகள் பதிவு 1,40,070 தொழிலாளர்கள் பயன்.
- 5,262 தொழிற்சாலைகளில் 86,996 தொழிலாளர்கள் பணிநிரந்தரம்.
- தொழிற்சாலைகளில் பாதுகாப்பினை மேம்படுத்தவும் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் நிருவாகத்தினர் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், மாநில பாதுகாப்பு விருதுகளுக்கான முதல் பரிசின் வெள்ளி கேடயத்தின் மதிப்பினை 2011ஆம் ஆண்டிலிருந்து ரூ.2,500/– லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தியும் இரண்டாம் பரிசின் வெள்ளி கேடயத்தின் மதிப்பினை ரூ.1,500/–லிருந்து ரூ.4,000/– ஆக உயர்வு.
- உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் எண்ணிக்கை 24 லிருந்து 43 ஆக உயர்வு.
- கட்டடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் 2,116 புதிய கட்டுமான நிறுவனங்கள் பதிவு.
- பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துகளைத் தடுத்திட சிவகாசியில் பாதுகாப்பு பயிற்சி மையம் மூலமாகப் பயிற்சி வகுப்புகள்.
- பட்டாசுத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த நடமாடும் கண்காணிப்புக் குழு.
- 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 23,38,780 மாணவ மாணவியர், பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பிற்குப் பதிவு.
- 2008, 2009, 2010 ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு வழங்கிய சிறப்பு வேலைவாய்ப்புப் புதுப்பித்தல் சலுகை மூலம் 1,27,695 பயன்.
- வேலைவாய்ப்பகங்கள் மூலம் 33,500 நபர்களுக்கு வேலை.
- 15 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ.22.50 கோடி.
- ரூ.4.01 கோடியில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் இரண்டு சீருடை, ஒரு இணைக் காலணிகள் வழங்குதல்.
- சிறந்த பயிற்சியாளர்களுக்கான (Best Trainee) பரிசுத் தொகை ரூ.5,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்வு.

- ✶ சிறந்த பயிற்றுநர்களுக்கான (Best Trainer) பரிசுத் தொகை ரூ.1,000/–லிருந்து ரூ. 10,000/– ஆக உயர்வு.

- ✶ கடலூர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.2.30 கோடியில் கட்டடம்.

- ✶ தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிரப்பப்படாமல் உள்ள 50% இடங்கள் ஏழை இளைஞர்களுக்கு ஒதுக்கீடு. ரூ. 14.85 கோடி செலவில் மாநகராட்சி, நகராட்சி எல்லையிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய கட்டணம் ரூ.12,000 மற்றும் கிராம தொழிற் பயிற்சி நிலையக் கட்டணம் ரூ.10,000 ஆகியவற்றை அரசே ஏற்பு. 18,000 மாணவர்கள் பயன்.

- ✶ ரூ.8 கோடி செலவில் வேலைவாய்ப்பற்ற 54,396 இளைஞர்களுக்குப் பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகள்.

- ✶ ரூ.6.36 கோடி செலவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி, ரூ. 3.47 கோடியில் விலையில்லா மடிக்கணினி.

- ✶ ரூ.13 கோடி செலவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.100–லிருந்து ரூ.500/–ஆக உயர்வு.

- ✶ ரூ.15 கோடி செலவில் 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் புனரமைப்பு.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் முதன் முதலாக தமிழ் மொழியில் வினாத்தாள்.

- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்குத் திறன் அடையாள அட்டை (Smart Card).

- ✶ தக்கலை, மணவாளக்குறிச்சி, வெப்போடை, பள்ளிகொண்டா, அன்னூர், சர்கார், சாமக்குளம் ஆகிய இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்.

- ✶ 26 புதிய பகுதிகள் அருகில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைப்பு. 41,294 தொழிலாளிகள் பயன்.

- ✶ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் 14இல் சித்தமருத்துவப் பிரிவுகள், 8இல் ஆயுர்வேதப் பிரிவுகள், 3இல் ஓமியோபதிப் பிரிவுகள், 5இல் யோகாசனப் பிரிவுகள் மற்றும் 2இல் யுனானிப் பிரிவுகளும் துவக்கம்.

**2013 – 2014ஆம் ஆண்டுத் திட்டம்**

- ✶ மாநிலத் திறன் மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு ரூ.75 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்வு.

❖ ❖ ❖



பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# நலிவுற்ற மக்களைப் பொலிவூட்டும் அக்கறை

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

திரு. **ஏ.முஹம்மத்ஜான்** அவர்கள்





- வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து 69 சதவிகித இடஒதுக்கீட்டினை செயல்படுத்தி சமூகநீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.
- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் ஆண்டுப் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீடு ரூ.4 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்வு.

- 51 தமிழாசிரியர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கம். கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் ஒன்பது பள்ளிகளின் நிலை உயர்வு.

- பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவர்களுக்காக மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 15 பள்ளிகளில் ஆங்கில வழி பாலர் வகுப்புகள் (LKG) தொடக்கம்.

- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் ரூ.10,000/– ரூ.7,000/– மற்றும் ரூ.5,000/– என உயர்வு.

- கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாகத் தேர்ச்சி பெறச்செய்யும் உயர்நிலை/மேனிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தலா ரூ.10,000/– பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் புதிய திட்டம்.

- ரூ.1.27 கோடி செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள், குடிநீர் வசதிகள், ஆய்வக உபகரணங்கள், கழிப்பறைகள், கூடுதல் வகுப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள்.

- வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 84 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

- விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கான மாத உணவுப்படி 20.09.2011 முதல் 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்வு.

- ரூ.50 கோடி செலவில் சிறுபான்மையின மாணவியருக்கு 6 விடுதிகள் உட்பட மொத்தம் 56 புதிய விடுதிகள்.

- விடுதிகளில் கூடுதலாக 10 விழுக்காடு மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம்.

- 500 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் புதிய சமையல் பாத்திரங்கள்.

- 50 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.6.25 இலட்சம் செலவில் புதிதாக அரைவை இயந்திரங்கள்.

- பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயின்று அரசுப் பொதுத் தேர்வில்

மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகைகள் ரூ.10,000/–, ரூ.7,000/–, ரூ.5,000/– என உயர்வு.

- அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆக உயர்வு.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பல்வகைச் செலவினம் முறையே ரூ.25/– மற்றும் ரூ.50/– என்பதிலிருந்து ரூ.50/– மற்றும் ரூ.75/– ஆக உயர்வு.

- 70 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.28 இலட்சம் செலவில் எரிவாயு இணைப்புகள் (LPG).

- 2 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு ரூ.57 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள்.

- 2 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.12 இலட்சம் செலவில் பாதுகாப்புச் சுவர் அமைப்பு.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் தலா 5 இடங்கள் அளிப்பு.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.3,000/–, ரூ.2,000/–, ரூ.1,000/– முறையே ரூ.6,000/–, ரூ.4,000/–, ரூ.2,000/– என இரண்டு மடங்காக உயர்வு.

- 2011–2012ஆம் ஆண்டில் அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 4,38,749 மாணவ, மாணவியருக்கு ரூ.112.08 கோடி செலவிலும், 2012–2013ஆம் ஆண்டில் 4,50,882 மாணவ, மாணவியருக்கு ரூ.149.75 கோடி செலவிலும் விலையில்லா மிதிவண்டிகள்.

- 2011–2012ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 5,23,985 மாணவ, மாணவியருக்கு ரூ.115.71 கோடி செலவிலும், 2012–2013ஆம் ஆண்டில் 5,51,922 மாணவ, மாணவியருக்கு ரூ.134.49 கோடி செலவிலும் கல்வி உதவித் தொகை.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புளைச் சார்ந்த 6,179 பயனாளிகளுக்கு ரூ.2.31 கோடி செலவில் விலையில்லா தையல் இயந்திரங்கள்; 4,295 பயனாளிகளுக்கு ரூ.1.70 கோடி செலவில் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் நிருவாக மானியம் 45 இலட்சம் ரூபாயிலிருந்து, ஒரு கோடி ரூபாயாக உயர்வு.

- உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2,400–லிருந்து 2,600 ஆக உயர்த்தப்பட்டு 750 ரூபாயாக உள்ள மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்வு.

- வக்ஃப் வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவையிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக் கொடைகளை வழங்க ஒருமுறை மானியமாக மூன்று கோடி ரூபாய்.

- தமிழ் மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டுவரும் ஆண்டு நிருவாக மானியம் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்வு.

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 41,541 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பயனாளிகளுக்கு ரூ.89.28 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 16,942 சிறுபான்மையினத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு ரூ.41.92 கோடி கடன்.

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேர்வுக்கட்டணம் மட்டுமே முழுமையாக ஒப்பளிக்கப்பட்ட நிலையில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படுவதை போன்று 75,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்பு உதவித்திட்டத்தின் கீழ் கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்களும் 2012–2013 ஆம் ஆண்டு முதல் ரூ.16.44 கோடி செலவில் முழுமையாக வழங்கப்படுகிறது.

- 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் 1,000 இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு (500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்கள்) அவர்கள் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம் வரை வருடத்திற்கு ஒரு நபருக்கு ரூ.3,000/– வீதம் பரிசுகள் வழங்கும் முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம் என்ற புதிய திட்டம் 2012–2013ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் 12 ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்லூரிகளிலும் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு முறையே தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா விருதுத்தொகை ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி ரூ.1.86 கோடி செலவில் 1,865 மாணவ, மாணவியருக்கு 2012–2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

- கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 6,550 மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த ஒரு நபருக்கு ரூ.2,800/– வீதம் ரூ.1.83 கோடி செலவில் பயிற்சி.

- விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் மற்றும் காப்பாளினிகள் கல்வியாண்டின் இடையில் ஓய்வு பெறும்போது பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படுவது போன்று கல்வி ஆண்டு இறுதி வரை பணியுரியும் வகையில் பணி நீட்டிப்பு.

- 2012–2013ஆம் ஆண்டு முதல் திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தில் (Skill Development Training) ரூ.80.74 இலட்சம் செலவில் பல்வேறு பயிற்சிகளைப் பெறும் 4,370 பயனாளிகளுக்கு ரூ.400/– மாதாந்திரப் பயிற்சிக்கால உதவித்தொகை வழங்கல்.

- 45 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் துப்புரவாளர் பணியிடங்கள் அனுமதி.

- மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியருக்கு ரூ.2.47 கோடி செலவில் சிறப்பு வழிகாட்டிகள் (Special Guide).

- 633 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.31.65 இலட்சம் செலவில் மின் அரைப்பான்கள்.

- 2012–2013ஆம் நிதியாண்டில் 50 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள்.

- 2012–2013ஆம் நிதியாண்டில் 10 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.37.74 இலட்சம் செலவில் பாதுகாப்பு சுவர்கள் அமைப்பு.
- 105 கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 8,465 மாணவ, மாணவியருக்கு ரூ.3.71 கோடி செலவில் கட்டில்கள் வழங்கல்.
- ரூ.1.20 கோடி செலவில் மசூதிகள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பு.
- பள்ளி வாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக புதிதாக “வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி” உருவாக்கப்பட்டு ரூ.3 கோடி நிதி.
- மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகை 1:1 என்பதற்கு பதிலாக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் உயர்த்தப்பட்டு 2012–2013ஆம் ஆண்டில் ரூ.55.36 இலட்சம் வழங்கல்.
- கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்ள நிதி உதவி வழங்கும் திட்டம் 2011–2012இல் உருவாக்கப்பட்டது. 2012–2013ஆம் ஆண்டில் வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு ஜெருசலேம் பயண குழு நியமித்து இதற்கு 2012–2013இல் ரூ.1 கோடி ஒதுக்கீட்டில் 95 பயணிகள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டனர்.

**2013–2014 ஆண்டுத் திட்டங்கள்**

- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கு ரூ.764.43 கோடி நிதி ஒதுக்கீடு.
- ரூ.173.98 கோடி செலவில் 5.07 இலட்சம் ஏழை மாணவர்கள் கல்வியைத் தொடர தேர்வுக் கட்டணம், கல்விக் கட்டணம் மற்றும் சிறப்பு கட்டணங்கள் உள்ளிட்ட கல்வி உதவித் தொகை.
- ரூ.139.42 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.
- சிறுபான்மையினர் நலனுக்கு ரூ.60.39 கோடி ஒதுக்கீடு.

**இலங்கைத் தமிழர் நலன்**

- தமிழக மக்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டங்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

- விலையில்லா அரிசி, மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 19,750 குடும்பங்கள் பயன்.
- அனைத்துக் குடிமைப் பொருட்களும் வழங்கல்.
- இலங்கைத் தமிழ் முகாம்களில் வசிப்போருக்கும் முகாம்களுக்கு வெளியே வசிப்போருக்கும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நீட்டிப்பு.
- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/– எனவும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/– எனவும், ஒவ்வொரு குழந்தையின் மீதும் 20 வருடங்களுக்கு வைப்பீடு என்ற திட்டத்தின் கீழ் ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் 31 பெண் குழந்தைகளின் பேரில் நிதி வைப்பீடு.
- சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மணமாகாத முதிர் கன்னிகள் 4,416 பேருக்கு தலா ரூ.1,000/– மாத ஓய்வூதியம்.
- முகாம்களில் உள்ள தையல் கலை தெரிந்த 2,123 பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரங்கள்.
- +2 பயிலும் 226 மாணவ / மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள்.
- அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி, சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, புத்தகப்பை, கணித உபகரணங்கள் பெட்டிகள் (Geometric box).
- முகாம்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்.
- ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறியியல் கல்வி பயின்று வரும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் உள்ள முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவ, மாணவியர் 18 பேருக்கு கல்விக் கட்டணச் சலுகை.
- பொதுப்பிரிவின் கீழ் தகுதியின் அடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பில், இளநிலை மற்றும் முதுநிலை கல்வியைத் தொடர இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அனுமதி.
- முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியர், நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.இ/ பி.டெக்/ எம்.பி.ஏ/ எம்.சி.ஏ/ எம்.டெக்/ எம்.ஆர்க் பட்டப்படிப்புகளுக்குத் தகுதியின் அடிப்படையில் பொதுப்பிரிவின்கீழ் அனுமதி.

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினருக்கான 2,532 நல விடுதிகளில் தலா 5 இடங்கள் கூடுதலாக உருவாக்கி முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவ, மாணவியருக்கு ஒதுக்கீடு.

- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவி ரூ. 6,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்வு.

- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் பட்டம் / பட்டயம் பயின்ற பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம். இதரப்பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம்.

- முகாம்வாழ் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு மாதாந்திரப் பணக்கொடை குடும்பத் தலைவருக்கு ரூ.400/–லிருந்து ரூ.1,000/–ஆகவும், பெரியவர்களுக்கு ரூ.288/–லிருந்து ரூ.750/–ஆகவும், 12 வயதுக்குட்பட்ட சிறியவர்களுக்கு ரூ.180/–லிருந்து ரூ.400/–ஆகவும் உயர்வு. பயன்பெறுவோர் 84,345 நபர்கள்.

- முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இறந்தவர்களுக்கான ஈமக்கிரியை நிதி உதவி ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்வு.

- முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து, முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் விபத்து காரணமாக இறப்பவருக்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூ.15,000/– லிருந்து ரூ.25,000/–ஆக உயர்வு.

- இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்படும் 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,000/– வீதம் ரூ.41.60 இலட்சம் சுழல் நிதி.

- இலங்கைத் தமிழர் முகாம்களில் ரூ.29.33 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் மேம்பாடு. மேலும், ரூ.25 கோடி செலவில் 2,500 புது வீடுகள் கட்டும்பணி துவக்கம்.

- முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர வருடாந்திர கல்வி உதவித் தொகை ரூ. 850/–லிருந்து ரூ.4,700/– வரை பாடப்பிரிவுத் தன்மைக்கு ஏற்ப வழங்கல்.

- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டத்தில் 183 பெண்களுக்கு உதவி.

- முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குத் தையல் இயந்திரம் அளிப்பதற்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி அளிப்பதற்கும் வயது வரம்பு வருமானச் சான்றிதழ் தருவதிலிருந்து விலக்கு.

❖ ❖ ❖



இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை

# ஆலயங்கள் தோறும் அறம் வளர்க்கும் அரும்பணிகள்

மாண்புமிகு இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்
திரு. **எம்.எஸ்.எம். ஆனந்தன்** அவர்கள்





- ✶ 88 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 998.52 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரிலிருந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம்.
- ✶ 62 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 393.32 ஏக்கர் நிலங்களின் பதிவுகள் கணினி சிட்டாவில் தனியார் பெயரில் இருந்து திருக்கோயில் பெயருக்கு மாற்றம்.
- ✶ அன்னதானத் திட்டம் 156 திருக்கோயில்களில் விரிவாக்கம் செய்யப்பட்டு 518 திருக்கோயில்களில் செயலாக்கம். ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்.
- ✶ முதுமலை, தெப்பக்காட்டில் 37 யானைகளுக்கும், கோயம்புத்தூர் மாவட்டம் தேக்கம்பட்டியில் 34 யானைகளுக்கும் 48 நாட்கள் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்.



- ✶ ஒரு கால பூஜைத்திட்டத்தின் திட்ட முதலீடு நிதி கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆக உயர்வு. ரூ.90 கோடியில் 11,931 திருக்கோயில்கள் பயன்.
- ✶ மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் வசதிக்காக, 8 திருக்கோயில்களில் 11 மின்கல மகிழுந்துகள்.
- ✶ 3,105 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு.
- ✶ 137 தொன்மையான திருக்கோயில்கள் புனரமைப்பு.
- ✶ 78 திருத்தேர்கள் சீரமைக்கப்பட்டு தேரோட்டம்.
- ✶ 292 திருக்குளங்கள் ரூ. 41.61 இலட்சம் செலவில் சீரமைப்பு. 2012 – 2013ஆம் ஆண்டில் 164 திருக்குளங்கள் சீரமைப்பு. 32 திருத்தேர்கள் சீரமைப்பு.
- ✶ துறை நிலையிலான ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் 648 பயனாளிகளுக்கு ரூ.1.52 கோடி ரூபாய் ஒய்வூதியம்.

- ✶ அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர்கள், திவ்யப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.750/–லிருந்து ரூ.1,000/–மாக உயர்வு. இதன் மூலம் 483 நபர்கள் பயன்.
- ✶ இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் 560 அலுவலர்களுக்கு 2.12 கோடி செலவில் மடிக்கணினி.
- ✶ 96 திருக்கோயில்கள் திருப்பணிக்கு ரூ. 6 கோடி நிதி உதவி.
- ✶ இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு மனித நேயப் பயிற்சி. 1,459 அர்ச்சகர்கள் மற்றும் 1,900 திருக்கோயில் பணியாளர்கள் பயன் .
- ✶ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/–மாக உயர்வு. 624 திருக்கோயில்களுக்கு ரூ. 3.15 கோடி செலவில் திருப்பணிகள்.
- ✶ இந்து சமயத்தைச் சேர்ந்த சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய 1,006 இணைகளுக்கு திருவேற்காட்டில் திருமணம் .
- ✶ மாவட்டந்தோறும் பாவை விழா. கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள். ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகளில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளில் சிறந்த மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் .
- ✶ 256 கிராமப்புரத் திருக்கோயில் திருப்பணிகளுக்கு ரூ. 1.28 கோடி நிதி உதவி .
- ✶ மானசரோவர் புனித பயணத்திற்கு ஒரு நபருக்கு ரூ.40,000, முக்திநாத் புனித பயணத்திற்கு ஒரு நபருக்கு ரூ.10,000 மானியம்.
- ✶ ரூ.43 கோடி செலவில் ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி.

❖ ❖ ❖

**உன்னத சமுதாயப் பணி**

கோயில்கள் பொது மக்களின் சொத்துக்கள் ஜாதி, சமய வேறுபாடின்றி அனைவரும் கூடுகின்ற சமுதாயக் கூடங்கள், கல்விச்சாலைகள் என்கின்ற உணர்வோடு பார்க்கும் போது ஆலயத் திருப்பணி உண்மையிலேயே ஒரு உன்னத சமுதாயப் பணி என்பதில் சந்தேகம் இல்லை.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



# வளம் சேர்க்கும் வருவாய்த்துறை

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

திரு. **தோப்பு என்.டி.வெங்கடாச்சலம்** அவர்கள்





★ முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருந்து அதில் நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்; 72.41 இலட்சம் அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ திட்ட உறுப்பினர்களுக்கு பண்பேறிய சிவப்பு நிற அடையாள அட்டை மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சாம்பல் நிற அடையாள அட்டைகள் வழங்க 2,93,86,519 நபர்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். ரூ.1,509 கோடி செலவில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 13.48 இலட்சம் பயனாளிகளுக்கு நிதியுதவி.

- ★ நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் 240.98 ஏக்கர் உபரி நிலம் 368 நபர்களுக்கு ஒப்படைப்பு.

- ★ இலால்குடி, மன்னார்குடி, திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நான்கு புதிய வருவாய் நீதிமன்றங்கள் தோற்றுவிப்பு.

- ★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.7.2011 அன்று ஸ்ரீரங்கம் வட்டத்தில் துவக்கி வைக்கப்பட்ட விரைவு பட்டா மாற்றம் என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 28.63 இலட்சம் பட்டா மாறுதல்கள்.

- ★ ஆக்கிரமணங்களை ஒருமுறை வரன்முறைப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 25,995 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.

- ★ வழமையான பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 2.28 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.

- ★ நில அபகரிப்புப் புகார் தொடர்பான வழக்குகளில் நில அபகரிப்புத் தடுப்புத் தனிப்பிரிவிலிருந்து பெறப்பட்ட 880 மனுக்களில், 847 மனுக்கள் குறித்த விவரங்கள் உரிய நிலப்பதிவுருக்களுடன் சரிபார்க்கப்பட்டு மீளத் தனிப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- ★ 49,934 ஏக்கர் அரசு நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட 2,86,176 ஆக்கிரமிப்புகள் அகற்றம்.

- ★ அரசு நிலங்களை வேலியிட்டுப் பாதுகாக்கும் பொருட்டு 2011–2012ஆம் நிதியாண்டில் ரூ.94.89 இலட்சம் நிதி கோயம்புத்தூர், திருநெல்வேலி, விழுப்புரம், பெரம்பலூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களுக்குப் பிரித்து வழங்கல். இதன்மூலம் ரூ.38.35 கோடி மதிப்புள்ள 108.13 ஏக்கர் அரசு நிலங்களில் செய்யப்பட்டிருந்த ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டு, வேலியிட்டுப் பாதுகாப்பு. 2012–2013ஆம் நிதியாண்டில் ரூ. 80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ரூ.70.52 இலட்சம், சென்னை, திருவள்ளூர், மதுரை, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களுக்குப் பிரித்து வழங்கல்.

- ★ ரூ.22.48 கோடி செலவில் 7,787 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வழங்கப்பட்டு பயிற்சி வழங்கல்.

- ★ 2012–2013ஆம் நிதியாண்டில் அன்னூர், ஆலத்தூர், திருபுவனம், கிணத்துக்கடவு, கலசபாக்கம், திருப்போரூர், சின்னசேலம், கொல்லிமலை மற்றும் அந்தியூர் ஆகிய 9 புதிய வட்டங்கள் உருவாக்கம்.

★ பள்ளிகள் வாயிலாக 10ஆம் வகுப்பு படித்த 8.80 இலட்சம் மாணவ, மாணவியருக்கு சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

★ 3,334 கிராம நிருவாக அலுவலர்கள், 978 உதவியாளர்கள் மற்றும் 643 கிராம உதவியாளர்கள் பணி நியமனம்.

★ கருணை அடிப்படையில் 72 இளநிலை உதவியாளர்கள், 4 தட்டச்சர்கள் மற்றும் 206 கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

★ இயற்கை இடரினால் ஏற்பட்ட மனித உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.2,50,000/–ஆக மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியும் சேர்த்து உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மாடு ஒன்றுக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– ஆகவும் ஆடு ஒன்றுக்கு ரூ.1,000/– லிருந்து ரூ.2,000/– ஆகவும் உயர்வு.

★ தீ விபத்தில் முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.2,000/– லிருந்து ரூ.5,000/– ஆகவும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.1,000/– லிருந்து ரூ.2,500/– ஆகவும் நிவாரண உதவித்தொகை உயர்வு.

★ காவிரி டெல்டா மாவட்டங்களில் இயற்கைச் சீற்றத்தின் காரணமாக 50%க்கு அதிகமாக நெற்பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் இடுபொருள் மானியம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000/– லிருந்து ரூ.5,000/– ஆக உயர்வு.

★ தமிழகத்தில் நிலவும் வறட்சியால் டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பயிர் இழப்பை அளவிட்டு விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய நிவாரணம் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய நிவாரண பணிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் தலைமையில் இதர அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களை கொண்டு ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது.

★ 50%க்கு அதிகமாக நெற்பயிர் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதி விவசாயிகளின் 3,61,000 ஏக்கர் நிலத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் நிவாரணத் தொகை வழங்க 541.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.524.25 கோடி 3,52,613 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கல்.

★ வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களுக்கு ரூ.1,517 கோடி நிவாரணம்.

★ வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா அல்லாத மாவட்டங்களில் ரூ.1,754.86 கோடி நிவாரணம்.

★ ரூ.183 கோடி செலவில் வறட்சி பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர் வசதி.

★ அம்மா திட்டத்தின் கீழ் 4.50 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டன.

★ மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் 41,14,423 பொருட்கள் விநியோகம்.

★ சென்னை தவிர இதர மாவட்டங்களில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள 100 நாட்கள் பணிவரம்பு 150 நாட்களாக உயர்வு.

★ டெல்டா மாவட்டங்களில் கால்நடை தீவன பற்றாக்குறையை போக்கும் வகையிலும் பண்ணைக் குட்டைகளில் உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கெனவும் மொத்தம் ரூ.47.85 கோடி மதிப்பீட்டில் பணிகள்.

★ டெல்டா பகுதிகளில் ரூ.37.25 கோடி மதிப்பில் குடிநீர்த் திட்டங்கள்.

★ வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்ப செலுத்துவதில் உள்ள சிரமத்தினை கருத்தில் கொண்டு அவர்கள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்களை மாற்றியமைக்க உத்தரவு.

★ தமிழகம் முழுவதும் விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரித் தள்ளுபடி.

★ ரூ.75 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், திருப்பூர், கடலூர் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்.

★ 13.39 இலட்சம் உட்பிரிவு பட்டாக்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ கணினி வழி நிலஆவணப் பதிவுருக்கள் வழங்கிய வகையில் ரூ.7.81 கோடி வசூல்.

★ பொதுமக்களுக்கு நிலவரைபட நகல்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் ரூ.78.57 இலட்சம் வசூல்.

★ கருணை அடிப்படையில் 143 பேருக்கு பணி நியமனங்கள்.

★ நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு அளவை செய்யவும் மற்றும் கணினி வரைபடங்கள் தயாரிக்கவும், வெளி ஆதார முறை மூலமும் சி–ஸ்டார் வாயிலாக தொழில்நுட்பத் தகுதி பெற்ற நபர்கள் நியமனம்.

★ நத்தம் நிலஅளவைப் பணியின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்திலும், திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டத்திலும் 2.32 ச.கி.மீ. நிலஅளவைப் பணி நிறைவு.

★ நகர அளவைப் பணியின் கீழ் சென்னை மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளில் 3.13 ச.கி.மீ. நிலஅளவைப் பணி நிறைவு.

★ நவீன நிலஅளவைக் கருவிகளான ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகிய உபகரணங்களைக் கொண்டு புதியதாக தரம் உயர்த்தப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் நகர நிலஅளவைப் பணி மேற்கொள்வதற்காக திருவள்ளூர், வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 8 மாவட்டங்களில் நவீன நிலஅளவைத் திட்ட அலகுகள்.

★ சென்னை மாவட்டத்தில் உள்ள 55 கிராமங்களில் 38 கிராம ஆவணங்கள் கணினிமயம்.

★ நவீன நிலஅளவை மற்றும் வரைபடங்கள் தயாரிப்பதில் 75 நபர்களுக்கு ஐதராபாத்தில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் சர்வேயிங் அண்ட் மேப்பிங் பயிற்சி நிலையத்தில் நவீனப் பயிற்சி.

★ நவீன நிலஅளவைக் கருவிகளான ஜி.ப்பி.எஸ். (Global Positioning System) மற்றும் டோட்டல் ஸ்டேஷன் ஆகியவற்றைக் கையாள்வதற்கு சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள சி—ஸ்டார் பயிற்சி நிலையத்தில் 360 பேருக்கு அடிப்படை பயிற்சி, 135 நபர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி.

★ ★ ★

**ஊரகப் பொருளாதார மேம்பாடு**

ஊரகப் பகுதிகளில் வேளாண் சார்ந்த சிறுதொழில்கள் தொடங்கப்பட வேண்டும்; அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களின் மதிப்பு கூட்டப்பட வேண்டும்; ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

— மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் துறை

# கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு, கிராமிய சிறு தொழிலுக்கு ஊக்கம்

மாண்புமிகு கதர் மற்றும்
கிராமத் தொழில் வாரியத்துறை அமைச்சர்
திரு. **டி.பி.பூனாட்சி** அவர்கள்



- அரசு வாரியத்தின் 719 பணியாளர்களை மிகைப் பணியாளர்களாகப் பணிப்புரிந்தவர்களில் 468 பணியாளர்கள் பிறதுறைகளில் மறு பணியமர்வு செய்யப்பட்டனர். இவர்கள் வாரியத்தில் பணிபுரிந்த காலத்தைப் புதிய துறையில் கணக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.
- 01.10.2008 முதல் 31.03.2012 முடிய பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள பணியாளர்களுக்கு நிலுவை ஓய்வூதிய பயன்கள் வழங்க ரூ.36.86 கோடி அரசால் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கதர் நெசவாளர்கள், சாயமிடுபவர்கள், நூற்பாளர்களுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை மானியமாக 2012 – 2013ஆம் நிதியாண்டு முதல் மாநில அரசும் கதர் ஆணையத்தைப் போன்று, ஆண்டு முழுவதும் கதர் உற்பத்தி மீது 20 விழுக்காடு நிதியுதவியாக வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது.
- இதனில் 5 விழுக்காட்டுத் தொகை நூற்பாளர் / நெசவாளர்களுக்கு, ஊக்கத் தொகை / கருணைத் தொகையாகக் கதர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், பட்டுத் தொழிலைப் பொறுத்தவரை இழைப்பவர் / சாயமிடுபவர் / நெசவாளர்களுக்கு வழங்கிடவும், மீதமுள்ள 15 விழுக்காட்டு தொகையினைக் கதர் விற்பனையை அதிகரிக்க விற்பனை கழிவாக நுகர்வோர்களுக்கு வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பட்டுப் பணி மாற்றகத்தில் பட்டு நூல் விற்பனை செய்தமைக்கான தொகையை நூற்பாலர்களுக்கு உடனே வழங்குவதை உறுதி செய்திட மின்னணு வர்த்தக சேவை (ECS).

**2013–2014ஆம் ஆண்டின் திட்டங்கள்**

**கதர் மற்றும் பாலிவஸ்திரா நெசவாளர்களுக்கு கூலி உயர்த்தி வழங்குதல்**

- கதர் மற்றும் பாலிவஸ்திரா ரகங்கள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு 30 விழுக்காடு கூலி உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன் மூலம் வாரியத்தில் உள்ள 672 நெசவாளர்கள் பயன் பெறுவர். இதற்கான ஓராண்டு கூடுதல் செலவு ரூ. 13.50 இலட்சம் ஆகும்.

**பட்டு நெசவாளர்களுக்கு கூலி உயர்த்தி வழங்குதல்**

❖ பட்டு ரகங்கள் தயாரிக்கும் நெசவாளர்களுக்கு 50 விழுக்காடு கூலி உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன் மூலம் வாரியத்தில் உள்ள 360 நெசவாளர்கள் பயன் பெறுவர். இதற்கான ஓராண்டு கூடுதல் செலவு ரூ. 22.50 இலட்சம் ஆகும்.

**ஊரக பகுதிகளில் உள்ள கிராமிய நூற்பு நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள் அமைத்து தருதல்**

❖ ஊரக பகுதிகளில் உள்ள கிராமிய நூற்பு நிலையங்களில் பணியாற்றும் 770 மகளிர் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிராமிய நூற்பு நிலையம் ஒன்றுக்கு ரூ. 30,000/– வீதம் 30 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு அடிப்படை வசதிகள் அமைத்து தர திட்டமிடப்பட்டுள்ளது.

**கைமுறை காகித அலகுகளை நவீனப்படுத்துதல்**

❖ கைமுறை காகித அலகுகளை நவீனப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்டம் கோவனூரில் மாறி வரும் கால சூழ்நிலைக்கேற்ப உட்புறம் துணியுடன் கூடிய காகித உறைகள் தயாரிக்கும் புதிய இயந்திரம் ரூ. 18 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

❖ மேலும் பிடாகம் கைமுறை காகித அலகிலுள்ள பீட்டர் (BEATER) இயந்திரம் ரூ. 4இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும். இதன் மூலம் 20 நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**தோல் தொழில் உற்பத்தியினை மேம்படுத்துதல்**

❖ தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள 100 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கதர் ஆணையத்தின் நிதி உதவியுடன் சுருதி (SFURTI) திட்டத்தின் கீழ் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் அம்பத்தூர் காலணி அலகின் உற்பத்தி திறனை மேம்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**சென்னை பிரதான கதர் அங்காடியினை குளிர்சாதன வசதியுடன் நவீனப்படுத்துதல்**

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகரித்திட, தமிழகம் முழுவதும் உள்ள கதர் கிராமத்தொழில் பொருட்களை மக்கள் அனைவரும் ஒரே இடத்தில் வாங்கிட, அதன் மூலம் விற்பனையினை அதிகரித்திட, சென்னை பிரதான கதர் அங்காடியினை முழுமையான குளிர்சாதன வசதியுடன் ரூ. 1 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

**சோப்புத் தொழிலை தரம் உயர்த்துதல்**

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சோப்புத்தொழிலின் தரம் உயர்த்தி, உற்பத்தியினை அதிகரித்திட முதற்கட்டமாக செவ்வாப்பேட்டை, பெருமாள்மலை மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் உள்ள வாரிய சோப்பு அலகுகளுக்கு ரூ. 11 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

* * *



பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை

# இணையில்லாத் திட்டங்களால் கல்வி மேம்பாடு! இளைஞர் முன்னேற்றம்!

மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர்
டாக்டர். **வைகைச்செல்வன்** அவர்கள்





- ✶ பள்ளிக் கல்வித்துறைக்கு இவ்வாண்டு மிக உயர்ந்த ஒதுக்கீடாக ரூ.16,965.30 கோடி நிதி ஒதுக்கம்.
- ✶ 51, 757 ஆசிரியர்களும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் நியமனம்.

- ✶ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் 47 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.165 கோடியில் இரண்டு இணை சீருடைகள் 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் ஏற்கெனவே வழங்கிவந்த இரண்டு இணை சீருடை நான்கு இணை சீருடையாக உயர்வு. 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டை மற்றும் மேல்சட்டையும், மாணவிகளுக்கு சல்வார் கமீஸ் சீருடையும் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.330 கோடியில் 47 இலட்சம் மாணவர்கள் பயன்.
- ✶ கல்வி கற்பதற்கான உரிமை குறியீடுகளை எய்துவதில் மிக சிறப்பாக கருதப்படும் மாநிலம்.
- ✶ குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதற்கான விதிகளை முதன் முதலாக அரசிதழில் வெளியிட்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.
- ✶ ரூ.194.20 கோடி செலவில் அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்த 6.30 இலட்சம் மாணவ/ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள்.
- ✶ 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் 14.02 இலட்சம் மாணவ, மாணவியருக்கு பள்ளிக்கு எளிதாகச் செல்லும் பொருட்டுப் பேருந்துப் பயணச் சலுகை அட்டை.
- ✶ இடைநிலை மற்றும் மேல்நிலை மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்கும் வண்ணம் அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10, 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1,500/–ம், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2,000/–ம் சிறப்பு ஊக்கத் தொகையாக அவர்களின் பெயரில் முதலீடு. ரூ.667 கோடி சிறப்பு ஊக்கத் தொகையாக 41 இலட்சம் மாணவர்களின் பெயரில் முதலீடு.
- ✶ பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் 10.65 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.1,637 கோடியில் விலையில்லா மடிக்கணினி.
- ✶ 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.
- ✶ ரூ. 464.96 கோடியில் அனைவருக்கும் கல்வித் திட்டம், ரூ. 1,066.51 கோடியில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், நபார்டு வங்கி ரூ.152.73 கோடி செலவிலும், மொத்தம் ரூ.1,684.20 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.
- ✶ ரூ.103 கோடி செலவில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் 81 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள். ரூ.105 கோடியில் 79 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா ஒரு இணை காலணிகள்.
- ✶ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 92 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.128 கோடி செலவில் விலையில்லா புத்தகப் பைகள்.
- ✶ 1 மற்றும் 2ஆம் வகுப்பு பயிலும் 12 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.2 கோடி செலவில் விலையில்லா கிரயான்ஸ் (Crayons).
- ✶ 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 20 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ. 3.20 கோடி செலவில் விலையில்லா வண்ணப் பென்சில்கள்.

- ★ 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் 46 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.17 கோடி செலவில் விலையில்லா கணித உபகரணப்பெட்டிகள். 46 இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.14 கோடியில் விலையில்லா புவியியல் வரைபடப் புத்தகங்கள்.

- ★ மாணவர்களின் திறனை மேம்படுத்தும் விதமாக 7 முதல் 17 வயது வரையுள்ள 86 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.40 இலட்சம் செலவில் சதுரங்க விளையாட்டு அறிமுகம்.

- ★ ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை அறிமுகம். இதன்மூலம் குழந்தைகளின் பகுத்தறியும் திறன், சிந்தனைக்குத் தீர்வு காணும் திறன், வாழ்க்கைத் திறன் போன்றவை மேம்படுத்தப்பட்டு அவர்கள் பள்ளிப்படிப்பை முடித்தபின் வெளியுலக வாழ்க்கையில் எதிர்கொள்ள நேரிடும் இடர்பாடுகளை சிறப்பாக எதிர் கொள்வதற்கான திறனை மாணவர்கள் பெறுவார்கள். 2013–2014ஆம் கல்வியாண்டிலிருந்து ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை அறிமுகம்.

- ★ 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை முப்பருவ முறை அறிமுகம். 2013–2014ஆம் கல்வியாண்டு முதல் 9ஆம் வகுப்பிற்கு நீட்டிப்பு.

- ★ 1 முதல் எட்டாம் வகுப்பு வரை முப்பருவ முறையில் மாணவர்கள் குறிப்பிட்ட பருவத்திற்குரிய பாடப் புத்தகங்களை மட்டுமே எடுத்துச் செல்வதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைத்துள்ளது மற்றும் உளவியல் ரீதியான அச்சத்தைப் போக்கியுள்ளது.

- ★ தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு மற்றும் முப்பருவமுறை ஆகிய இருதிட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் ரூ.48 கோடியில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் தரம் உயர்வு.

- ★ பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் ரூ.1,684.20 கோடியில் தலைமை ஆசிரியர் அறைகள், புதிய பள்ளிகளுக்கு வகுப்பறைகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் வகுப்பறைகள், குடிநீர்வசதி, சமையற்கூடங்கள், சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறை வசதி, சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளான மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம், மாற்றியமைக்கப்பட்ட கழிப்பறை வசதி ஆகியவை தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ★ அனைத்துப் பள்ளிகளிலும் இவ்வாண்டின் இறுதிக்குள் 100 % பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி.

- ★ கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்னோடித்திட்டமாகத் துவக்கி வைக்கப்பட்டு ஸ்ரீரங்கம் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படும். இத்தகவல் முறைமையின் கீழ் பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் போன்றோரது ஒருங்கிணைந்த முழுமையான

தகவல்கள் இதற்கான வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். இது தகவல் தொடர்பு மற்றும் புள்ளி விவரங்களின் தரத்தை உறுதியாக உயர்த்தும். அத்துடன் புள்ளி விவரங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் உதவிபுரிகிறது.

✶ பள்ளிகளில் தகவல் தொழில்நுட்பம் – 4,340 அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதி 'உருவாக்கி, உரிமையாக்கி, இயக்கி மாற்றுதல்' (Built, Own operate and Transfer – BOOT Model) மாதிரியின் அடிப்படையில் ரூ.277.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

✶ திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருச்செந்துரை, அயிலாப்பேட்டை, எட்டரை, சோமரசம்பேட்டை, மற்றும் இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் அறிவுசார் வகுப்புகள் ஏற்படுத்த தலா ரூ.25 இலட்சம் வீதம் 1.25 கோடி ரூபாய் ஒப்பளிப்பு.

✶ நடுவண் அரசுத் திட்டத்தின் கீழ், நாமக்கல், தேனி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் அறிவுசார் பள்ளிகள் துவக்க தலா 25 இலட்சம் ரூபாய் வீதம் 1.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

✶ குழந்தைகள் பள்ளிவிட்டு வேறு பள்ளி இடம் பெயர்தல், பள்ளியிலிருந்து இடைநிறுத்தல் குறித்த விவரம், உடல் நலம் மற்றும் இதரத் தகவலையும் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்துவமான அடையாள அட்டை அவசியம். அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும். இந்த அட்டையில் குழந்தை பற்றிய அனைத்து விவரங்களும் இடம்பெறும். மேலும், அத்தகவல்கள் மையக் கணினியில் சேமித்து வைக்கப்படும். இந்தத் தகவல் மாணவர்களுக்கான வசதிகளைத் தேவைக்கேற்ப அரசிடம் கோரிப் பெற்றுத்தர வழிவகுக்கும். இந்த அட்டை பள்ளிக் கல்வியின் கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமை வலைத்தளத்தோடு ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5.9.2012 அன்று முன்னோடித்திட்டமாக துவக்கி வைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விரைவில் விரிவுபடுத்தப்படும்.

✶ மாணவர்கள் நலன் கருதி மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுக்குப் புகைப்படம் இருபரிமாணப்பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் இரகசியக் குறியீடுகளுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் போலி மதிப்பெண் சான்றிதழ்கள் முற்றிலும் தடுக்கப்படும்.

✶ சிறப்புத் துணைத் தேர்வுக்கு மூன்று பாடங்கள் மட்டுமே எழுத அனுமதிக்கப்பட்ட நிலையினை மாற்றி மார்ச் / ஏப்ரல் பருவத் தேர்வுகளில் தோல்வியுற்ற அனைத்துப் பாடங்களையும் ஜூன் / ஜூலை பருவ சிறப்புத் துணைத் தேர்வு எழுதுவதற்கு 2012ஆம் ஆண்டுமுதல் அனுமதி.

✶ அரசுப் பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் சலுகைகளைப் பள்ளிச் செல்லாக் குழந்தைகளுக்காக நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் அதாவது பள்ளிக்கு வெளியே மாற்றுப் பள்ளிகளிலும், உண்டு உறைவிடப் பள்ளிகளிலும், தேசிய குழந்தைத் தொழிலாளர்

நலத் திட்ட நலப் பள்ளிகளிலும், கஸ்தூர்பாய் காந்தி பாலிகா வித்யாலயாக்களிலும், சமூக நலப் பாதுகாப்புக்கான சிறார் பள்ளிகள், கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இசைப் பள்ளி போன்ற பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் வழங்க ஆணை.

* 6 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் பள்ளி செல்லாதோர் அனைவரும் பள்ளிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக சரியான போக்குவரத்து வசதி இல்லாத எட்டு மாவட்ட மலைப் பிரதேசங்களிலுள்ள 4,857 இடைநின்ற / பள்ளிச் செல்லாக் குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று வர ரூ.1.45 கோடி செலவில் ஒரு குழந்தைக்கு ஆண்டிற்கு ரூ.3,000 வீதம், பள்ளிசென்றுவரப் போக்குவரத்து வசதி.

* தமிழகத்தில் எழுத்தறிவு பெறாத வயது வந்தோருக்கு முதன்முறையாக கணினி வழியாக கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு 40 மையங்கள் “மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்” ஆகத் தரம் உயர்வு. இத்திட்டம் அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.2.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1 கோடி மதிப்பில் கணினி சார்ந்த கல்வி உபகரணங்கள்.

* பின் தங்கிய ஒன்றியங்களிலுள்ள மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் கல்வியில் பின் தங்கிய 26 ஒன்றியங்களில் தலா ஒரு மாதிரிப் பள்ளி வீதம் 26 மாதிரி பள்ளிகள் ரூ.78 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு ஆணை. இப்பள்ளிகள் அமைக்கப்படுவதினால் 14,560 மாணவ, மாணவிகள் தரமான கல்வி பெறுவதற்கு வழிவகை.

* ரூ.3 கோடி செலவில் தமிழகத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு சுற்றுப்புறச் சூழல், குடும்ப சூழ்நிலை காரணமாக ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக வளர் இளம் பருவத்தில் ஏற்படும் மாற்றங்களால் மனக்கலக்கம், மனச்சோர்வு, மன அழுத்தம், மனக் குழப்பம் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உளவியல் ஆலோசனைகள் (Psychological counselling) வழங்கும் வகையில் 10 நடமாடும் ஆலோசனை மையங்கள்.

* ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் வகையில் நடப்புக் கல்வியாண்டு முதல் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளில் ஆங்கில வழி இணைப் பிரிவுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் வீதம் 320 பள்ளிகளில் 22,400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடக்கம்.

* பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பதினோரு இயக்ககங்களை உள்ளடக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அதிநவீன தொழில்நுட்ப அறிவுசார் பூங்கா.

* ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் மாநிலத்தின் மையப் பகுதியான திருச்சியில் ரூ.3 கோடி செலவில் ஆசிரியர் இல்லம் புதிதாகக் கட்ட ஆணை. தென் மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்த இல்லம் பயனுள்ளதாக அமையும்.

* சென்னை சைதாப்பேட்டையில் தற்போது செயல்பட்டு வரும் 20 ஆண்டுகள் பழமையான ஆசிரியர் இல்லம் நவீன முறையில் புதுப்பிக்க ஆணை. சென்னைக்கு வரும் ஆசிரியர்களின்

எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ. 3 கோடியில் கூடுதலாகப் புதிய கட்டடம்.

- ✶ மாவட்ட நூலக அலுவலகங்களில் பணியாற்றும் 32 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் தங்களது பணியைச் செம்மையாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் செய்வதற்கு ஏதுவாக ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் மடிக்கணினி வழங்க ஆணை.

- ✶ ஆசிரியர்களுக்கு சேரவேண்டிய பண, பணி மற்றும் இதரப் பலன்களை உரிய நேரத்தில் பெற அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க அனைத்துக் கல்வி அலுவலகங்களிலும் சிறப்பு ஆசிரியர் குறைதீர்க்கும் முகாம் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை.

- ✶ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளும் மாணவ/ மாணவியர் நலன் கருதி பள்ளி வளாகம், அதன் சுற்றுப்புறம் மற்றும் வாகனங்கள் பராமரித்தல் தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் பள்ளிக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி, மின்சாரம், இருக்கைகள், முதலுதவி, மாணவர்கள் கூடும் நேரங்களில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள், பள்ளி வாகனங்களை இயக்குவது குறித்து பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- ✶ மாணவ / மாணவியரின் தாய்மார்கள், வாரத்தில் ஒரு நாள், ஐந்து பேர் கொண்ட குழுவாகச் சென்று பள்ளியில் உள்ள அனைத்து வசதிகளையும் பள்ளி வேலை நாட்களில் பார்வையிட அனுமதித்தல் வேண்டும். இவர்களின் பார்வைக் குறிப்புகள் ஒரு பார்வைப் புத்தகத்தில் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டும். தாய்மார்களைத் தேர்வு செய்யும் போது பல்வேறு வகுப்புகளில் இருந்தும் பிரதிநிதிகள் உள்ளடக்கியவாறு அமைதல் வேண்டும் என்றும் ஆணை.

- ✶ தனியார்பள்ளிகளில்நலிவடைந்தமற்றும்வாய்ப்புமறுக்கப்பட்டபிரிவினரின்குழந்தைகளுக்கு 25% இடஒதுக்கீடு.

- ✶ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009' நிறைவேற்ற தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011.

**2013 – 2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

- ✶ பள்ளி மாணவ மாணவியருக்கு புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், இலவச பேருந்து பயண சலுகை, சீருடைத் தொகுப்புகள், புத்தகப் பைகள், காலணிகள், வடிவியல் பெட்டிகள், வரைப்பட புத்தகங்கள், மிதிவண்டிகள் மற்றும் சானிடரி நேப்கின்கள் வழங்கிட ரூ.1,299.74 கோடி ஒதுக்கீடு.

- ✶ ரூ. 381 கோடி மதிப்பீட்டில் 10, முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 24.76 இலட்சம் மாணவ மாணவியருக்கு சிறப்பு ஊக்கத் தொகை.

- ✶ ரூ.4.12 கோடி செலவில் மலைப் பகுதிகளில் படிக்கும் 10.3 இலட்சம் மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடைகள்.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்**



சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்திட இரண்டு கோடி ரூபாய் வழங்குதல்

- ✶ ஒலிம்பிக்கில் தங்கம் வெல்பவர்க்குப் பரிசுத்தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்வு.
- ✶ ஆசிய,காமன்வெல்த்,விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வெல்பவருக்கு ரூ.50 இலட்சம், வெள்ளி வெல்ப வருக்கு ரூ.30 இலட்சம், வெண்கலம் வெல்பவருக்கு ரூ.20 இலட்சமாக ஊக்கத் தொகை உயர்வு.
- ✶ ரூ.1.70 கோடி செலவில் சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம்.
- ✶ அனைத்து விளையாட்டுகளிலும் பயிற்சி அளித்திட கூடுதலாக 79 பயிற்றுநர்கள் நியமனம்.
- ✶ ஜார்கண்டில் நடைபெற்ற 34ஆவது தேசியப் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ரூ.30 இலட்சம் ஊக்கத் தொகை.
- ✶ 5ஆவது முறையாக உலக சதுரங்கச் சேம்பியனாக வெற்றி பெற்ற திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு ரூ.2 கோடி ரொக்கப் பரிசு.
- ✶ சர்வதேச ஸ்குவாஷ் போட்டிகள் சென்னையில் நடத்த ஆண்டுதோறும் ரூ.1 கோடி.
- ✶ ரூ.15 இலட்சம் செலவில் முதன் முறையாக மாநில அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்.
- ✶ சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ரூ.3 கோடி மதிப்பில் இருப்பிடம், உணவருந்துமிடம் மற்றும் சமையலறை வசதிகள்.
- ✶ திருச்சிராப்பள்ளியில் செயற்கை இழைத் தடகள ஓடுபாதைக்கு ரூ.6 கோடி ஒதுக்கீடு.

- ரூ.6 கோடி மதிப்பில் மதுரையில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம்.
- நலிந்த நிலையில் உள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம் ரூ.3,000 ஆக உயர்வு.
- ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற வாய்ப்புள்ள தலைசிறந்த 5 விளையாட்டு வீரர்களுக்குத் தலா ரூ.25 இலட்சம் உதவித்தொகை.
- தினப்பயிற்சி திட்டம் மற்றும் வார இறுதி பயிற்சித் திட்டத்திற்கு ரூ.1.50 கோடி ஒதுக்கீடு.
- 10 மாவட்டங்களில் ரூ.15 கோடியில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள்.
- ரூ.4.15 கோடி மதிப்பில் 5 மாவட்டங்களில் புதியதாக விளையாட்டு விடுதிகள்.
- 2012–2013இல் தேசிய அளவிலான பைக்கா போட்டிகளில் தமிழக அணி ஒட்டுமொத்த சாம்பியன் பிரிவில் இரண்டாம் இடம்.
- உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தில் 3,240 திறமைமிக்க விளையாட்டு வீரர்களுக்குத் தலா ரூ.6,000 ஊக்க உதவித் தொகை.
- நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தலா ரூ.2 கோடி மதிப்பில் நீச்சல் குளங்கள்.
- ரூ.5.52 கோடி செலவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.
- சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் ரூ.2 கோடி நிதி உதவியுடன் நடத்தப்பட்டன.
- உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ.70 இலட்சம் ஒதுக்கீடு.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமம் ஒன்றில் கிராம விளையாட்டு மையம் அமைக்க ரூ.62 இலட்சம் ஒதுக்கீடு.
- தேசிய மாணவர் படையின் கப்பற்படை அலகு மிதவைப் பயணப் போட்டிக்கான நிதி ஒப்பளிப்பு ரூ.2 இலட்சமாக உயர்வு.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிற்றுண்டிப் படி ஒரு மாணவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.3/–லிருந்து ரூ.10/– ஆக உயர்வு.
- குடியரசு தின முகாம்களுக்கான செலவினம் ரூ.50 இலட்சமாக உயர்வு.
- குடியரசு தின விழா முகாமில் பங்கேற்கும் தேசிய மாணவர் படை மாணவ, மாணவியருக்கு ரொக்க ஊக்க தொகை ரூ.5,80,400/–ஆக உயர்வு.



★ தேசிய மாணவர் படை மாணவ, மாணவியருக்கான ஊக்கத்தொகை 100 முதுநிலை மாணவ, மாணவியருக்கு ரூ.200/– வீதம் 10 மாதங்களுக்கும், 100 இளநிலை மாணவ, மாணவியருக்கு ரூ.100/– வீதம் 10 மாதங்களுக்கும் உயர்வு.

## தமிழ் வளர்ச்சி

★ தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களை உலகச் செவ்வியல் மொழிகளில் கொண்டு செல்லும் நோக்கில் முதல் கட்டமாக திருக்குறளையும், பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை சீன மொழியிலும், அரபு மொழியிலும் மொழிபெயர்த்து வெளியிட ரூ.3.20 கோடி.

★ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.1,000/–த்தை 1.12.2011 முதல் ரூ.2,000/– ஆக உயர்வு. மேலும், 1.4.2012 முதல் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 13 பேருக்குப் புதியதாக ஓய்வூதியம் வழங்க ஆணை.

★ சொல் வங்கி திட்டத்திற்கென ரூ.45 ஆயிரம் நிதி ஒதுக்கீடு.

★ தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என இருந்த விளம்புகைச் சட்டம் நீக்கப்பட்டு, சித்திரைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு தினம் என அறிவிக்கப்பட்டது.



- ✶ சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு விழா 13.4.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழர்களுக்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அமைப்புகள் / சங்கங்களை ஊக்கப்படுத்தி பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை கொண்ட 'தமிழ்த்தாய் விருது' (2012ஆம் ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்டது) மதுரை தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது.

- ✶ கபிலர், உ.வே.சா. ஆகியோரின் பெயர்களில் புதியதாக 2012ஆம் ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்ட விருதுகள் (விருதுத் தொகை ரூ.1.00 இலட்சம், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை) முறையே முனைவர் அ. அ. மணவாளன் அவர்களுக்கும், புலவர் செ. இராசு அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

- ✶ 1,330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்த 36 மாணவ, மாணவியருக்கு குறள் பரிசாக ஒட்டுமொத்தத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதம் வழங்க மொத்தம் ரூ.3,60,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்டு, சித்திரை முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று (13–4–2012) வழங்கப்பட்டன.

- ✶ சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு (13.4.2012) விழாவில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்குரிய போட்டியில் வெற்றி பெற்ற நூலாசிரியர் மற்றும் பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகையாக மொத்தம் ரூ.11,15,000/– வழங்கப்பட்டது.

- ✶ பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு வழங்கப்பட்டு வந்த முதல் பரிசுத் தொகை ரூ.10,000/– ஆகவும், இரண்டாம்

பரிசுத் தொகை ரூ.7,000/– ஆகவும், மாநில அளவிலான போட்டிகளுக்கு முதல் பரிசுத் தொகை ரூ.15,000/– ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ.12,000/– ஆகவும், மூன்றாம் பரிசுத் தொகை ரூ.10,000/– ஆகவும் 2011–2012ஆம் ஆண்டு முதல் உயர்வு.

- ✶ மாணவத் தமிழ் மன்றப் பரிசுகள் பன்மடங்கு உயர்வு.
- ✶ நிதியுதவி பெற நூலாசிரியர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/–ஆகவும் உயர்வு.
- ✶ திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா 16.1.2012 அன்று நடத்தப்பெற்றது. இவ்விழாவில் திருவள்ளுவர் விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருதுகள் தமிழறிஞர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.
- ✶ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் மாத ஒய்வூதியத்தைப் பெற ஆண்டு வருமான வரப்பு ரூ.12,000/–என இருந்ததை ரூ.24,000/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.
- ✶ இளம்எழுத்தாளர்களுக்குகவிதை,கட்டுரைப்பயிற்சியும்,பேச்சாளர்களுக்குப்பேச்சுப்பயிற்சி அளித்திடும் வகையில் ‘இளம்தமிழர் இலக்கியப் பட்டறை’ நடத்திட ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வீதம் வழங்கப்படும் என 2012–2013ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு முதல் பயிற்சிப் பட்டறை திருச்சிராப்பள்ளி திருவரங்கத்தில் 22.9.2012 முதல் 28.9.2012 வரை நடத்தி முடிக்கப்பட்டது.
- ✶ தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சித் தமிழ் நூல் அடிப்படையில் ஆட்சிமொழி வரலாறு, ஆட்சிமொழிச் சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு ரூ.9.30 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- ✶ ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மாவட்டம் தோறும் நடத்திட வழங்கப்பட்டு வந்த செலவினத் தொகை ரூ.5,000/–த்தை ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.
- ✶ தமிழகத்தில் கிடைக்கப்பெறாத, வெளிநாட்டு நூலகங்களில் உள்ள, அரிய தமிழ் நூல்களை மின்எண்மத்தில் பதிவு செய்து நூலாக வெளியிடும் பணி ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✶ தமிழ் வளர்ச்சித் துறைக்கென ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் வலைத்தளம் உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.2.2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- ✶ வெளிநாட்டு மொழியியல் அறிஞர்களால் எழுதப்பட்ட தமிழ் மொழியின் வரலாறு மற்றும் சிறப்புகள் குறித்த கருத்துகள் அனைத்தையும் திரட்டி தமிழிலும், ஆங்கிலத்திலும் நூலாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✶ தமிழ் நீதி நூல்களில் மாணவர் பருவத்திற்குத் தேவையான கருத்துகளை இன்றைய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வல்லுநர் குழுவை அமைத்து ‘அறநெறிக்

கருவூலம்’ எனும் கையேடு தொகுத்து உருவாக்க ரூ. 1 கோடி மதிப்பீட்டில் அச்சிடப்பட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✶ தமிழ் மொழியின் பெருமையைப் பறைசாற்றும் சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியில் உள்ள புகழ் வாய்ந்த பொன்மொழிகளை இலக்கியம் வாரியாகத் தொகுத்து ‘பொன்மொழிக் களஞ்சியம்’ ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✶ சிறந்த நூல்களுக்குப் பரிசு திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இருந்து வந்த 31 வகைப்பாடுகளுடன் மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் என்ற இரு புதிய வகைப்பாடுகள் சேர்க்கப்படும் என்ற அறிவிப்பின்படி, தற்போது இரு வகைப்பாடுகளைச் சேர்த்து மொத்தம் 33 வகைப்பாடுகளில் 2011ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்குரிய போட்டி அறிவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

✶ உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவோடு செயல்பட ரூ.100 கோடி.

✶ புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு இரண்டு ஈப்புகள் வாங்க ரூ.10,50,000/– நிதி ஒதுக்கீடு செய்தும், இரண்டு ஓட்டுநர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணை.

✶ தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தொகுப்பு நல்கையாக ரூ. 8,72,38,000/–மும், ஆறாவது ஊதியக் குழு பரிந்துரையின்படி வழங்க வேண்டிய ஊதிய நிலுவைத் தொகை ரூ.1,51,34,000/–மும், பிற திட்டங்களுக்காக ரூ.2,86,44,000/–மும், கணினி வழித் தமிழ் வளர்ச்சித் திட்டத்திற்கென ரூ.12,00,000/–மும் வழங்கப்பட்டுள்ளது.

✶ தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுக்க ரூ.12 கோடி.

✶ உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு தொகுப்பு நல்கை ரூ.3.23 கோடி.

✶ உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நிருவாகக் கட்டடம் ரூ.3.60 கோடி.

✶ குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவியாக ரூ. 5,34,350/– வழங்கப்பட்டுள்ளது.

✶ திருவனந்தபுரம், பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளிக்கு ரூ.5,00,000/– வழங்கப் பட்டுள்ளது.

✶ தமிழாய்வுப் பணிகளுக்கென, ஆசியவியல் நிறுவனத்திற்கு ரூ.27,07,000/– வழங்கப் பட்டுள்ளது.

✶ தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கணினிவழித் தமிழ் வளர்ச்சி திட்டத்தில் செயல்பட, தமிழ் இணையக்கல்விக் கழகத்திற்கு ரூ. 12,00,000/– வழங்கப்பட்டுள்ளது.

✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா 15.1.2013 அன்று தேனி மாவட்டம் கீழணை




முகாமில் (லோயர் கேம்ப்) கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் நினைவு மணிமண்டபம் திறப்பு விழாவுடன் சேர்த்து நடத்தப்பட்டது. இவ்விழாவில் திருவள்ளுவர் விருது கலைமாமணி முனைவர் ந. முருகன் (சேயோன்) அவர்களுக்கும் பாரதியார் விருது பாரதிக் காவலர் கு. இராமமூர்த்தி அவர்களுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் விருது முனைவர் சோ.ந. கந்தசாமி அவர்களுக்கும் திரு.வி.க.விருது முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார் அவர்களுக்கும் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் நா. இராசகோபாலன் (மலையமான்) அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

- ✶ தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா அவர்களின் பிறந்த நாளன்று (19.2.2013) அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் மலர்தூவி சிறப்புச் செய்யப்பட்டது.

- ✶ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உலக மகளிர் தினத்தன்று (8.3.2013) சென்னை காமராசர் சாலையில் உள்ள ஔவையார் சிலைக்கு மலர்தூவி சிறப்புச் செய்யப்பட்டது.

- ✶ 2013ஆம் ஆண்டு சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டை சிறப்பு செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிதாக கம்பர் விருது, சொல்லின் செல்வர் ஆகிய இரண்டு விருதுகளை அறிவித்தார். இதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.04.2013 அன்று தமிழ்த்தாய் விருது தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கும், கபிலர் விருதை கவிஞர் முத்துலிங்கம் அவர்களுக்கும், உவேசா விருதை திரு ம.வே. பசுபதி அவர்களுக்கும், கம்பர் விருதை முனைவர் பால. இரமணி அவர்களுக்கும் சொல்லின் செல்வர் விருதை முனைவர் ம.லோகநாயகி அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

- ✶ தமிழ்ப் பல்கலைக்கழக உட்கட்டமைப்புக்கு ரூ.2 கோடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

★ நாட்டுடைமை நூல்கள் 1,470—ஐ வலைத்தளம் ஏற்றல் (இணையக் கல்விக் கழகம்)

★ 2011ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு சிறந்த நூல் பரிசுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற சிறந்த நூலாசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ.30,000/— வீதமும் மற்றும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/— வீதமும் 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த மாணவச் செல்வங்கள் 36 பேருக்கு குறள் பரிசு ரூ.10,000/— வீதமும் மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி/கல்லூரி மாணவர்கள் 18 பேருக்கு முறையே முதல் பரிசு ரூ.15,000/—, இரண்டாம் பரிசு ரூ.12,000/— மூன்றாம் பரிசு ரூ.10,000/—வீதம் எனும் வகையில் (சித்திரைத் திங்களில்) 25.4.2013 அன்று பரிசுகள் வழங்கப்பட்டன.

**கலை பண்பாட்டுத் துறை**

★ ரூ.96 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் ‘‘மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்.’’

★ ரூ.92.92 இலட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் மாவட்ட ‘‘மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்.’’

★ மதுரை மாவட்டத்தில் அரசு இசைப்பள்ளி, மண்டலக் ‘‘கலை பண்பாட்டு வளாகம்’’ ரூ.87.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது.

★ திருநெல்வேலியில் மாவட்ட ‘‘மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்’’ரூ. 1.00 கோடி செலவினத்தில் கட்டப்பட்டு வருகிறது.

★ திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு ரூ.61.60 இலட்சம் செலவில் குடில்கள், வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது.

★ சேலம் மாவட்ட ‘‘மண்டலக் கலை பண்பாட்டு வளாகம்’’ ரூ.1.00 கோடி செலவில் செலவில் கட்டடப்பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

★ கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு மலுமிச்சம்பட்டி கிராமத்தில் கட்டடம் கட்ட ரூ.90.91 இலட்சம் செலவில் கட்டடப்பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

★ அரசு இசைக் கல்லூரிகள், கவின் கலைக் கல்லூரிகள், கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு ரூ.39.65 இலட்சம் செலவில் தளவாடப் பொருட்கள் வாங்கப்பட்டன.

★ தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான கல்வி உதவித்தொகை ரூ.250/— லிருந்து ரூ.500/— ஆக உயர்வு.

★ மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு முதன்முறையாக வழங்கப்பட்ட மாத கல்வி உதவித் தொகை ரூ.200/— என்பதை இரு மடங்காக உயர்த்தி மாதம் ரூ.400/— என்ற அளவில் 2012—2013 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

★ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தற்காலிக உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

★ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் திட்டம் மற்றும் நிருவாகப் பணிகளுக்கென அரசின் நல்கையாக ரூ.73.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற விதிக்கப்பட்டிருந்த நலிந்த கலைஞர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/– என்பது ரூ.60,000/– ஆக உயர்வு.

★ நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் கூடுதலாக 1,000 நலிந்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, மாதந்தோறும் ரூ.1,000/– வீதம் நிதி உதவி வழங்க ரூ.45 இலட்சம் ஒப்பளிப்பு.

★ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பாக திறம் படைத்த இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் அரசின் நல்கையாக ஒரு இலட்சம் ரூபாய் நிதி.

★ சென்னை, அருங்காட்சியத்தில், அருங்காட்சியகங்கள் துறை மற்றும் கலை பண்பாட்டுத் துறை ஆகிய துறைகள் இணைந்து ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் நமது பாரம்பரியமிக்க கலைகளை மாணவர்களுக்கு வெளிப்படுத்த ‘பண்பாட்டுப் பலகணி’ என்ற சிறப்பு கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

★ தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கலை விழாக்கள் நடத்தவும், கலை நிகழ்ச்சிகளை ஆவணமாக்குவதற்கான சாதனங்கள் கொள்முதல் செய்யவும் ரூ.33.40 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டது.

★ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாக கோடைமுகாம் நடத்திட ரூ.3 இலட்சம் நிதி.

★ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாக மாரிக்கால மற்றும் கோடைக்கால முகாம் நடத்திட ரூ.3.60 இலட்சம் நிதி.

★ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாக கோடைக்கால முகாமில் மாநில அளவிலான கைவினைக் கலைப் பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.1.20 இலட்சம் நிதி.

★ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் சார்பாகத் திறமை உள்ளோரைத் தேர்வு செய்வதற்காக இளந்திரு தெரிவுப் போட்டிகள் நடத்திட ரூ.97,193/– நிதி.

★ தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களில் வறிய நிலையில் பயிற்சி பெறும் பரதநாட்டிய சிறார்களுக்கு இலவசமாக பரதநாட்டியம் அரங்கேற்றம் நடத்திட ரூ.50,000/–நிதி.

★ சென்னையில் உள்ள தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் கலையாசிரியர்களுக்கு ரூ.1,500/– லிருந்து, ரூ.2,000/– ஆகவும், மாவட்டங்களில் ரூ.300/– லிருந்து ரூ.1,500/– ஆகவும், ஊரக மையங்களில் ரூ.150/– லிருந்து ரூ.1,000/– ஆகவும் தொகுப்பூதியம் உயர்வு.

★ கலை பண்பாட்டுத் துறை சார்பாக மாவட்டங்கள் தோறும் கலைவிழாக்கள் மற்றும் கலைப் பயிற்சிகள் நடத்த ரூ.12 இலட்சம் நிதி.

★ ஒரிசா மாநிலம் புவனேஸ்வர் மாவட்டம் உதயகிரியில் “தேசிய கரவேளா” திருவிழா நடத்த ரூ.75,000/– நிதி.

★ தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் திட்டம் மற்றும் நிருவாகப் பணிகளுக்கென அரசின் நல்கையாக ரூ.35 இலட்சம் நிதி.

★ தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ள கலைஞர்களுக்கு ரூ.19,27,050/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.

★ சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மாணவியரின் விடுதியைப் புனரமைக்க ரூ.8.95 இலட்சம் நிதி.

★ சென்னை, எழும்பூர் ஆல்சு சாலையில் உள்ள தமிழ் வளர்ச்சி வளாகத்தின் இரண்டாம் தளத்தில் செயல்பட்டு வரும் கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டிட ரூ. 66.50 இலட்சம் செலவில் நிதி.

## தொல்லியல் துறை

★ “தமிழ்நாடு புராதன ஆணையச் சட்டம்” இயற்றல்.

★ இந்திய மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலே இயக்கம்.

★ அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் உள் கட்டமைப்பு வசதிகள் பொதுப் பணித் துறையின் மூலம் ஏற்படுத்த ரூ.1.19 கோடி ஒதுக்கீடு.

★ பொது மக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள சுவடிகளை எல்காட் நிறுவனம் மூலம் நுண்படம் மூலம் பாதுகாக்க ரூ.3.54 கோடி.

★ தொல்லியல் துறையின் வரலாற்றுச் சின்னங்கள், இடங்கள் மற்றும் தொல்பொருட்களைப் பற்றிய விவரங்களை சுற்றுலாத் துறையின் மாவட்ட வரைப்படங்கள் மற்றும் கையேடுகளில் சேர்க்க நடவடிக்கை.

★ கல்வெட்டு நூல்கள் –2, மாணவர்கள் ஆய்வேடுகள் –4, அகழாய்வு அறிக்கைகள் –5, அகழ்வைப்பக கையேடுகள் – 4, கல்வெட்டு காலாண்டு இதழ்கள் –4 என மொத்தம் 19 நூல்கள் வெளியீடு.

★ ரூ. 54.55 இலட்சம் செலவில் வரலாற்றுச் சின்னங்களில் இடிதாங்கிகள் அமைத்தல், தீயணைப்புக் கருவிகள் பொருத்துதல், துறையின் வலைத்தளத்தில் கண்ணுறுக் காட்சிச் சுற்றுலா அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளல்.

★ காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம் ஆலம்பரை கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பல வகை பானை ஓடுகள், பீரங்கிக் குண்டுகள், செம்பு மற்றும் இரும்புக் கசடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக ஓர் கண்காட்சி பொது மக்களின் பார்வைக்கு நடத்தப்பட்டது.

- ✶ துறையின் செயல்திறன் மேம்படுத்துதல் (Autonomous Status) மற்றும் அவசரத் தேவைக்கான நிதி ஆதாரம் (Discretionary Fund)–ன் கீழ், இத்துறையின் சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களின் பாதுகாப்பு, பராமரிப்புப் பணிகள், கல்வி சார் மற்றும் தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ள (கண்காட்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், தொல்லியல் விழாக்கள் கொண்டாடுதல்) ஆகிய நிகழ்வுகளுக்காக ஆண்டுதோறும் ரூ.10 இலட்சத்திற்கு நிரந்தர ஆணை.

- ✶ ரூ. 61.50 இலட்சம் செலவில் துறை வெளியீடுகள், அரிய நிழற்பட கருப்பு வெள்ளை எதிர்மறைப் படங்கள் (Negatives) மற்றும் நிழற்பட மெல்லிய சதுரத் தட்டு (Slides)–களை எண்ணிலக்க நவீன நிழற்படங்களாக மாற்றுதல், கல்வெட்டு நூல்களை வெளியிடுதல், துறை நூலகத்தின் தரத்தை மேம்படுத்துதல், பாதுகாப்புப் பணிகளுக்காக வேதியியல் பொருட்கள் வாங்குதல், நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார் பகுதியில் ஆழ்கடல் அகழ்வைப்பகக் கட்டடம் கட்டுதல் போன்ற பணிகள் நிறைவேற்றம்.

- ✶ சிவகங்கை, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் தொடர்ந்து கல்வெட்டுகள் மைப்படி எடுக்கும் பணி மேற்கொள்ளல்.

- ✶ பழம் பொருட்கள் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் 682 கலைப் பொருட்கள் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கல்.

- ✶ அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் தமிழ் ஓலைச் சுவடிகளின் 23,107 பக்கங்கள் டிஜிட்டல் படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

- ✶ 47 புராதனக் கோயில் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூ. 15.94 கோடி ஒப்பளிக்கப்பட்டு, சின்னங்கள் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அருங்காட்சியகங்கள் துறை**

- ✶ ரூ.95 இலட்சம் செலவில் 88.5 மீட்டர் நீளத்திற்கு அருங்காட்சியகப் பாரம்பரியச் சுற்றுச் சுவரின் மீதமுள்ள பகுதியைக் கட்டும் பணி மேற்கொள்ளல்.

- ✶ ரூ.36 இலட்சம் செலவில் கருங்கல் தளம் அமைத்துப் பார்வையாளர்களுக்குரிய வசதிகளுடன் சிறுவர் அருங்காட்சியகத்தினைப் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளல்.

- ✶ ரூ. 2.83 இலட்சம் செலவில் மரச்சிற்ப வேலைப்பாட்டுக் காட்சிக்கூடத்தைத் திருத்தியமைக்கும் பணி நிறைவேற்றம்.

- ✶ ரூ.35 இலட்சம் செலவில் பாறை மற்றும் குகைக் காட்சிக் கூடத்தைப் புத்தாக்கம் செய்யும் பணி நிறைவு.

- ✶ ரூ.9.4 இலட்சம் செலவில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒரு நடைபழகு சிற்பப் பூங்கா .

- ரூ.43 இலட்சம் செலவில் காட்சிப்படுத்தப்பட்ட பின் எஞ்சிய அமராவதிச் சிற்பங்களைப் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தும் பணி.

- ரூ. 57.5 இலட்சம் செலவில் நூற்றாண்டுக் கண்காட்சிக் கூடத்தைப் புத்தாக்கம் செய்திடும் பணி.

- ரூ.19 இலட்சம் செலவில் சென்னை அரசு அருங்காட்சியக உள் சாலைகளை அமைக்கும் பணி நிறைவு.

- ரூ.1 கோடி செலவில் சென்னை அரசு அருங்காட்சியகக் காட்சிக்கூடங்களுக்கென 5 மின் உற்பத்தி ஆக்கிகள் அமைத்திடும் பணி நிறைவேற்றல்.

- ரூ. 11 இலட்சம் செலவில் அருங்காட்சியகச் செயற்பாட்டு மையத்தைப் புத்தாக்கம் செய்யும் பணி நிறைவேற்றல்.

- ரூ.16 இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான கூடுதல் கழிப்பறைப் பகுதிகள் கட்டும் பணி.

- தமிழ்நாட்டுக் கலைகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ‘பண்பாட்டுப் பலகணி’ என்ற கலாச்சார நிகழ்ச்சியை கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து சென்னை அருங்காட்சியகத்தில் 26.07.2012 முதல் வாரந்தோறும் தொடர்ந்து நடத்தப்பட்டது.

- புது முயற்சியாக கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள், பண்பாட்டுப் பலகணி (பண்பாட்டின் சன்னல்) இவ்வாரக் காட்சிப் பொருள், மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்குக் கலைப் பயிற்சி அளித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் ஜுன் 2011 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகின்றன. புதிய திட்டங்களாக ‘நேர் நிகர் அருங்காட்சியகம்’, ‘சென்னை அருங்காட்சியகத்தைப் பற்றிய தகவல்கள் தரும் திரைப்படம்’ உயிருள்ள விலங்கினம் போன்ற டைனோசர் மாதிரி அமைப்பு ஆகிய பணிகள் துவக்கம்.

- ரூ. 2 கோடி செலவில் அரியலூரில் புதிய தொல்படிவப் பொருள் அருங்காட்சியம்.

❖ ❖ ❖

**பேறு பெற்றோர் ஆசிரியப் பெருமக்கள்**

ஒரு பிறப்பில், தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல் அவரது ஏழு பிறப்பிலும் உதவிடும் என்று வள்ளுவப் பெருமான் போற்றிப் புகழும் கல்விச் செல்வத்தைப் போதிக்கும் பேற்றினைப் பெற்றவர்கள் ஆசிரியப் பெருமக்கள் ஆவார்கள்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

# மக்கள் நல்வாழ்வில் மாறாத அக்கறை

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறைஅமைச்சர்
திரு. **கே.சி.வீரமணி** அவர்கள்






**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

- ரூ.624 கோடி செலவில் 2.96 இலட்சம் நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகள், 23 முக்கியப் பரிசோதனைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சைகளுக்கு அனுமதி.
- ஆண்டு வருமானம் ரூ.72,000/– மற்றும் அதற்குக் குறைவாக உள்ள அனைத்துக் குடும்பங்களும், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களும் பயனடையலாம்.
- குடும்பத்தில் மாற்றுத் திறனாளியாக ஒருவர் இருந்தால், அக்குடும்பம் வருமான வரம்பு இன்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தில் பயனாளியாகச் சேர்க்க ஆணை.

- ✶ 120 அரசு மருத்துவமனைகள் உள்பட 817 மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க அங்கீகாரம்.
- ✶ 1,07,18,708 நபர்களுக்கு இத்திட்டத்திற்கான அடையாள அட்டை.
- ✶ ரூ. 647.71 கோடி செலவில் 2,95,794 நபர்களுக்கு சிகிச்சை.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்**

- ✶ ரூ.1,153.58 கோடி செலவில் 13.25 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.12,000 வீதம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி.

**கிராமப்புரப் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்களை அளிக்கும் திட்டம்**

- ✶ ரூ.55.00 கோடியில் 41 இலட்சம் கிராமப்புர வளரிளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்கள்.

**பன்முக உயர் சிறப்பு மருத்துவமனை**

- ✶ ரூ.27 கோடியில் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புது தில்லி அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் உள்ள வசதிகளுக்கு இணையான வசதிகள் கொண்ட பன்முக உயர் சிறப்பு மருத்துவமனை. ரூ.76 கோடி செலவில் மருத்துவக் கருவிகள்.

**நடமாடும் மருத்துவமனை**

- ✶ 385 நடமாடும் மருத்துவமனை வாகனங்கள் சகல வசதிகளுடன் செயல்படுத்த ஆணை. இவற்றில், 285 வாகனங்கள் களப்பணியில் ஈடுபாடு. 100 புதிய வாகனங்கள் வாங்க கொள்முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- ✶ ரூ.29.36 கோடி செலவில் 255 வட்டாரங்களில் நடமாடும் மருத்துவமனைகள்.
- ✶ ரூ.55 கோடி செலவில் அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கும் உயிர் காக்கும் மருத்துவக் கருவிகள்.

**உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம்**

- ✶ ரூ. 86.35 கோடி செலவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்களைச் செயல்படுத்த உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம் என்ற புதிய துறை. கிண்டி, சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், பாளையங்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாதிரி உணவுகளை ஆய்வு செய்ய, 6 பகுப்பாய்வுக் கூடங்கள்.

**மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் ஏற்படுத்துதல்**

- ✶ சுகாதாரத்துறைக்கு எனத் தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம்.

**135 நகர்ப்புர சுகாதார மையங்கள்**

- ✶ ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட 60 நகர்புர ஆரம்ப சுகாதார மையங்களை வலுப்படுத்தவும் மேலும் 75 நகர்ப்புர சுகாதார மையங்களை தோற்றுவிக்கவும் ரூ.18.17 கோடி நிதி ஒதுக்கீடு. மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்து நகர்ப்புர சுகாதார மையங்களுக்கு வழங்க ரூ. 1.70 கோடி நிதி ஒதுக்கீடு. பொது சுகாதாரத்துறை இயக்குநர் கட்டுப்பாட்டில் 135 நகர்புர சுகாதார மையங்கள்.

**மண்டலப் புற்றுநோய் மையம் ஏற்படுத்துதல்**

- ✶ மதுரை இராஜாஜி மருத்துவமனையில் மண்டலப் புற்றுநோய் மையம் அமைப்பதற்கு புதிய கட்டடம் கட்ட ரூ. 3.02 கோடி, மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.10 கோடி, கூடுதல் பணியிடங்களுக்கு ரூ.1.24 கோடி என ஆக ரூ. 14.26 கோடி ஒப்பளிப்பு.

- ✶ இதேபோல் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு புற்றுநோய் மையம் ரூ.14.37 கோடி செலவில் அமைத்திட ஆணை.

**திசு வங்கி ஏற்படுத்துதல்**

- ✶ கிண்டி நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (கிங் நிலையம்) தடுப்பூசி உற்பத்தியை மீண்டும் தொடங்கவும், இந்நிலையத்தில் திசு வங்கி அமைக்கவும் ரூ. 9.63 கோடி நிதி.

**சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை ஒரு ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்துதல்**

- ✶ 1953–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை அரசு பல் மருத்துவமனைக்கு ரூ. 13.66 கோடி செலவில் புதிய கட்டடம். நோயாளிகளின் நலன் கருதி, புதிதாகக் கூடுதலாக கட்டடம் கட்டவும், புதிதாக மருத்துவக் கருவிகள் வாங்கவும், மேற்படிப்பு மாணவர் சேர்க்கையினை 35 லிருந்து 58 ஆக உயர்த்தி தேவையான பணியிடங்களை உருவாக்கி ரூ. 10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, சென்னை பல்மருத்துவ மனையை ஒரு ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்தி ஆணை.

**கிராம சுகாதார செவிலியர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்**

- ✶ 9,397 கிராம சுகாதார செவிலியர்கள், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், பிரசவித்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் பற்றிய விவரங்களைக் கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்ய ஏதுவாக ரூ.19.17 கோடியில் அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி.

**பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர் நியமனம்**

- ✶ துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களை ஒருங்கிணைந்த பதவியாக்கி பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர் என வகைப்படுத்தி, தொகுப்பூதியத்தில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நியமனம் செய்ய ஆணை.

**சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு சிறப்பு நிதி ஏற்படுத்துதல்**

- ✶ ரூ. 1.5 இலட்சம் காப்பீட்டுத் தொகைக்கு மேல் செலவாகும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் மருந்துகள், எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சை மற்றும் ஸ்டெம்செல் மாற்று சிகிச்சை ஆகியவற்றிற்காக அரசே முழு உதவித் தொகை வழங்கும் வகையில் ரூ.10 கோடி முதலீட்டில் சிறப்பு நிதி உருவாக்கம். இந்தத் திட்டத்தில் ஏற்கெனவே ஒரு குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட 1.5 இலட்சம் ரூபாயை விட கூடுதலாக நிதி வழங்க வழி வகை.
- ✶ இத் திட்டத்தின் கீழ் காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சைக்கு 67 பயனாளிகளுக்கும், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு 22 பயனாளிகளுக்கும், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு 11 பயனாளிகளுக்கும், ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை போன்மேரோ சிகிச்சைக்கு 1 பயனாளிக்கும் அங்கீகாரம்.

**புதிய மருத்துவக் கல்லூரி**

- ✶ ஆண்டுதோறும் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி என்ற கொள்கையின் அடிப்படையில் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி 100 மாணவர்கள் சேர்க்கையுடன் துவக்கம்.
- ✶ ரூ. 131 கோடி செலவில் திருவண்ணாமலை புதிய மருத்துவக் கல்லூரிக்கு கட்டடங்கள்.

**பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பில் உயர்த்தப்பட்ட இடங்கள்**

- கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பிற்கான இடங்கள் 100–லிருந்து 150 ஆக உயர்வு.
- செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பிற்கான இடங்கள் 50 –லிருந்து 100 ஆக உயர்வு.

**திருச்சி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனையை சிறப்பு சிகிச்சை மையமாக மேம்படுத்துதல்**

- ரூ. 100 கோடி மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம்.
- முதல் கட்டமாக கட்டடம் கட்ட ரூ.53.97 கோடி ஒதுக்கீடு.
- ரூ. 1.03 கோடி செலவில் விபத்து சிகிச்சைப் பிரிவு.

**நவீனமயமாக்கப்பட்ட அறுவை சிகிச்சை அரங்குகள்**

- திருநெல்வேலி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மதுரை, இராஜாஜி மருத்துவமனை ஆகியவற்றில் உள்ள அறுவை சிகிச்சை அரங்கங்கள் தலா ரூ.4 கோடி செலவில் நவீனபடுத்த ரூ.20 கோடி ஒப்பளித்து ஆணை.

**அரசு – தனியார் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உபகரணங்கள்**

- கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, திருவாரூர் மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவமனைகளில் அரசு – தனியார் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் நிறுவுவதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கு அனுமதி.

**அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துதல்**

- ரூ. 4.5 கோடி செலவில், 27 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு ஆப்பரேட்டிங் லேப்ராஸ்கோப்பி கருவி (Operating Laparoscopy) வழங்க ஆணை.
- ரூ. 7 கோடி செலவில், 4 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு சி.டி.ஸ்கேன் கருவிகள்.
- ரூ. 1.30 கோடி செலவில் 30 மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகளில் ரத்தசெல் பகுப்பாய்வு மையங்கள்.
- ரூ. 3.92 கோடி செலவில் ஸ்ரீரங்கம் அரசுப் பொது மருத்துவமனையின் விரிவாக்கப் பணி.
- சிவகாசி அரசு மருத்துவமனையில் தீக்காயப் பிரிவு ரூ. 4.50 கோடி செலவில் மேம்படுத்த ஆணை.
- கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீக்காயப் பிரிவு ரூ. 5 கோடி செலவில் ஒரு ஒப்புயர்வு மையமாகத் தரம் உயர்த்த ஆணை.
- ரூ. 74.85 கோடி செலவில் அரசு மருத்துவமனைகள் மேம்பாடு.

**ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்**

- ரூ.54 கோடி மதிப்பில் மொத்தம் 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்பாடு.
- தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு உயர் மருத்துவ ஆலோசனை கிடைக்கும் வகையில், 5 கோடி ரூபாய் செலவில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் Tele Medicine வசதிகள்.
- 42 ஆரம்ப சுகாதார மையங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் தாய் சேய் நல மையங்கள் அமைத்திட ரூ. 19.45 கோடி ஒப்பளிப்பு.
- நான்காம் நிலை யானைக்கால் நோயாளர்களுக்கு மாதாந்திர உதவியாக ரூ.400/–.

**புதிய ஆரம்ப சுகாதாரநிலையங்கள் தோற்றுவித்தல்**

- ✶ ரூ.28 கோடி மதிப்பில் 47 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கம்.
- ✶ ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஜெயராமபுரத்திலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளிமேடுபேட்டையில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம்.
- ✶ தேசிய ஊரக நலத்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை முதலியவற்றில் உள்கட்டமைப்பு மற்றும் சிறு பணிகள் மேற்கொள்ள ரூ.19.31 கோடி ஒப்பளிப்பு.
- ✶ 30 மாவட்டங்களில் ரூ.6.37 கோடி செலவில் பொது சுகாதாரத் துறை ஆய்வகங்கள்.
- ✶ ரூ. 1.14 கோடி செலவில் ஸ்ரீரங்கம் தொகுதியில் மூன்று புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்.
- ✶ ரூ.21 கோடி செலவில் மருத்துவமனை பாதுகாப்பிற்கு புற ஆதார முறையில் 2,176 காவல் பணியாளர் பதவிகள் உருவாக்கம்.
- ✶ அவசரகால மருத்துவ ஊர்திகள் மூலமாக 1.60 இலட்சம் தாய்மார்கள், 15,420 பச்சிளம் குழந்தைகள் உட்பட 6.40 இலட்சம் பேர் பயன்.

**பல் மருத்துவம்**

- ✶ 118 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 7 அரசு மருத்துவமனைகளிலும் பல் மருத்துவ சேவை.

**இந்திய மருத்துவம்**

- ✶ 60 வயதிற்கு மேற்பட்ட பதிவு பெற்ற பரம்பரை சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்களின் மாத ஓய்வூதியம் ரூ. 1,000/– ஆக உயர்வு.
- ✶ பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் ரூ.5 கோடி செலவில் உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஆணை.
- ✶ கன்னியாகுமரி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் ரூ.5 கோடி செலவில் உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஆணை.
- ✶ 108 அவசர ஊர்தித் திட்டத்தின் கீழ் 606 வாகனங்கள் இயக்கம்; 5,71,406 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- ✶ சிசு மரண விகிதத்தைக் குறைப்பதற்காக அவசர கால சிசு பராமரிப்பு சேவை துவக்கம்.
- ✶ 20 அவசர கால ஊர்திகள் மலைப்பகுதிகளில் இயக்கம்.

**எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன்**

- ✶ உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2,663 எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்) விவசாயிகள் பயன்.

**2013–2014ஆம் ஆண்டுத் திட்டங்கள்**

வரவு செலவு திட்டத்தில் ரூ.6,511.76 கோடி நிதி ஒதுக்கீடு. 67 சதவிகிதம் ஒதுக்கீடு உயர்வு.

ரூ.30 கோடி செலவில் தஞ்சை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள்.

இந்திய மருத்துவத் துறைக்கு ரூ.169.13 கோடி ஒதுக்கீடு

✶ ✶ ✶

# தமிழரசு

R.NI. No. 21446/70 Regn No. TN/ARD/48/12-14
& WPP No. TN/PMG (CCR) 518/12-14

